

# தேன் சிந்துதே வானம்

லட்சுமி பிரபா



தேன் சிந்துதே வானம்

பிரபா

## உள்ளே...


1. தேன் சிந்துதே வானம் 5
2. நீல விழிகள் 149
3. கண்ணிலே அன்பிருந்தால்... 254


# தேன் சிந்துதே வானம்

## 1

மகிழ மரமும், பவள மல்லி மரமும் தரையில் விரித்து விட்டிருந்த பூப்பாவாடைகளில் பார்வையைப் பதித்தாள் பவித்ரா.

எதிர்ப்புற ஜன்னல் ஓரம் வளர்ந்து பூத்துக் குலுங்கிய நைட் குவீனின் மணம்... மெல்லக் காற்றில் தவழ்ந்து வந்து இதமாக முகத்தை ஸ்பரிசித்தது. தோட்டத்தைத் தாண்டி வாசலை நோக்கி நடந்தாள்.

இருட்டு மை போல் கப்பிக் கிடந்தது. செங்காவி இட்டு அழகான மனைக் கோலத்தை வாசலில் போட்டு விட்டு நிமிர்ந்தாள்.

தென்னை மரங்கள் விடாமல் சாமரம் வீசிக் கொண்டிருந்த போதிலும்... இனமறியாத இறுக்கத்தில் தவித்துப் போனாள்.

தோட்டத்தைத் தாண்டி வீட்டிற்குள் புகுந்து கனத்த இதயத்துடன் இவள் குளித்து உடை மாற்றி முடிவுக்கும் போது... இருள் முற்றிலும் விடைபெற்றுப் போய் விடியல் எட்டிப் பார்த்திருந்தது.

பாலைக் காய்ச்சி இறக்கி... சுக்கு, மிளகு, சித்தரத்தை யுடன் பனை வெல்லத்தைத் தட்டிப் போட்டு சுக்குக் காபி தயாரித்து முடித்த தருணத்தில்... மெல்ல இரு மியபடியே அம்மா கோமதி அடுக்களைக்குள் புகுந்தாள்.

அம்மா கோமதி ஆஸ்துமா வியாதிக்காரி. 'கர்கர்' என்று மூச்சிரைப்பும், இருமலும் சதா அவளுக்குப் பக்கவாத் தியம் வாசித்துக் கொண்டிருக்கும்.

''காபி போட்டாச்சா?''

''ம்... இந்தாங்க'' கை பொறுக்கும் சூட்டில் ஆற்றிக் கொடுத்து விட்டு, பரிதாபமாய் அம்மாவை ஏறிட்டாள்.

''இருமல் மருந்தை இன்னிக்காச்சும் வாங்கிடணும் அம்மா! பாவம்... நைட்டெல்லாம் தூங்க முடியாம ரொம்ப இருமிட்டே இருந்தீங்க.''

''ஹூம்! பற்றாக்குறை பட்ஜெட் வாழ்க்கை... மாசத் துல பாதி நாளுக்கு மேல நமக்கு 'வரக் காபி' தானே கிடைக்குது? பால் பாக்கெட்டை முப்பது நாளுக்கும் தொடர்ச்சியா... நம்மால வாங்க முடியாதே?

''உங்கப்பா சமையல்காரர் தான்... 'நள பாகத்துல' சுத்து வட்டாரத்துல அவரை யாருமே மிஞ்ச முடி யாதுன்னு ஒரு பேர் இருந்துச்சு... கல்யாணமா? நிச்சய தார்த்தமா? வீட்டுல எந்த விசேஷம் நடந்தாலும் சரி... ஒரு காலத்துல உங்கப்பாவைத் தான் கூப்பிடு வாங்க...



''வருமானத்துக்கு தட்டுப்பாடு இல்லாம செழிப்பா குடும்ப நடத்த முடிஞ்சது. ஆனா காலம் மாற மாற... எல்லாமே குறைஞ்சுகிட்டு வந்துடுச்சே?

''பெரிய பெரிய ஹோட்டல் நடத்தறவங்களே... இப்ப கேட்டரிங் சர்வீஸையும் சைடுல ஆரம்பிச்சிட்டதால... உங்கப்பா மாதிரி சமையல்காரர்களோட நிலைமை ரொம்ப மோசமாப் போயிடுச்சு.

''மாசத்துல பாதி நாட்களுக்கு மேல பற்றாக்குறை பட்ஜெட்டா போயிடுச்சு. உங்கப்பா நளபாகத்துக்கு ரொம்பவே பேர் போனவர் அதனாலதான் ஏதோ குடும்பச் சக்கரம் இந்த மட்டுமாவது சுத்திக்கிட்டு இருக்கு.

''ஏதோ நாங்க வாங்கி வந்த வரம்... மூத்தவ நீ பொண்ணாப் பொறந்தே... ஆஸ்தி அந்தஸ்து எதுவுமில் லாமப் போனாலும் கடைசி காலத்துல கொள்ளி போடற துக்காகவாவது... ஒரு பிள்ளை அடுத்துப் பொறக்கட்டு மேன்னு நப்பாசைப் பட்டோம்.

''வேண்டாத தெய்வமில்ல... கடவுள் செவி சாய்க்கத் தான் செஞ்சார்... புள்ளையோட சேர்த்துப் போனஸா இன்னொரு பெண் குழந்தையையும் குடுத்துத் தொலைச் சுட்டாரே?

''மூணு பசங்களுக்கும் மூணு வேளைக்கும் வயிறார சாப்பாடு போட்டா கடமை முடிஞ்சுடுமா என்ன? அதுகளை நல்லபடியாகப் படிச்சு வைச்சு ஆளாக்கி கரையேத்த வேணாமா?

''மூத்தவ நீ... கஷ்ட நஷ்டத்தை உணர்ந்து படிச்சு டிகிரி முடிச்சே... ஆனா படிச்சு முடிச்சதும் சட்டுன்னு

நல்ல வேலையில உட்கார்ந்து சம்பாதிக்கிற சாமர்த்தியம் இல்லையே?

''பரிமளா உங்கூடவே படிச்சவ தானே? ஸ்கூல், காலேஜுல சேர்ந்தே தானே படிச்சீங்க... இத்தனைக்கும் படிப்புலே அவ சுமார் ரகம் தான்...

''படிப்பு முடிச்சதுமே அவளுக்கு சட்டுன்னு வேலை கிடைச்சுடுச்சே? இத்தனைக்கும் கூடுதல் தகுதியா இருக்கட்டுமேன்னு சாயந்தரத்துல கம்ப்யூட்டர் கிளாசுக்கு வேற போயி... சில கோர்ஸ்களை முடிச்சு வச்சே...

''வனஜாவும் உன் செட் தானே? அவளுக்கு ரெண்டு மாசம் முந்தி வேலை கிடைச்சுடுத்தாம்...

''புது ஸ்கூட்டி ஒண்ணை லோன் போட்டு வாங்கி... ஜம்முனு அதுலே தினமும் வேலைக்குப் போறாளாம்... நேத்தைக்கி அவளோட அம்மாவைக் கோவில்லே பாத்தப்போ... இதைச் சொன்னா...

''இத்தனைக்கும் வனஜா திக்கித் திணறி பாஸ் மார்க் எடுக்கிறவள்தானே? கிளாசுலே முதல் மார்க் வாங்குற நம்ம பொண்ணுக்கு இன்னும் வேலை கிடைக்கலையேன்னு... வருத்தமா இருந்துச்சு.

''இன்னும் சொல்லப் போனா... உன் மேல கோபம் பத்திக்கிட்டு வந்துச்சு... இந்தக் காலத்துல தகுதி இருந்தா மட்டும் போதாது பவித்ரா! கூடவே சாமர்த்தியமும் வேணும்.

''பேப்பர்ல விளம்பரத்தைப் பார்த்துட்டு நீயும் சில ஆபீசுகளுக்கு இண்டர்வியூவுக்கு அக்கறையாப் போகத் தான் செய்றே...



''இந்த வேலை கண்டிப்பா கிடைச்சுடும்னு நாம்ப எதிர்பார்க்கலாமா?ன்னு நான் கேட்டா... நீ திருதிருன்னு முழிக்கிறே... சமயத்துல மிடறு விழுங்கறே.

''என்னால முடிஞ்ச மட்டும் நல்லபடியா தான் பதில் சொல்லிட்டு வந்திருக்கேன். பார்க்கலாம். எதிர்பார்ப்பு எதிலேயும் வச்சுக்காம இருக்கிறது தானே நல்லது? ஏமாற்றம் ஆயிட்டா... மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்குமே அம்மா!ன்னு வியாக்கியானம் பேசிடறே... சாயந்தரத்துல பத்து பசங்களுக்கு நீ டியூஷன் எடுக்கிறே. நான் இல்லேங்கல...

''விக்கிற விலைவாசியில ஒரு நாளைக் கடத்தறதே... பெரிய யுகத்தைக் கடக்கிற மாதிரி இருக்கு... கண்ணு முழி பிதுங்குதே...

''இந்த லட்சணத்துல இருமல் மருந்து தீர்ந்து போச்சேன்னு நான் வருத்தப்பட முடியுமா சொல்லு?''

பவித்ரா வழக்கம் போல் எதிர்த்து வாயாடாமல்... தலை குனிந்தபடி அமைதி காத்தாள்.

அப்பா பசுபதி, அன்று விடிவதற்கு முன்பே ஏதோ வேலை நிமித்தமாக வெளியில் கிளம்பி விட்டிருந்தார்.

அவர் வீட்டில் இருந்திருந்தால்... மகள் பவித்ராவுக்காகப் பரிந்து கொண்டு பேசி மனைவியை அதட்டி வைத்து விடுவார்.

''என்ன பேசறே நீ? டிகிரி முடிச்சு கம்ப்யூட்டர் கோர்ஸும் கத்து வச்சுக்கிட்டு விளம்பரங்களில் வர்ற இடங்களுக்கெல்லாம் எட்டு மாசமா அவ அலைஞ்சுட்டுத் தானே இருக்கா?

''வேலை என்ன கொல்லையிலா காய்ச்சுத் தொங்குது? போய் லபக்குன்னு பறிச்சுட்டு வர்றதுக்கு? பாவம்... அவ என்ன செய்வா? அதுக்கு காலம் நேரம் வர வேணாமா?

''சும்மா பஞ்சப் பாட்டையே பாடாதே கோமதி! கடவுள் புண்ணியத்துல ஏதோ இந்த மட்டுமாவது இருக்கோமேன்னு நெனச்சு ஆறுதல் பட்டுக்கணும்.

''அந்தக் காலத்துல கொஞ்சம் செழிப்பா இருக்கிறப்போ... துணிஞ்சு இந்த வீட்டை வாங்கிப் போட்டது நல்லதாப் போச்சு.

''கூழோ கஞ்சியோ குடிச்சாலும் சொந்த வீட்டுலே நிம்மதியா இருக்கோம். சொந்தமா இதுகூட இல்லைன்னா... மாசா மாசம் வாடகைக்கு முள்ளங்கிப் பத்தையா பணத்தை ரெடி பண்றதுக்குள்ளே... முழி பிதுங்கிப் போயிட வேண்டியதுதான்!

''இருக்கிறதை நெனச்சு சந்தோஷப்படு... சதா குழந்தையைக் கரிச்சுக் கொட்டாதே... அவ இந்தக் காலத்துப் பொண்ணுங்க மாதிரியா இருக்கா?

''வயசுக்கு மீறின பொறுப்புணர்ச்சியோட நடந்துக்கிறவ... உனக்கு உடம்புக்கு முடியலைன்னு சகலத்தையும் அவதானே இழுத்துப் போட்டுச் செய்றா...

''பத்து பசங்களுக்கு மேல ட்யூஷன் எடுத்துட்டு இருக்காளே? இவ பொறுப்பா பதவிசா நடந்துக்கிடறதைப் பார்த்து... அக்காவை மாதிரி நாமளும் நல்ல பேர் எடுக்கணும்னு... அபிநயாவும், அபிஷேக்கும் அக்கறையா கவனமா படிச்சுட்டு இருக்காங்களே?



''ஆயிரம் கஷ்டங்கள் நமக்கு இருக்கலாம். சதா அதையே நெனச்சுப் புலம்பி குழந்தையோட மனசை நோகடிக்காதே...

''மரத்தை வச்சவன் தண்ணி ஊத்துவான்' கோமதி! அதனால பகவான் மேல பாரத்தைப் போட்டு நட... எல்லாம் நல்லபடியாக நடக்கும்.''

குரலைச் சற்றும் உயர்த்தாமல் சாந்தமாகப் பேசியே மனைவியின் வாயை அடைத்து விடுவார் பசுபதி.

அவருக்கு மூத்த மகள் பவித்ரா மீது அலாதிப் பிரியம்!

''தங்கச் சிலை போல மூக்கும் முழியுமா சுறுசுறுப்பா அவ வளைய வர்றதைப் பார்த்தா... அப்படியே என் தங்கை தேவகியைப் பார்த்த மாதிரி இருக்கு... குழந்தை குணத்துலேயும் சாயல்லேயும் அப்படியே எங்கம்மாவையும் தங்கையையும் கொண்டு பிறந்துட்டா...'' என்று பெருமிதமாய் அவர் சொன்னால் போதும்!

கோமதி வெகுவாய் வெகுண்டு போய் விடுவாள்.

''ஆமா... எங்க குணத்துல என்ன குறைச்சலைக் கண்டுகிட்டீங்களாம்? பெத்தவ நான்... அவகிட்டே உரிமையா என் ஆதங்கத்தைக் கொட்டினா தப்பா?

''வரிஞ்சுகட்டிக்கிட்டுப் பரிஞ்சு பேச ஓடி வந்துட்டீங்களே? ஹூம்!'' முணுமுணுத்தபடியே நகர்ந்து விடுவாள் கோமதி.

அம்மா கோமதி இப்படித்தான்... அடிக்கடி கோபத்தில் கண்டபடி கத்தி விடுவாள். அப்பா வந்ததும் அதைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவே மாட்டாள் பவித்ரா.

''பாவம் அம்மா! இயலாமையால் அடிக்கடி எரிந்து விழுகிறாள். சதா கவலைப்பட்டு நோயை வேறு இழுத்துக் கொண்டாள். சதா இருமி இருமி அரை உயிராய் போய் விட்டாளே?'' உள்ளூர பச்சாதாபம் சுரக்க மௌனமாகவே இருந்து விடுவாள் பவித்ரா.

''அம்மா சொல்வதிலும் நியாயம் இருக்கின்றதே? ஒரு நல்ல வேலை கிடைப்பது அத்தனை சுலபமான காரியமல்லவே?

பத்திரிகையில் விளம்பரங்கள் வருகின்றன. நேர்முகத் தேர்வுக்குப் போனால்... பலத்த சிபாரிசு உள்ளவர் களுக்குத் தானே வேலை கிடைக்கிறது?

இதை அம்மாவிடம் எடுத்துச் சொன்னால்... அம்மா வுக்கு புரியப் போவதில்லை...'

நேர்முகத் தேர்வில் சில அலுவலர்கள் சல்லித்தன மாய் ஏற இறங்கப் பார்வையால் அளவெடுத்தனர்.

அந்தப் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்டு அவள் பதிலுக்குக் கூட காத்திராமல் வெளியேறிய சங்கதியை அவள் அம்மாவிடம் மூச்சு விடவே இல்லை.

'நேர்மையாக ஒழுக்கமுடையவளாக அடக்க ஒடுக்க மாக வாழ வேண்டும்' என்று சொல்லிச் சொல்லி வளர்க்கப்பட்டவள் பவித்ரா.

அவளுக்கு வேலைக்குச் சென்று சம்பாதிக்க வேண் டும் என்று கட்டுக் கொள்ளாத ஆவல்!

அவள் மனதிற்குப் பிடித்ததொரு இடத்தில் தான் இன்னமும் வேலை கிடைக்கவில்லை.

அம்மா அடிக்கடி புலம்புவதைக் கேட்டு... பவித்ரா வுக்கும் எதிர் காலத்தைப் பற்றிய பயம் ஜனித்து அவளது இதயத்தை இரும்பு குண்டாய் கனக்க வைத்தது.



சமீப காலமாய் அம்மாவின் புலம்பல் அதிகரித்து விட்டிருந்தது நிஜம்!

''உனக்கு வேலை கிடைச்சு சம்பாதிக்கத் தொடங் கிட்டா... குடும்பக் கஷ்டம் கொஞ்சம் தீரும் தான்!

''ஆனா அது கூட தற்காலிகத்துக்குத் தானே?

''எத்தனை நாளைக்கு அப்படியே காலத்தை ஓட்ட முடியும்? குடும்பக் கஷ்டம் தீர்ந்தா போதும்னு நாங்க நிம்மதியா இருக்க முடியுமா பவித்ரா?

''உன்னைக் காலா காலத்துல 'கரையேத்த' வேணாமா? சீர் செனத்தி செஞ்சு நகை நட்டு போட்டு உன்னை நல்ல இடத்துல கட்டிக் கொடுக்கணுமே?

''எப்படிப் பார்த்தாலும் இந்த வீட்டை வித்துத்தான் ஆகணும் போலிருக்கே?

''எங்க கடமையை நாங்க செய்து தானே ஆகணும்? அதுக்கு அப்புறம்? அபிஷேக்கும், அபிநயாவும் இப்பத் தான் காலேஜுல அடியெடுத்து வச்சிருக்காங்க...

''அவங்க நல்லபடியா படிச்சு முடிக்கணும். அவங்க படிப்புச் செலவையும் சமாளிக்கணும். மாசம் பொறந்த துன்னா... வாடகைப் பணத்தை வேற திரட்டி வைக் கணும்.

''எப்படி சமாளிக்கப் போறோமோன்னு தெரியல...'' என்று அம்மா கண் கலங்கினாள்.

''அ... அம்மா! என் கல்யாணததுக்கு என்ன அவசரம்? தம்பி தங்கச்சி படிப்பு முடிச்சுட்டு நல்ல நிலைமைக்கு வர்றவரைக்கும் நான் இப்படியே இருந்துடறேனே?

''எப்படியும் எனக்கு சீக்கிரம் வேலை கிடைச்சுடும் அம்மா! கல்யாணப் பேச்சை எடுத்தாத்தானே... வீட்டை விக்க வேண்டி வரும்?''

''இல்ல பவி! நாங்க அப்படி இருக்க முடியாதும்மா... எனக்கும் தள்ளலை... உங்கப்பாவைப் பார்த்தியா? வயசுக்கு மேல ரொம்பவே தளர்ந்து போயிட்டாரு.'

''நாங்க ரெண்டு பேரும் நல்லா இருக்கும் போதே... உன்னைக் கன்னியா தானம் செஞ்சு குடுத்துடணும்னு பிரியப்படறோம். அதுக்கு அப்புறம் விதி விட்ட வழி...''

அம்மா கூறியதைக் கேட்டதிலிருந்து பவித்ராவை கவலை ஆக்கிரமிக்கத் தொடங்கி விட்டிருந்தது.

சென்னையை அடுத்த குன்றத்தூரில் கோவிலுக்கு அருகாமையில் பச்சைப் பசேலென்ற மலைச் சூழலில் அமைந்திருந்தது அவர்களது வீடு!

வீட்டைச் சுற்றிலும் பூச்செடிகளும், மா, நெல்லி, கறிவேப்பிலை, எலுமிச்சை, நார்த்தங்காய் மரங்களும், மகிழ மரம், பவள மல்லி, பன்னீர் பூக்கள் என்று பூஜைக்கேற்ற பூக்களைப் புஷ்பிக்கும் மரங்களும், கீரைப் பாத்திகளும்... காண்போரைக் கொக்கி போட்டு ஈர்க்கத்தான் செய்யும்.

பவித்ரா கிணற்றிலிருந்து நீரை இறைத்து கீரைப் பாத்திகளுக்கு பூவாளியால் நீரை வார்க்கும் போதெல் லாம்... அப்பா பசுபதி வீட்டுத் திண்ணைக்கு அருகிலுள்ள தூணோரம் அமர்ந்து தூரத்தில் தெரியும் மலைக்கோவில் கோபுரத்தையே பார்த்தபடி அமர்ந்திருப்பார்.

கோவில் மணியோசை 'டண் டண்' என்று ஒலிக்கும் போதெல்லாம் கைகளை உயரே தூக்கி விழிகளை மூடி



'எம்பெருமானே முருகா' என்று மனமுருகப் பிரார்த்திப் பார்.

''கோபுர தரிசனம் கோடிப் புண்ணியம்னு சொல் வாங்க... இந்த மாதிரி வீடு கிடைக்கிறதுக்கு நாம்ப கொடுத்து வச்சிருக்கணும் பவி!

''கடைசி காலத்துல கோவில் மணியோசையைக் கேட்டுக்கிட்டு இந்த மலைக்கோவில் முருகனை மனசுல சேவிச்சுக்கிட்டு அப்படியே என் உசுரு பிரியணும்னு நான் ஆசைப்படறேன் பவி!

''தாய் மடியிலே தலை சாய்ச்சுப் படுத்தா... எப்படி நிம்மதியா இருக்குமோ... அதே நிம்மதி எனக்கு இந்த வீட்டுல கிடைக்குதுடா... கடைசி வரைக்கும் இந்த நிம்மதி நீடிக்குமான்னு தெரியல...'' என்று அடிக்கடி பசுபதி மகளிடம் கூறியிருக்கிறார்.

''இந்த வீட்டின் மேல் அப்பா அலாதியான பற்று வைத்திருக்கிறாரே?

''இதை விற்று விட்டு குடும்பத்துடன் வெளியேற வேண்டிய நிலைமை வந்தால்... அவர் தாங்குவாரா?

''இந்த வீட்டுத் திண்ணையில் அமர்ந்து 'என் இறுதி மூச்சு இங்க தான் பிரியணும் பவி' என்று அடிக்கடி சொல்வாரே?

''அப்பா இந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளவே மாட்டார். எனக்காக... என்னைக் கரையேற்ற வேண்டும் என்ற கடமையில் வீட்டை விற்கத் துணிந்திருக்கிறார்.

''ஆனால் வீட்டை காலி செய்து வேறொரு வீட்டை வாடகைக்குப் பிடித்துக் குடிபோகும் சக்தி... அப்பாவுக்கு இருக்குமா?

''எனக்கு அப்பாவைப் பற்றி நன்றாகத் தெரியும். இந்தக் குடும்பம் பெயர்ந்து வேறொரு வீட்டிற்குச் செல்லும் சமயம்... அப்பாவின் உயிர் அவரது உடலை விட்டே பிரிந்து விடுமே?

இதற்கு என்னதான் தீர்வு?

பவுர்ணமி நிலவைப் போன்ற அழகான முகத்தில் சோக மேகங்கள் சூழ்ந்து கொண்டன.

தன் குடும்பத்தின் நிலைமையை எண்ணி மிகவும் வேதனைப்பட்டாள் பவித்ரா.

விதி சிரித்தது! அவளுக்கும் அந்தக் குடும்பத்திற்கு மான தொடர்பை முற்றிலும் துண்டித்துவிட தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

## 2

மணத்தக்காளி வத்தக் குழம்பு கொதித்துக் கொண் டிருந்தது.

''அபி! இங்க வாயேன்'' அடுக்களைக்குள் இருந்த படியே குரல் கொடுத்தாள் பவித்ரா.

''வாவ்! வத்தக்குழம்பு வாசனை மூக்கைத் துளைக் குது. நாக்குல ஜலம் ஊறுது... தொட்டுக்க என்ன செய் திருக்கே அக்கா? பருப்பு உசிலிதானே?'' கேட்டபடி உள்ளே நுழைந்து,

அக்காவின் புஜத்தில் கை போட்டாள் அபிநயா.



''சாரி அபி! பருப்பு தீர்ந்து போச்சு... தொட்டுக்க வெறும் சுட்ட அப்பளம் மட்டும்தான்... வர்ற சன்டே உனக்குப் பிடிச்சதா செய்து போடறேன். அதுக்குள்ளே பணம் வந்துடும்னு நெனக்கிறேன்.

''ட்யூஷன் பணம் வந்திருக்கு! கம்ப்யூட்டர் கிளாசுக்குப் பணம் கட்டணும்னு சொன்னியே? பணத்தை அதோ... அந்த அஞ்சறைப் பெட்டியில வச்சிருக்கேன். எடுத் துக்கோ அபி!

''உனக்கும் தம்பிக்கும் சேர்த்து ஃபீஸ் கட்டிடு சரியா?'' வத்தக் குழம்பில் பெருங்காயப் பவுடரைத் தூவி விட்டு அடுப்பை அணைத்தாள்.

''அக்கா! மொத்தப் பணத்தையும் எடுத்துக்கவா வீட்டுச் செலவுக்கு? அம்மாவுக்கு மருந்து வாங்கணும்னு சொல்லிட்டு இருந்தியே?''

''முதல்லே போய் சாப்பிடு! உங்களுக்கு டிபன் பாக்ஸ்லே சாப்பாடு கட்டிக் கொடுத்துடறேன்... நீங்க ரெண்டு பேரும் காலேஜுக்குக் கிளம்பிப் போனதும்... நான் மருந்துக் கடைக்குப் போய் மருந்து வாங்கிட்டு வந்துடுவேன்.''

''மருந்து வாங்க காசு ஏது அக்கா?'' அபிநயா துளைத் தெடுத்தாள்.

''நம்ம தோட்டத்து எலுமிச்சை மரத்துல இந்த வாட்டி நிறைய காய் காய்ச்சிருக்கு. வழக்கம் போல... வீட்டுக்கு ஊறுகாய் போடறதுக்கு தேவையானதை மட்டும் எடுத்து வச்சுக்கிட்டு... மீந்ததை பக்கத்து காய்கறி கடைக்காரர் கிட்ட விலைக்குப் பேசிட்டேன்.

''ஆள் வச்சு காய்களைப் பறிச்சுக்கிட்டு பைசா கொடுத் துட்டுப் போனாரு...

''மருந்து வாங்கவும் வீட்டுச் செலவுக்கும் பணம் இருக்கு. அதனால குடும்பத்தைப் பத்திக் கவலைப் படாம... படிப்புலே 'கான்சென்ட்ரேட்' பண்ணு... மத்ததை எல்லாம் நாங்க பார்த்துப்போம். சரியா?

''இன்னிக்கு நைட்டுக்கு உனக்குப் பிடிச்ச லெமன் ரைஸும், வெங்காயச் சட்னியும் செய்துடறேன். ஓ.கே.வா?''

''சரி அக்கா.''

அபிநயாவும் சரி! அபிஷேக்கும் சரி! அக்கா பவித்ரா கிழித்த கோட்டைத் தாண்டவே மாட்டார்கள்.

அக்காவின் மேல் அன்பு கலந்த மரியாதை வைத் திருப்பவர்கள். பவித்ராவும் அவர்களின் மீது உயிரையே வைத்திருந்தாள் என்பது நிஜம்!

தம்பி, தங்கைக்குப் பரிமாறி அவர்கள் ருசித்துச் சாப்பிடுவதை மனநிறைவோடு பார்த்துக் கொண்டே... சாப்பாட்டை டிபன் பாக்ஸ்களில் கட்டி முடித்து அவர் களை வழியனுப்பி வைத்தாள்.

அம்மா கோமதி பூஜையறையில் அமர்ந்து விஷ்ணு சகஸ்ரநாமத்தை முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா! உனக்கு மருந்து வாங்கிட்டு வந்துட றேன்...'' கூறிவிட்டு பதிலுக்குக் காத்திராமல் விடு விடென்று நடந்து தோட்டத்தைக் கடந்து மரக் கதவைத் திறந்து கொண்டு வெளியேறினாள்.

தெருவைக் கடந்து பிரதான சாலைக்கு வந்து மருந்துக் கடையில் இருமல் மருந்தை வாங்கிக் கொண்டு... ஓட்டமும் நடையுமாக விரைந்தாள்.

''பவி! பவி! கொஞ்சம் நில்லும்மா...'' அப்பா பசுபதி யின் குரல் பின்னால் ஒலித்ததும் சட்டென்று நின்று திரும்பிப் பார்த்தாள்.



''என்னப்பா? வேலை விஷயமா வெளியில கிளம் பினா... நீங்க வீடு திரும்பறதுக்கு ராத்திரி ஆயிடுமே? சீக்கிரமா திரும்பிட்டீங்க?''

''இன்னிக்கு சமையல் வேலை ஒண்ணும் கிடைக் கலைம்மா... நாளைக்கு ஒரு வீட்டுலே நிச்சயதார்த்த மாம்... மளிகை சாமான்கள் எவ்வளவு தேவைப்படும்னு பட்டியல் போட்டுக் குடுத்துட்டு வர்றேன்.

''இந்த வேலைக்கு நான் போறதா இல்ல... என்னோட உதவியாள் கோபுவை அனுப்பி வைக்கிறேன்னு சொல் லிட்டு வந்துட்டேன்.''

''எதுக்குப்பா?... கோபு மாமாவை அனுப்பறீங்க? நமக்கு வேலை அமையறதே குதிரைக் கொம்பா இருக்குன்னு புலம்புவீங்களே? இப்போ கிடைச்ச வேலையை உத றிட்டீங்களேப்பா...

''உங்க உடம்புக்கு ஏதாச்சும்?...'' மேற்கொண்டு பேச முடியாமல் வாத்சல்யத்துடன் அப்பாவின் கரத்தைப் பற்றிக் கொண்டாள் பவித்ரா.

''சேச்சே... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லைம்மா... வீட்டுல மளிகை சாமான் துடைச்சு வச்ச மாதிரி தீர்ந்து போச்சுன்னு எனக்குத் தெரியாதா?

''கிடைச்ச சமையல் வேலையை நழுவ விடுவேனா? ஊருல இருந்து உங்கத்தை தேவகி என் செல்லுக்கு போன் பண்ணினா...

''அவ பேசினதைக் கேட்டதும் எனக்கு இருப்பே கொள்ளலை... இன்னிக்கு சாயந்தரமே நாம்ப வீரபாண் டிக்குக் கிளம்பியாகணும். அதான் கோபுவை ஒப்புக்கச் சொல்லிட்டு வந்திருக்கேன்...''

''நாம்ப வீரபாண்டிக்குப் போகப் போறோமா? குடும்பத்தோட போகப் போறோமா அப்பா? தேவகி அத்தையும் குருமூர்த்தி மாமாவும் சவுக்கியம் தானேப்பா?'' கவலையுடன் ஏறிட்டாள்.

''மாப்பிள்ளை குருமூர்த்திக்கு அடிக்கடி நெஞ்சு வலி வருதாம்... வீட்டு வாசலை விட்டு இறங்காம... வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கிறாராம்...

''தங்கை தேவகிக்கு கவலையிலேயே சுகரும், பி.பி.யும் எகிறிப் போகுதாம்... பணங்காசுக்குக் குறைவில்லாத வாழ்க்கைதான்!

''ஆனா என்ன பிரயோஜனம்? பொண்ணையும் மருமகனையும் ஒரு சேர வாரிக் கொடுத்த சோகம்... அவங்களை ரொம்பவே ஆட்டிப் படைக்குது பவி!

''சம்பளத்துக்கு வீட்டு வேலை செய்ய வர்றவங்க... ஒப்புக்கு கடமைக்கு ஏனோ தானோன்னு வந்துட்டுப் போயிடறாங்க...

''கொஞ்ச காலத்துக்கு எங்களை கவனிக்க நம்ம பவியை அனுப்பி வைக்கிறியா அண்ணா?ன்னு தேவகி அழுதுகிட்டே என்கிட்டே கேட்டா...

''நம்ம பவியும் இறந்துபோன என் மக வசுந்தராவும் ஒரே ஜாடையில இருப்பாங்களே? நம்ம பவியைப் பார்த்தா எங்க வசுவைப் பார்த்த மாதிரி இருக்கும்...

''எங்களுக்கும் கொஞ்சம் ஆறுதலா இருக்கும். பவிக்கு இவ்ளோ தூரம் தனியா வந்து பழக்கமிருக்காது.

''சிரமம் பார்க்காம அவளுக்குத் துணையா நீ ஒரு நடை வந்துட்டுப் போயேன் அண்ணா! உன்னைப் பார்த்தா மனசுக்கு கொஞ்சம் இதமா இருக்கும்.



''என்ன அண்ணா தயங்கறே? மூத்தப் பொண்ணு பவித்ரா மேல நீ உயிரையே வச்சிருக்கேன்னு எனக்குத் தெரியும். அவளைப் பிரிஞ்சு இருக்கணும்னா உனக்கு சங்கடமாத்தான் இருக்கும்.

''கொஞ்ச நாளைக்குத் தானே? அதுவும் தவிர... பொண்ணாப் பொறந்தா எத்தனை காலத்துக்கு பெத்தவங்க கிட்டேயே இருக்க முடியும்?

''அவளைக் கட்டிக் கொடுத்தா... நீ அவளைப் பிரிஞ்சு தானே ஆகணும்? அது மாதிரி நெனச்சுக்கோ...

''இங்க உள்ளூர்லேயே அவரோட சொந்தக்காரங்க நிறைய பேர் இருக்கத்தான் செய்றாங்க... அவங்க கிட்ட நான் இந்த உதவியைக் கேட்டிருக்க முடியும்...

''எனக்கும் அவருக்கும் அதுல இஷ்டம் இல்ல... எங்க வசு ஜாடையில இருக்கிற பவித்ரா தான் எங்களை கவனிச்சுக்கணும்.

''அவ ரூபத்துல வசு வளைய வர்றதா நெனச்சு நாங்க ஆறுதலடையணும்னு ஆசைப்படறேன்.

''அண்ணி, பவியை அனுப்பி வைக்கச் சம்மதிப்பாங்களா அண்ணா? அவங்க மறுப்பு தெரிவிச்சா... நீ மேற்கொண்டு அவங்களை வற்புறுத்த வேணாம்.

''அவங்க முழு மனசோட சம்மதிச்சா... பவியைக் கொண்டு வந்து விட்டுட்டுப் போ!

''உன் முடிவைச் சீக்கிரமா எங்களுக்குத் தெரிவிச்சுட்டா நல்லா இருக்கும்னு... தேவகி அழுதுகிட்டே என்கிட்டே பேசினா பவி!

''நான் சட்டுன்னு... 'இதோ இன்னிக்கே சாயந்தரத்துல பஸ் பிடிச்சு வந்து சேர்ந்துடறோம்னு சொல்லிட்டேன். அண்ணியைப் பத்தி நீ ஏன் விசனப் படறே தேவகி?

''அவ கொஞ்சம் புலம்புவா... அவ்வளவுதான்! இருந்தாலும் என் வார்த்தையை என்னிக்கும் மீறவே மாட்டா... பவியை எத்தன நாளைக்கு வேணும்னாலும் உன் உதவிக்கு வச்சுக்கோன்னு நான் சொல்லிட்டேன்...

''என் தங்கை தேவகி மேல இருக்கிற பாசத்துல... ஒரு வேகத்துல உன் கிட்ட... உன் சம்மதத்தைக் கூடக் கேட்காம... நான் அவளுக்கு வாக்குக் கொடுத்துட்டேன் பவி!

''இது தப்பு தான்...''

''அப்பா! என்னப்பா இது? இப்படிப் பேசறீங்களே? உங்க வார்த்தையை என்னிக்காச்சும் நான் மீறி இருக்கேனா?

''தேவகி அத்தையும் குரு மூர்த்தி மாமாவும் உடம்புக்கு முடியாம கஷ்டப்பட்டுட்டு இருக்காங்க... வசுந்தரா அக்காவை இழந்த சோகத்துல பரிதவிச்சுட்டு இருக்காங்க...

''அவங்களுக்கு மனசுக்கு ஆறுதலாவும், அவங்களை கவனிக்கிறதுக்கும் எனக்கொரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கேன்னு நான் சந்தோஷப் படறேன்.

''இது நம்ம கடமை தானே அப்பா? கவலைப்படாதீங்கப்பா... நான் அங்க போனதும்... அவங்களைக் கண்ணுக்குள்ளே வச்சுப் பார்த்துப்பேன்.

''ஆனா ஒரே ஒரு சின்ன நெருடல்... உங்க எல்லாத்தையும் பிரிஞ்சு இருக்கப் போறேனேன்னு கவலையா இருக்கு.



''இங்க அம்மாவும் உடம்புக்கு முடியாமத் தானே இருக்காங்க...''

''அதைப் பத்தி நீ கவலையே பட வேணாம் பவி! உங்கம்மாவை கவனிச்சுக்கிறதுக்குத் தான் நாங்க இத்தனை பேர் இருக்கோமே? அப்புறமென்ன?

''அங்க தேவகி தன்னோட செல்ல மகளையும் மருமகனையும் வாரிக் கொடுத்துட்டு புத்திர சோகத்துல கதறிக்கிட்டிருக்கா...

''அவளைத் தான் நாம்ப கவனிச்சாகணும். அவங்க அந்த சோகத்திலிருந்து ஓரளவுக்கு மீண்டும் வந்துட்டாங்கன்னு... நான் நெனச்சுட்டிருந்தேன்.

''ஆனா... நாளுக்கு நாள் கவலைப்பட்டே அவங்க வியாதியை இழுத்து விட்டு துடிச்சுப் போவாங்கன்னு... நான் எதிர்பார்க்கலை...''

''அப்பா! நாம்ப ஊருக்குப் போறதுக்கு செலவுக்கு காசு வேணுமேப்பா... பணத்துக்கு ஏற்பாடு செய்துட்டீங்களா?''

''மாங்காட்டுலே அடுத்த வாரத்துல ஒரு கல்யாணம்... எனக்கு டோக்கன் அட்வான்ஸ் கொடுத்துட்டு டேட் சொல்லிட்டுப் போயிருக்காங்க. தக்க சமயத்துல பணம் கிடைச்சிருக்கு... பயணச் செலவைப் பத்திக் கவலைப்படத் தேவையில்ல பவி'' அவளது விழிகளில் நீர்த்திரையிட்டது.

பவித்ராவின் நினைவலைகள் பின்னோக்கிச் சுழன்றன.

# 3

வசுந்தரா, பவித்ராவை விட இரண்டு மூன்று வயது மூத்தவள். அத்தை மகளும், மாமன் மகளும் அசப்பில் ஒரே சாயலில்... காண்போரை அசத்துவார்கள்.

ஒன்றரை வருடங்களுக்கு முன்பு தான்... வசுந்தராவுக்கு திருமணம் அமோகமாக நடந்தேறியது.

தங்கை மகளின் திருமணத்திற்கு... பசுபதி தன் குடும்பத்தோடு 'வீரபாண்டி'க்குச் சென்றிருந்தார்.

அத்தை தேவகி எடுத்துக் கொடுத்திருந்த புது பட்டுப் புடவையை அணிந்து கொண்டு மணப் பெண்ணின் தோழியாக மணமேடையில் நின்றிருந்தாள் பவித்ரா.

வசுந்தரா சற்று மாநிறம் தான்! ஆனால் பவித்ராவோ பொன்னிறத்தில் கூடுதல் களையுடன் மிளிர்ந்தாள்.

தேவகி பரிசளித்த மயில் கழுத்து நிறப் பட்டுப்புடவை அவளுக்கு வெகு பாந்தமாய் பொருந்தி இருந்தது.

தளரப் பின்னியிருந்த கூந்தலில் முல்லைச் சரத்தை சூட்டிக் கொண்டு கழுத்தில் மெல்லிய செயினை அணிந்திருந்த போதும்... அப்சரஸாக ஜொலித்தாள் பவித்ரா.

திருமணம் வெகு விமரிசையாகத் தான் நடந்தது.

மணமக்களை வாழ்த்தி விட்டுப் பரிசுப் பொருளை வழங்கிப் போவதற்காக வரிசையாய் உறவினர்களும், நண்பர்களும் வந்து கொண்டிருந்தனர்.



ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாய் வந்த இளைஞன் பரிசுப் பொருளைக் கொடுத்து வாழ்த்தி விட்டு... பக்கவாட்டில் திரும்பி இவளையே அதிசயத்துடன் பார்த்தான். எதேச்சையாக அவளும் ஏறிட்டாள்.

பவித்ராவின் இதயக் கூட்டிற்குள் படபடவென்று புறா சிறகடித்தது.

'என்னது இது? ஆயிரம் காலம் பழகியவர் போன்ற ஒரு உணர்வில் அவள் நெஞ்சு ஏன் இப்படிப் படபடக்கிறது.

முகமெல்லாம் வியர்த்துக் கொட்டுகிறதே... இதென்ன வேடிக்கை?' அவன் மணமேடையை விட்டுப் பக்கவாட்டுப் படிக்கட்டுகளில் இறங்கிச் சென்றபோது... மெல்லக் கள்ளத் தனமாக அவள் திரும்பிப் பார்த்தாள்.

அவனும்... தலையைத் திருப்பி அவளை மீண்டும் பார்ப்பதைக் கண்டு... முகம் குங்குமமாய் சிவந்து பரபரப்படைந்து போனாள்.

மாமா குருமூர்த்தி பவ்யமாய் ஓடோடி வந்து அந்த இளைஞனிடம் பணிவுடன் பேசி இதமாய் வற்புறுத்தி டைனிங் ஹாலுக்கு அழைத்துச் செல்வதை வியப்புடன் பார்த்தாள்.

''இவர் யார்னு யோசிச்சுட்டிருக்கியா பவி? இந்த ஊருக்கே பெரிய வி.ஐ.பி.! பேரு சுந்தரேசன்... சுருக்கமா சுந்தர்னு கூப்பிடுவாங்க...

''இந்த ஊரு பெரிய தனக்காரரோட மகன். தேனி, பெரியகுளம் வீரபாண்டி, கம்பம், கூடலூர்... இன்னும் சுத்துவாரத்துல எல்லாம் இவங்களுக்கு ஏகப்பட்ட நிலபுலம் இருக்கு...

''கம்பம், கம்பம் மெட்டு, தேவாரம், மூணாறு பகுதி கள்லே ஏகப்பட்ட எஸ்டேட்ஸ் இருக்கு. காபி, டீ, ஏலக் காய், கிராம்பு, ரப்பர் தோட்டங்கள்லே இருந்து பணம் கொழிச்சுட்டு இருக்கு...

''தேனி, கம்பம், பெரிய குளத்துல இவங்களுக்கு சொந்தமா ஸ்கூல்ஸ், காலேஜ், பாலிடெக்னிக்னு கல்வி நிறுவனங்கள்கூட இருக்கு...

''இந்த ஊர் கோவில் ஸ்தானிகரா சமீபத்துல தான் இவர் பொறுப்பேத்துக்கிட்டிருக்கார். இதுக்கு முன்னாடி இவங்கப்பா தான் அந்தப் பொறுப்புல இருந்தார்.

''இவ்ளோ பெரிய வி.ஐ.பி. நம்ம வீட்டுக் கல்யாணத் துக்கு வந்திருக்காருன்னா... அது பெரிய விஷயம்!

''அதுதான் அப்பா ஓடோடிப் போய் அவரை நல்லா கவனிச்சிக்கிறாரு... பரம்பரை பணக்கார வீட்டுப் பிள்ளையா இருந்தாலும் பந்தாவே இல்லாதவர்னு அப்பா சொல்வாரு.

''அப்பேர்ப்பட்ட வி.ஐ.பி. சுந்தர், உன்னைத் திரும்பத் திரும்பப் பார்த்தாரே? உன்னை அதிசயத்தோடு பார்த்து லயித்துப் போய் தன்னை மறந்தே நின்னுட்டாரே பவி?

''என்ன? நீயும் அவரைப் பார்த்தே தானே?

''அண்ணலும் நோக்கினாள்... அவரும் நோக்கினாள்'னு சொல்லவா? இல்ல... 'கண் வண்ணம் அங்கே கண் டேன்'னு பாடவா?''

இலேசாய் தலையைச் சாய்த்து மெல்லிய குரலில் கிசுகிசுத்தாள் வசுந்தரா.

''அ... அக்கா! அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை அக்கா. நீங்க வீணா கற்பனை பண்ணிக்காதீங்க'' பதறிப் போனாள் பவித்ரா.



''இந்தக் கதை தானே வேணாம்கிறது?''

''எ... என்னக்கா நீங்க? கல்யாணப் பொண்ணு நீங்க... உங்களை கேலி பண்ணி மத்தவங்க கலாய்ச்சுட்டிருந் தாங்க...

''நீங்க என்னடான்னா... என்னை வேடிக்கை பண்ண ஆரம்பிச்சுட்டீங்களா? நீங்க இந்த மாதிரிப் பேசினா... நான் மேடையை விட்டு இறங்கிப் போயிடுவேன்.''

பொய்க் கோபத்துடன் அவள் இறங்க முற்பட்ட போது... வசுந்தரா உரிமையாய் அவளது கையைப் பிடித்துக் கொண்டாள்.

''சரி! தப்புதான்... இனிமே நான் அப்படிப் பேசலை. போதுமா? ஆனா ஒண்ணு மட்டும் சொல்றேன். சுந்தர் சாரோட மனசை நீ தொட்டுட்டே...

''அது அவரு உன்னைப் பார்த்த பார்வையிலேயே நல்லாத் தெரியுது'' பவித்ராவின் செவிகளில் மீண்டும் அவள் கிசுகிசுத்தாள்.

அதைக் கேட்டதுமே நெஞ்சில் ஜிலுஜிலுவென்று சிற்றோடை பாய்ந்தது போலிருந்தது.

இனம் புரியாத பரவசத்தில் ஜிவ்வென்று அந்தரத்தில் பறப்பதைப் போன்றிருந்தது.

திருமணம் முடிந்து நான்கு நாட்கள் கழிந்த பின்னர் தான்... அவர்கள் சென்னைக்குத் திரும்பினார்கள்.

வசுந்தராவைப் பற்றிய ஞாபகம் வரும் போதெல் லாம்... அவளுக்கு அந்த சம்பவத்தைப் பற்றிய நினைப் பும் சேர்ந்து கொண்டு கிளம்பும்.

வசுந்தராவுக்கு தங்கமான குணம்! உறவுத் தலைகளுடன் சேர்ந்து உறவாடுவதில் அவளுக்கு கொள்ளைப் பிரியம் தான்...

வசதியான வீட்டில் பிறந்தாலும் எந்தவித பந்தாவும் இன்றி சகஜமாகப் பழகுபவள்.

அப்பேர்ப்பட்டவளை இழந்தால்? அந்த இழப்பை யாராலும் தாங்க முடியாதே?

தேக்கடிக்கு கணவனும் மனைவியுமாய் உல்லாசச் சுற்றுலா சென்றவர்கள்... ஆசை ஆசையாய் பெரிய படகில் ஏறினார்கள்.

அந்தப் படகு திடீரென்று கவிழ்ந்து... இருவரும் ஜல சமாதி அடைவார்கள் என்று யாரும் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

மரணச் செய்தியைக் கேட்டதும் பசுபதியும் கோமதியும் தான் கிளம்பிப் போனார்கள்.

''சாரி அப்பா! நா வரல்லே... வசு அக்கா இன்னமும் என் கண்ணுலேயே இருக்காங்க... அந்த கோர மரணத்தை நேர்லே பார்க்கிற சக்தி எனக்கில்லைப்பா...

''என்னால தாங்க முடியாதுப்பா... ப்ளீஸ்... புரிஞ்சுக்கோங்க... நாங்க பத்திரமா தாழ் போட்டுக்கிட்டு உள்ளே இருந்துப்போம்.

''நீங்களும் அம்மாவும் கிளம்புங்க'' என்று பிடிவாதமாய் மறுத்து விட்டிருந்தாள் பவித்ரா.

பவித்ரா மென்மையான மனம் படைத்தவள். கோர விபத்து, துர் மரணம் போன்ற காட்சிகளை டி.வி.யில் பார்க்க நேர்ந்தாலே... அவளுக்கு மனம் பதறும்.



அதற்கு மேல் பார்க்கத் தெம்பில்லாமல்... சட்டென்று சேனலையே மாற்றி விடுவாள்.

சாவு நடந்த வீட்டிற்குச் செல்லவில்லையே தவிர... வெகு நேரம் வசுந்தராவை நினைத்து மௌனமாகக் கண்ணீர் உகுத்துக் கொண்டு தான் இருந்தாள்.

அவளது ஆத்மா சாந்தி அடைய வேண்டும் என்று இஷ்ட தெய்வத்தை மனம் உருகப் பிரார்த்தனை செய்தாள்.

பழைய நினைப்பு மனதில் எழும்ப... விவரிக்க முடியாத துயரம் நெஞ்சை இறுக்குவதை உணர்ந்தாள்.

மரக் கதவை மெல்லத் திறந்து கொண்டு தோட்டத்தைக் கடந்து வீட்டிற்குள் நுழையும் வரை... அவள் வசுந்தராவின் ஞாபகத்திலேயே மூழ்கிக் கிடந்தாள்.

விஷயத்தைக் கேள்விப்பட்டதும் அம்மா கோமதி கோபத்தில் கொந்தளித்துப் போய் விட்டாள்.

''இது என்ன கூத்து? பவியைக் கொஞ்ச காலம் கூட இருந்து அவங்களை கவனிக்கணும்னு சொல்றாளே? எத்தனை மாசத்துக்காம்?

''பவி ரூபத்துல அவங்க மக வளைய வர்ற மாதிரி நெனச்சு... திருப்தி பட்டுக்கப் போறாங்களாக்கும்?

''வயசுப் பொண்ணை நாம்ப எப்படி அனுப்பி வைக்கிறதாம்? வசு அல்பாயுசுலே போயிட்டா... அவ ஆத்மா சாந்தி அடையாம அந்த வீட்டைச் சுத்தி வருமே?

''நம்ம பொண்ணை அங்க அனுப்பினா... என்னவாகும்? வேண்டாங்க... இது எனக்கு சரியாவே படலைங்க...

''நாளைக்கே இவ இருந்தா... நாங்க நிம்மதியா தெம்பா இருக்கோம்... இவ இங்கேயே இருக்கட்டுமே'ன்னு உங்க தங்கை அழுது அழிச்சாட்டியாம் பண்ணினா... என்னங்க செய்யறது?

''அண்ணிக்கு உடம்புக்கு முடியலை... பவி தான் கிட்டக்க இருந்து கவனிச்சுட்டிருக்காள்னு போன்ல ஏதாவது சாக்கு போக்கைச் சொல்லிச் சமாளிங்க.''

''முடியாது கோமதி! நான் பவியைக் கூட்டிக்கிட்டு வர்றேன்னு வாக்குக் கொடுத்துட்டேன்.

''நாளைக்கே தேவகிக்கோ இல்ல குருமூர்த்திக்கோ... கவலையில ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிடுச்சுன்னா... என் மனசாட்சியே என்னைக் கூறு போட்டுடும்.

''உடம்புக்கு முடியாதவங்களை கவனிச்சுக்கிறதுக்குத் தான் பவியை அனுப்பறோம். மனிதாபிமானம்னு ஒண்ணு இருக்கில்ல கோமதி?

''அவங்க சரியாயிட்டா... பவியை உடனே நான் கூட்டிட்டு வந்துட மாட்டேனா?

''பவி இந்த வீட்டுக்கே அச்சாணி மாதிரி... அவ இல்லேன்னா... நாம்ப கொஞ்சம் திண்டாடித்தான் போவோம். நான் இல்லேங்கல...

''பவி தன்னால முடிஞ்ச உபகாரத்தைச் செய்யப் போறா... புண்பட்ட நெஞ்சங்களுக்கு மருந்தா இருக்கப் போறா... இது புண்ணிய காரியம் தானே?

''வசுந்தரா அல்பாயுசுல போயிட்டா... அவளோட ஆத்மா அந்த வீட்டைச் சுத்தும்... வயசுப் பொண்ணு பவியை ஏதாச்சும் செய்துடுவாளோன்னு பேசறியே? இது உனக்கே நல்லாயிருக்கா?



''பவி ஒரு அற்புதமான பிறவி... ஈ எறும்புக்குக் கூட அவ தீங்கு நெனக்க மாட்டான்னு உனக்கே தெரியுமே?

''அவளுக்கு ஒரு கெடுதலும் வராது. பகவான் துணையிருப்பாரு. அங்க நிலைமை சரியானதும் தேவகியே எனக்கு போன் பண்ணுவா பாரேன்...

''அண்ணா! பவியை ஒத்தாசை பண்ண அனுப்பி வச்சே... குழந்தை எங்களை நல்லபடியா கவனிச்சுக் கிட்டா... நாங்க தேறி வந்துட்டோம். ரொம்ப நன்றி அண்ணா!

''அண்ணி பாவம்! பவியைப் பார்க்கணும்னு ஏங்கிட்டிருந்திருப்பாங்க. வந்து அவளைக் கூட்டிட்டுப் போன்னு... சொல்லத்தான் செய்வா...

''தேவகியைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். நீ கண்டபடி கற்பனை பண்ணிக்காதே... முழு மனசோடு குழந்தையை அனுப்பி வை.''

பசுபதி திட்ட வட்டமாய் கூறி விட்டார். கோமதிக்கு அதற்கு மேல் வாதாடத் தெம்பு இருக்கவில்லை.

திடுமென்று அவளுக்கு விழிகளில் ஈரம் கட்டிக் கொண்டதை ஊன்றிப் பார்த்த பவித்ரா... அம்மாவின் கரத்தைப் பற்றிக் கொண்டாள்.

''அம்மா! 'நம்மால முடிஞ்ச மட்டும் அடுத்தவங்களுக்கு உதவி பண்ணனும். காசு பணம் கையில இல்லாட்டியும்... உடல் உழைப்பைக் கொடுத்தாவது நாம்ப உதவணும்'னு அடிக்கடி நீ சொல்லுவியே?

''தேவகி அத்தைக்கு உதவியே ஆகணும். அது நம்ம கடமை! நாம்ப மறுத்தா... நாளைக்கு நமக்கு தானேம்மா பேச்சு வரும்?''

''சரி... வேற வழியில்ல... உனக்கு வேண்டிய துணி மணிகளை எடுத்து வச்சுக்கோ பவி! அடிக்கடி எனக்கு போன் பண்ணிப் பேசிடணும்.

''செல் உங்கப்பா கையில இருக்கும். அதனால ராத்திரி நேரத்துல பண்ணு... சரியா?''

''சரிம்மா... நேரம் தவறாம மாத்திரை போட்டுக் கோம்மா... பாவம்! உடம்புக்கு உனக்கு முடியல. அத்தன வேலைகளையும் இனி நீ இழுத்துப் போட்டு செய் துடுவியா?

''அபியைக் கொஞ்சம் ஒத்தாசை பண்ணச் சொல் றேன். எனக்கு உன்னை நெனச்சாத்தான் கவலையா இருக்கும்மா...''

''என்ன பவி இப்படிப் பேசறே? உங்கம்மாவைப் பத்தின கவலையை விடு! உங்கப்பன் ஒரு சமையல் காரன்கிறதையே மறந்துட்டுப் பேசறியே? கார்த்தால நான் கிளம்பறதுக்கு முன்ன... வீட்டுச் சமையலை முடிச்சுட்டாப் போகுது.

''அபி வேற இருக்காள்லே? மத்தபடி சுத்து வேலையை சமாளிச்சுடலாம்...''

''அப்பாடா... இப்பத்தான் எனக்கு நிம்மதியா இருக் குப்பா... ட்ரஸ்ஸை எடுத்து வச்சு 'பேக்' பண்ணிடறேன்.''

நிம்மதியும் திருப்தியும் முகத்தில் பரவ... கூடத்தை ஒட்டியிருந்த அறைக்குள் புகுந்தாள் பவித்ரா.

அந்தப் பிரயாணம்... அவளது வாழ்க்கைத் தடத்தை முற்றிலும் புரட்டிப் போட்டு... அவளது நிம்மதியை சூறையாடப் போகிறது என்பதை அவள் எவ்விதம் அறிவாள்?



# 4

தேவகிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. அண்ணன் பசுபதியையும், பவித்ராவையும் கண்டதுமே.. அவளது முகத்தில் விளக்கு போட்டாற் போல் வெளிச்சம் பரவியது.

''பவி... பவிம்மா... என் ராஜாத்தி! கிட்டக்க வா... கண்ணு'' என்றபடி பவித்ராவை கண்ணீர் மல்க ஏற இறங்கப் பார்த்து விட்டு ஆரத் தழுவிக் கொண்டாள்.

தன் மகள் வசுந்தராவே உயிர் பெற்று எழுந்து வந்து விட்டாற் போன்றதொரு மகிழ்ச்சியில் பூரித்துப் போனார் குருமூர்த்தி.

கட்டிலில் சாய்ந்தபடி அமர்ந்து அதிகம் பேசாமல்... பாசம் விழிகளில் கசிய வைத்த கண் வாங்காமல் பவித்ராவையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''தேவகி! இனி எல்லாமே சரியாயிடும். பகவான் மேல பாரத்தைப் போட்டு நட... நம்ம கையில என்ன இருக்கு? இன்னிக்கு சாயந்தரமே நான் புறப்படறேன்...''

''இரண்டு மூணு நாள் இருந்துட்டுத் தான் போயேன் அண்ணா! வந்தவுடனே கால்லே வெந்நீர் ஊத்திக்காத குறையா... கிளம்பறேன்னு சொல்றியே?''

''இல்லம்மா... உங்களை வந்து பார்த்தாச்சு. பவியைக் கொண்டு வந்து விட்டாச்சு... திருப்தியா இருக்கு... நான் போய் என் பிழைப்பைப் பார்க்கணும் இல்லையா?

அடிக்கடி போன் பண்ணும்மா...'' சொன்னபடியே அன்று சாயந்தரமே விடைபெற்றுச் சென்று விட்டார் பசுபதி.

அத்தை தேவகியின் வீடு அந்தக் காலத்தில் கட்டப் பட்டதுதான்! நான்கு பக்கமும் தாழ்வாரம்... ஒவ்வொரு தாழ்வாரத்திலும் ஒரு பெரிய அறை... நெருக்கமாக கம்பி போட்ட பெரிய முற்றம்... கூடம்... பின் கட்டு... தோட்டம் என்று பிரமாண்டமாய் தான் இருந்தது.

கூடத்தில் சுவர் ஓரமாகக் கிடந்த அகன்ற பெஞ்சு மீது விரிக்கப்பட்டிருந்த பஞ்சு மெத்தை மீது அடிக்கடி சுருண்டு படுத்துக் கொண்டாள் தேவகி.

''வேலைக்காரி காயம்பூ இன்னிக்கு வரலை. அடிக்கடி அவ மட்டம் போட்டுடறா... பக்கத்துத் தெருவில இருந்து ஒரு பொடிப்பயல் ஸ்கூல் டைம் முடிஞ்சதும்... இங்க ஒத்தாசை செய்ய வருவான்.

கடை கண்ணிக்குப் போய் வேண்டியதை வாங்கித் தருவான். நீயும் வசுவும் எனக்கு ஒண்ணு தான்... நீ வந்ததும் உனக்குப் பிடிச்சதா செஞ்சு போடணும்னு ஆசை...

வந்ததும் வராததுமா நீயே இன்னிக்கு சமைச்சுட்டே.... ரொம்பப் பிரமாதமா சமைக்கிறே பவி! உங்கம்மாவுக்கு உடம்புக்கு முடியலை இல்லையா?

அண்ணனும் மெலிஞ்சு ஆள் பாதியா ஆயிட் டாப்பல... நாங்க ரெண்டு பேரும் மதியம் கொஞ்ச நேரம் தனியா பேசிட்டிருந்தப்ப... அண்ணா சொன்னான்.

'பவி வேலைக்கு ட்ரை பண்ணிட்டிருக்கா... நல்ல வேலை எதுவும் அமையலை... கிடைக்கிறப்போ பார்த் துக்கலாம்... வீட்டை வித்தாவது அவ கல்யாணத்தை முடிச்சுடலாம்'னு இருக்கேன்.

''கடமையைச் சீக்கிரமா முடிச்சா நல்லதுன்னு உங்கண்ணியும் பிரியப்படறாள்'னு சொன்னாரு...

''பவியோட குணத்துக்கு நல்ல வரன் நிச்சயமா அமையும். அவ அமோகமா இருக்கப் போறாள்'னு நான் சொன்னேன்...''

பவித்ராவை பார்த்ததிலிருந்து வாய் சலிக்காமல் பேசிக் கொண்டே இருந்தாள் தேவகி.

புன்முறுவல் பூத்தபடி மெத்தையை நன்கு தட்டி... வேறொரு விரிப்பை அதில் போட்டு தலையணை உறைகளை மாற்றிவிட்டு... அத்தையை அதில் படுத்துக் கொள்ளச் சொன்னாள்.

குருமூர்த்தி சயனித்திருந்த கட்டிலுக்கும் புது விரிப்பைப் போட்டு சுத்தமாய் அறையைப் பெருக்கி விட்டு தூபக்காலில் சாம்பிராணியைப் போட்டு... வீடு முழுவதும் சாம்பிராணி நறுமணம் கமழச் செய்தாள்.

அத்தை தேவகி அவளது கல்யாணப் பேச்சை எடுத்ததும்... சட்டென்று அவளது மனக்கண் முன் வந்து நின்றான் சுந்தர்.

வசுந்தராவின் திருமணத்தின்போது அவனைப் பார்த்தது தான்... அவனைப் பார்த்த மாத்திரத்தில்... அதுவரை மொட்டையாய் கூம்பியிருந்த அவளது இதயத் தாமரை சட்டென்று இதழ் விரித்து மலர்ந்து மணம் வீசியது.

அவளது அனுமதியின்றி அவளது இதயக் கதவுகள் அனிச்சையாகத் திறந்து சுந்தரின் உருவத்தை சிறை பிடித்துக் கொண்டன.

'என்னது இது? அவர் பெரிய தனக்காரரின் மகனாமே? மிகப் பெரிய கோடீஸ்வரர்... பரம்பரை பணக்காரர் என்று வசு அக்கா தெளிவாய் சொல்லி விட்டாளே?

நான்...? சாதாரண சமையல்காரரின் மகள்...

எனக்கும் அவருக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது போலிருக்கிறதே?

அவரைப் பற்றிய நினைப்பு எனக்கு அடிக்கடி வந்து தொலைக்கிறதே?

'கண்டதும் காதல்' என்பதைக் கதைகளிலும் காவியங்களிலும் படித்திருக்கிறேன்...

நிஜ வாழ்வில் அது சாத்தியம் தான் என்பதை... அனுபவப் பூர்வமாக உணர்கிறேனே?

நல்ல குடும்பத்தில் பிறந்த பெண்ணிற்கு இது அழகல்லவே?' என்று தன் மனதை அவ்வப்போது தட்டி அடக்கத்தான் செய்தாள்.

அந்த மாதிரி தருணங்களில்... உள்ளுக்குள் எதுவோ உடைந்தது போலிருக்கும்.

கண்ணீர் பொங்கிப் பொங்கி வழியும்.

இரவில் யாரும் அறியா வண்ணம்... மௌனமாகக் கண்ணீர் உகுப்பாள் பவித்ரா.

கட்டுப்படுத்த கட்டுப்படுத்த மனம் தாவிக் குதித்து அத்து மீறி ஓடத் தான் செய்தது.

'காதல் புனிதமானது மட்டுமல்ல... வினோதமானதும் கூட!



அதற்குத் தடை போட முடியாது. தடுக்க முயன்றால் தான் அது மென்மேலும் பொங்கிப் பெருகி வெளிப்படும்' என்பதை உணர்வுப் பூர்வமாக அவள் புரிந்து கொண்டிருந்தாள்.

அத்தைக்கு அருகிலேயே கீழே தரையில் பாயை விரித்துப் படுத்துக் கொண்ட பவித்ரா... தன்னைத் தானே சாடிக் கொண்டாள்.

'இதென்ன முட்டாள்தனம்? இந்த ஒருதலைக்காதலால் யாருக்கும் ஒரு நன்மையும் விளையப் போவதில்லை...

மனதைப் பறி கொடுத்துவிட்டு காலமெல்லாம் அவஸ்தைப்பட வேண்டியதுதானா?

அவர் நல்லவரா? கெட்டவரா? என்று எதுவுமே தெரியாத நிலையில்... இதயத்தில் அவருக்கு இடமளித்து விட்டது எவ்வளவு பெரிய மதியீனம்?

இது பைத்தியக்காரத்தனம் என்று புத்திக்கு தெளிவாகத் தெரிகின்றது.

ஆனால்... இந்தப் பேதை உள்ளத்திற்கு அது புரியவில்லையே?

நடைமுறைக்கு சிறிதும் சாத்தியமே இல்லை என்பது புரிந்தும்... அடிக்கடி அவரது நினைவு எனக்குள் எழும்புவது தவறு அல்லவா?

'உன்னை மகளா அடையறதுக்கு நாங்க குடுத்து வச்சிருக்கணும் பவிம்மா' என்று அடிக்கடி அப்பா கூறுவாரே?

அவர் என் மீது எவ்வளவு நம்பிக்கையும், பாசமும் வைத்திருக்கிறார். அதற்கு நான் தகுதியுடையவள் தானா?

என் மனதை சிதற விட்டு... ஒரு தலைக் காதலுக்கு ஆட்பட்டு கசிந்துருகிக் கொண்டிருக்கிறேனே?

பெற்றவர்களுக்குத் தெரியாமல்... காதலை மனதுக்குள் புதைத்துக் கொண்டு அவதிப் படுகிறேனே?

இது அவர்களுக்குத் தெரிய வந்தால் என்னவாகும்?

அப்பா என்னை வெறுத்து 'சீ' என்று ஒரு பார்வை பார்த்தால் கூட... நான் அவமானத்தில் நொறுங்கி செத்து விடுவேனே?

இது தேவையா?

மனசாட்சி மணலாய் அடிக்கடி உறுத்துகிறதே?

ஒரு பக்கம் மனசாட்சி... இன்னொரு பக்கம் காதல் வயப்பட்ட மனம்...

இரு பக்கமும் இழுபட்டு வதைபட்டுக் கொண்டிருக்கிறேனே?

கடவுளே! என் மனதிற்கு ஒரு திடத்தைக் கொடு... பகவானே! பார்த்த மாத்திரத்திலேயே அவரை விரும்பித் தொலைத்து விட்டேனே?

குடும்பத்தில் இருக்கும் கவலை போதாதென்று... இதென்ன மனக் கஷ்டம்?

மனதில் ஜனித்த காதல்... கானல் நீர் தான்! அது நன்கு தெரிந்தும் மீண்டும் மீண்டும் என் உள்ளம் சுந்தரை நினைத்துப் பார்க்கிறதே?

கடவுளே! தெரிந்தோ தெரியாமலோ என் மனம் அவரை விரும்பி விட்டது.

இனி அதை மாற்ற முடியாது. மனதில் ஒருவருக்கு இடம் அளித்து விட்டு... இன்னொருவருக்கு நான் கழுத்தை நீட்ட முடியுமா?



ஊகூம்... முடியாது! என் மனதையும் மாற்றிக் கொள்ள முடியாதே? ஒரு தலைக்காதலால் யாருக்கு என்ன லாபம்?

வெளியில் நான் இதைச் சொல்லக்கூட முடியாதே? ஊமை கண்ட கனவு போல்... மனதில் முகிழ்த்த காதலை அப்படியே புதைத்துவிட வேண்டியது தான்.

மனதைக் கல்லாக்கிக் கொண்டு... விதி விட்ட வழிப்படி நடக்க வேண்டியதுதான்.'

மனதை சிரமப்பட்டு ஒருமுகப்படுத்தி விழிகளை மூடி தியானித்தாள். மனம் வசப்பட்டது.

நீண்ட பெருமூச்சு விட்டபடி ஒருக்களித்துப் படுத்தாள்.

பத்து நிமிடங்களுக்குக் கூட அந்த சிறு நிம்மதி நீடிக்கவில்லை.

தண்ணீருக்குள் அமிழ்த்தப்படும் பந்து... குபீரென்று எம்பி எழும்பி மேலே வருவது போல... மீண்டும் சுந்தரின் ஞாபகம் எழுந்து அவளை ஆக்கிரமித்தது.

நெஞ்சுக்குள் ஒரு பரவச சிலிர்ப்பு பொங்கியது.

கவலையும், இனம் புரியாத மகிழ்ச்சியும் மாறி மாறி அவளைப் பந்தாடின.

## 5

பவித்ரா, வழக்கம் போல் அதிகாலையில் எழுந்து விட்டிருந்தாள். வாசல் தெளித்து நேர்த்தியாய் கோலம்

போட்டு விட்டு... குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

பத்து நிமிடங்கள் கரைந்தன.

குளித்து ஈரமான கூந்தலை நுனியில் முடிச்சிட்டிருந்தாள்.

மயிற்தோகை போன்று அடர்ந்து நீண்டு... அவளது இடுப்பைத் தாண்டிப் பரவியிருந்த கூந்தலிலிருந்து சொட்டிய ஈரம்... அவளது ஆகாய நீல வண்ணக் காட்டன் புடவையில் படிந்திருந்தது.

பித்தளை பூஜைக் கூடையை எடுத்துக் கொண்டு... கொல்லைக் கதவைத் திறந்து கொண்டு தோட்டத்திற்குள் புகுந்தாள்.

பவள மல்லி, நித்ய மல்லி, செவ்வரளி, செம்பருத்தி, செண்பகம், சாமந்தி, சம்பங்கி, பன்னீர் புஷ்பங்கள், சங்கு புஷ்பங்கள்... என்று பூஜைக்கேற்ற பூக்களைப் பறித்துக் கொண்டு கூடத்திற்கு வந்தாள்.

கூடத்துத் தூணோரம் சாய்ந்து அமர்ந்து... பித்தளைக் கூடையில் இருந்த பூக்களைக் கொட்டிக் கவிழ்த்து... வகையாகப் பிரித்து வைத்தாள்.

மலர்களின் கலவையான நறுமணம்... கும்மென்று நாசியைத் துளைத்துக் கூடத்தையே நிறைத்தது.

அவிழ்ந்த கூந்தலைக் கோதிக் கொண்டையிட்டபடியே... மெல்ல எழுந்து வந்தாள் தேவகி.

''புது இடம்கிறதால சரியாக தூக்கம் பிடிக்கலையா பவி? சீக்கிரமா எழுந்துட்டியா?''



''தினமும் சீக்கிரமா எழுந்து பழகிட்டதால... வழக்கமான நேரத்துல சரியா விழிப்பு தட்டிருது அத்தே.''

ஜோடி மொட்டுக்களை எடுத்து வாழை நாரை லாவகமாக விரல்கள் சுழற்ற... அத்தையை நிமிர்ந்து பார்த்து முறுவலித்தாள்.

''இதோ... நானும் குளிச்சுட்டு வந்துடறேன்.''

''ஊசி, நூல் எங்கேயிருக்குன்னு சொல்லிட்டுப் போங்க அத்தே... பவள மல்லியை நூல்லே கோர்த்து வச்சுடறேன்...''

''அதோ... அந்த அலமாரியில கீழ்த்தட்டுல இருக்கு பாரு'' கூறிவிட்டு விரைந்தாள் தேவகி.

பவளமல்லியை நூலில் மாலையாகக் கோர்த்து முடிக்கும் தறுவாயில்... அத்தையின் குரல் பூஜையறையிலிருந்து வெளிப்பட்டது.

''பவி! இங்க கொஞ்சம் வாயேன்.''

''இதோ வந்துட்டேன் அத்தே.''

பூச்சரத்தையும் பவள மல்லி மாலையையும் பித்தளைக் கூடைக்குள் வைத்து எடுத்துக் கொண்டு போனாள்.

''செம்பருத்திப் பூவை சாமி படங்களுக்கு வச்சுடு. நீ இப்போ தொடுத்து வச்ச சரத்தை அம்மன் கோவிலுக்குப் போயி சாத்திட்டு வந்துடறியா?''

''சரிங்க அத்தே.''

''இந்தா! இந்தப் புடவையை வாங்கிக்க பவி... இன்னிக்கு நம்ம வசுந்தராவோட பிறந்த நாள்.

''இதைக் கட்டிக்கிட்டு நீ கோவிலுக்குப் போய் சாமி பேருக்கு அர்ச்சனை பண்ணிட்டு வந்தா... எங்க மனசு குளிரும் பவி! செய்வியா?'' கெஞ்சும் தொனியில் கேட்டாள் தேவகி.

''உரிமையா உத்தரவு போடுங்க அத்தே... சந்தோஷமா எது வேணும்னாலும் செய்யக் காத்திருக்கேன்... எதுக்கு கெஞ்சறீங்க?

''அத்தே! சாதாரண காட்டன் புடவையை வாங்கி வச்சிருக்கக் கூடாதா? காஸ்ட்லியான பட்டுப் புடவையை எனக்குப் பரிசளிக்கிறீங்களே?

''அதான்... எனக்கு சங்கோஜமா இருக்கு...'' தயக்கமாய் ஏறிட்டாள் பவித்ரா.

''இந்தப் புடவையைப் பார்த்தா... அதுலே எங்க அன்பும் பாசமும் தான் உன் கண்ணுக்குப் படணும்.

''காசு பணத்தைக் கணக்குப் பார்க்கப் படாது. வசுவுக்கு ஆரஞ்சு வண்ணம்னா... ரொம்பப் பிடிக்கும்.

''உனக்கும் வசுவுக்கும் பூங்கொடி மாதிரி உடல்வாகு. அதான் குத்து மதிப்பா 'ரெடிமேட்'லேயே ரவிக்கையும் பொருத்தமான வண்ணத்துல வாங்கி வச்சுட்டேன்.

''இந்தப் புடவையோட இணைஞ்சு வந்த பட்டு ரவிக்கைத் துணியைத் தனியா எடுத்து வச்சிருக்கேன்.

''சரியான அளவு கொடுத்து நீ அப்புறமா தைச்சுக்கோ பவி! ப்ரிஜ்லே சின்னப் பந்து சைஸில கனகாம்பரப் பூவை வாங்கி வச்சிருக்கேன்.

''தலையை வாரித் தளரப் பின்னிக்கிட்டு... அந்தப் பூவை எடுத்து வச்சுக்கோ...



''வசுவோட நகைகள் சிலதைப் போட்டுக்கிட்டு... கோவிலுக்குப் போயிட்டு வாம்மா...''

''அத்தே... நகைகள் வேணாமே?'' தயங்கினாள்.

''மறுத்து எதுவும் பேசக்கூடாது. வா.. நானே தலை சீவி விடறேன். வசு ஸ்தானத்துல நீ இருக்கே... உன்னோட அம்மா ஸ்தானத்துல நான் இருக்கேன்.

''என்னை வேத்து மனுஷியா நெனச்சாத்தான் தயக்கம் வரும். சொல்லப் போனா... நீ உன் அம்மாவை ஜாடையில கொண்டு பிறக்கலை.

''அச்சு அசலா என்னைக் கொண்டு பிறந்திருக்கே... நீ என் ரத்தம்டா... அந்த உரிமையில தான் உன்னை நான் வரவழைச்சிருக்கேன். தயக்கம் காட்டினா எனக்கு சங்கடமா இருக்கு ராஜாத்தி.''

''சாரி அத்தே... இனிமே நான் மறுத்துப் பேசலை... மாமாவுக்கு ஓட்ஸ் கஞ்சி காய்ச்சிக் கொடுத்துட்டு வந்துடறேன்...

''பால் இன்னமும் வரலேயே அத்தே?''

''காயாம்பூ தான் கறந்த பாலை தினமும் வாங்கிட்டு வருவா... அவ வரதுக்கு இன்னும் கொஞ்ச நேரம் ஆகும். நீ மாமாவுக்கு ஓட்ஸ் கஞ்சியைக் காய்ச்சி எடுத்துட்டு வா...

''உனக்கு நான் சடை பின்னி விடறேன். புடவையைக் கட்டிட்டு நீ தயாரா இரு... காயாம்பூ வந்ததும் பாலை வாங்கி வச்சுட்டு... அவ கூட கோவிலுக்குப் போயிட்டு வந்துடு... வந்து நிதானமா காபி போட்டுக்கலாம். சரியா?''

''நீங்க சுகர் பேஷண்ட் அத்தே! ரொம்ப நேரமா வயித்தைக் காயப் போடக்கூடாது. பி.பி. வேற இருக்கு... அடிக்கடி தலை சுத்தல் வருதுன்னு சொல்றீங்க...

''உங்களுக்கும் சேர்த்து ஓட்ஸ் கஞ்சி எடுத்துட்டு வர்றேன். மறுக்காம குடிச்சிடுங்க...

''கார்த்தாலேயே ப்ரிஜ்லே தேடிப் பார்த்தேன். பால் ஸ்டாக்கே இல்ல... ஆத்திர அவசரத்துக்கு கண்டிப்பா பால் எடுத்து வச்சுக்க வேணாமா?

''சாயந்தரத்துல வர்ற பாலைக் கொஞ்சம் எடுத்து ப்ரிஜ்லே வச்சுடப் போறேன்.

''கார்த்தால சீக்கிரமா உங்களுக்கு காபி போட்டுக் கொடுத்துடலாம் பாருங்க... அதான்.''

பரபரப்பாய் பேசியபடியே அடுக்களைக்குள் அடைக்கலமானாள் பவித்ரா.

சின்னச் சின்ன விஷயங்களில் கூட... அவளது பொறுப்புணர்ச்சியும் அக்கறையும் வெளிப்படுவதைக் கண்டு... தேவகியின் முகத்தில் பெருமிதம் பரவியது.

குருமூர்த்திக்கும் தேவகிக்கும் ஓட்ஸ் கஞ்சியைக் கை பொறுக்கும் சூட்டில் இதமாய் ஆற்றிக் கொடுத்து விட்டு... பழைய சேலையைக் களைந்துவிட்டு... புது ஆரஞ்சு வண்ணப் பட்டுப்புடவைக்கு மாறினாள் பவித்ரா.

அவளது பொன்னிற மேனிக்கு அந்த ஆரஞ்சு வண்ணப் பட்டுப் புடவை பாந்தமாகப் பொருந்தி... அவளது நிறத்தைத் தூக்கலாய் காட்டியது.

பாசம் பொங்கி வழியும் விழிகளால் அவளை ஏற இறங்கப் பார்த்தாள் தேவகி.



''என் கண்ணே பட்டுடும் போல இருக்கே பவி! வசுவை நேர்ல பார்த்த மாதிரியே இருக்கு செல்லம்!

''வா! பக்கத்துல வந்து உட்காரு... வசுவுக்கு உன்னளவுக்கு நீண்ட கூந்தல் கிடையாது. அடர்த்தியா இடுப்பளவுக்குத் தான் இருக்கும்.

''உனக்கு கைப்பிடியில அடங்காத அடர்த்தியோட மயில் தோகை மாதிரி நீண்டு அழகா இருக்கு... பின்னி விடறதுக்கே ஆசையா இருக்குடா...

''உம்!... அந்தக் கனகாம்பரத்தை எடு... வச்சு விடறேன்...'' தேவகி ஆசையாய் ஜடை பின்னிப் பூவைச் சூட்டி விட்டாள்.

''இந்தா பவி! இந்த நகைகளைப் போட்டுக்கோ... கம்மலைக் கழட்டிட்டு இந்த ஜிமிக்கியைப் போட்டுக்கோ...

''என்ன? திருதிருன்னு முழிக்கிறே? என் ஆசைக்காகவாவது நீ இதுகளை மாட்டிக்கத் தான் வேணும். மறுக்கப்படாது சொல்லிட்டேன்.

''கடைசியா இந்த நெத்திச் சுட்டியை மட்டும் மாட்டி விட்டுட்டா... எனக்குத் திருப்தியாயிடும். எளிய அலங்காரம் தான்! சங்கோஜப்படாதேம்மா...

எளிய அலங்காரத்திலும் லட்சுமிகரமாய் கண்களை நிறைத்தாள் பவித்ரா.

''நமஸ்காரம் பண்றேன் அத்தே! என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க'' என்றபடி... கால்களைத் தொட்டுப் பணிந்தவளின், கன்னங்களைத் தொட்டு வருடி விரல்களால் தனது நெற்றியில் நெட்டி முறித்து திருஷ்டி கழித்தாள் தேவகி.

''தீர்க்க ஆயுசோட சவுபாக்கியவதியா இரும்மா'' என்றபடி பவித்ராவை அணைத்து உச்சி முகர்ந்தாள்.

குருமூர்த்தி மாமாவையும் வணங்கி ஆசி பெற்றுக் கொண்டு கூடத்திற்கு வந்தபோது... காயாம்பூ பெரிய தூக்கு வாளியில் கறந்த பாலை வாங்கிக் கொண்டு வந்து விட்டிருந்தாள்.

''உங்க அண்ணன் பொண்ணு வந்துட்டாளா? வாசல் தெளிச்சு அழகா கோலம் போட்டுட்டாளா? அட... அச்சு அசலா உங்களை மாதிரித்தான் இருக்கு...

''நம்ம வசுவே தான்... இந்தப் பொண்ணு வந்ததும் உங்க முகத்துல அலாதி களை வந்துடிச்சு போங்க...'' உச்ச ஸ்தாயியில் பேசியபடியே அடுப்பங்கரைக்குள் நுழைந்து அடுப்பு மேடையருகில் தூக்கு வாளியை வைத்தாள்.

''அட... ஓட்ஸ் கஞ்சியைக் கூட காய்ச்சிக் கொடுத் துட்டா போலிருக்கே? எல்லா வேலையையும் அவளே இழுத்துப் போட்டு செய்துட்டா எப்படி? நீங்களே நியாயம் சொல்லுங்கம்மா.''

''தோட்ட வேலையையும் சுத்து வேலையையும் பார்த்துக்கோ... பவி தன் கையால எங்களுக்கு சமைச்சுப் போடணும்னு பிரியப்படறா... எங்களை கவனிக்கிற பொறுப்பு... இனிமே அவளைச் சார்ந்தது.

''பவியை அழைச்சுக்கிட்டு அம்மன் கோவிலுக்குப் போயிட்டு வா... காயாம்பூ!'' கோவிலில் ஒரு இனிய அதிர்ச்சி அவளுக்காகக் காத்திருந்தது.



# 6

அர்ச்சனைக் கூடையைக் கையிலேந்திக் கொண்டு... தங்கச் சிலை உயிர் பெற்று எழுந்து வந்தது போன்ற தோற்றத்துடன்... காயாம்பூவைப் பின் தொடர்ந்து நடந்தவளை... வழியில் எதிர்ப்பட்டவர்கள் ஆச்சரியத் தோடு அவளை மேலும் கீழும் ஆராய்ந்தனர்.

''யாருன்னு அதிசயமா பார்க்கிறீகளா? நம்ம தேவகி அம்மாளோட அண்ணன் பொண்ணு... மெட்ராஸுலே இருந்து வந்திருக்குது. அத்தையையும் மாமாவையும் கூட இருந்து கவனிச்சுக்கப் போகுது.''

''அட... அப்படியா? அதுவும் சரிதான்... படிச்ச பொண்ணு மாதிரி இல்ல... அடக்கமா பணிவா தெரிய றாளே?''

எதிர்ப்பட்டவர்கள் அனைவரிடமும் தம்பட்டம் அடிக் காத குறையாக... விஷயத்தைப் பரப்பிக் கொண்டே வந்தாள் காயாம்பூ.

''என்ன கண்ணு? எல்லோர் கிட்டேயும் உன்னைப் பத்தி சொல்லிக்கிட்டே வர்றேன்னு பார்க்கிறியா? கூச் சமா இருக்கா?

''உங்க ஊர்லே அக்கம் பக்கத்து வீட்டுலே ஒரு கொலை நடந்தாக்கூட எதுவும் தெரியாதாமே?

''இங்க அப்படியில்ல... நான் வாயை மூடிக்கிட்டு வந்தாலும் அவங்களே நின்னு என் வாயைக் கிளறி னாங்க பார்த்தேயில்ல...?

''யார் வீட்டுல எது நடந்தாலும் எல்லோருக்கும் தெரிஞ்சு போயிடும். இப்ப நீ வந்தது. இந்த ஊருல முக்கால் வாசிப் பேருக்கு கண்டிப்பா தெரிஞ்சிருக்கும்...

''எங்களுக்கு வம்பு தும்பு ஜாஸ்தின்னு நீ நெனக்க லாம்... அதே சமயம் ஒத்துமையும் ஜாஸ்தி தான்... யாரு வீட்டுலேயும் இதுவரை களவு போனதே இல்ல...

''ஒரு குரல் கொடுத்தா போதும்... ஊரே திரண்டு வந்துடும்.''

''நீங்க சொல்றதைக் கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு அம்மா! இந்த மாதிரி ஒற்றுமையும் அன்னி யோன்யமும் இல்லாததால தான்... சிட்டியில நாளுக்கு நாள் கொலை, கொள்ளை சம்பவங்கள் அதிகரிச்சுட்டே போகுது...'' பேசியபடியே ஆற்றுப் பாலத்தைக் கடந் தார்கள்.

இரு கரை தொட்டு கரை புரண்டு ஓடும் முல்லை யாற்றைக் கண்டதும்... பவித்ராவுக்கு உள்ளூர மகிழ்ச்சி குமிழியிட்டது.

சட்டென்று பக்கவாட்டில் தெரிந்த சரிவின் வழியே இறங்கி ஆற்று நீரில் முங்கி எழ வேண்டும் போன்ற தொரு ஆவல் ஜனித்தது.

'வீரபாண்டி' மேற்கு மலைத் தொடர்ச்சியின் அருகே அமைந்துள்ள அழகிய கிராமம் அது!

சமீபத்தில் பெய்த மழையினால்... எங்கு திரும்பி னாலும் பசுமை கோலோச்சிக் கொண்டிருந்தது.

''ஆத்துல குளிக்கணும்னு ஆசையாயிருக்கா கண்ணு? இப்ப நாம்ப சுத்து வழியா வந்துட்டிருக்கோம்...



''நம்ம வீட்டுல பின் பக்கத்துத் தோட்டத்து மூங்கில் வேலியைத் தாண்டி... கொஞ்ச தூரம் வாய்க்கால் கரையோரம் போனா... இறங்கு துறை படிக்கட்டு... ஏழு கன்னி மாரியம்மன் கோவில் கிட்ட தெரியும்.

''தேவகி அம்மா அனுமதிச்சா... நீ ஆசை தீர அங் கேயே குளிக்கலாம்...''

''அத்தைகிட்டே அனுமதி கேட்டுக்கிட்டு... அங்க நாளைக்குப் போயிட வேண்டியதுதான்'' முறுவலித்தாள் பவித்ரா.

அதற்குள் அவர்கள் கோவிலை சமீபித்து விட்டிருந் தனர். செருப்புகளைக் கழற்றி விட்டு... முன் மண்டபத் தையும் விதானத்தில் வரையப்பட்ட ஓவியங்களையும் வியப்புடன் அண்ணாந்து பார்த்தபடி கோவிலுக்குள் மெல்ல நுழைந்தாள்.

''அட... இன்னிக்குப் பௌர்ணமியில்ல?... ஒவ் வொரு பௌர்ணமி அன்னிக்கும் அம்மனுக்கு விசேஷ அபிஷேகம் ஆராதனை நடக்கும்.

''சிறப்புப் பூஜைகள் அமர்க்களப்படுமே? பெரிய தனக் காரர் வீட்டு உபயமாச்சே? நெய் மணக்கும் பொங்கல், பஞ்சாமிர்தம்னு பிரசாத வினியோகம் பண்ணுவாங் களே? ஐயாவோட கார் நிக்குதே?

''இந்நேரத்துக்கு வந்தது நல்லதாப் போச்சு... கை நிறைய பிரசாதத்தை வாங்கிட்டுப் போலாம். பாரு.''

வெற்றிலைக் காவிக்கறை ஏறிய பற்கள் தெரிய சிரித்து விட்டு... நடையை எட்டிப் போட்டு, ஆவலாய் முன்னே விரைந்தாள் காயாம்பூ.

''பூஜை முடிஞ்சு சாமி கும்பிட்டுட்டு பிரசாதம் வாங்க, ஜனங்க கலைஞ்சு போயிட்டாங்க... பூசாரி ஐயா மட்டும் நிக்கிறாரு... கூட்டமே இல்ல... நிம்மதியா மனமுருக வேண்டிக்க... நெனச்சது அப்படியே நடக்கும்...

''எங்க ஊரு அம்மனுக்கு அவ்ளோ சக்தி தெரியுமா? தஞ்சம்னு வந்தவங்களை ஆத்தா கைவிடவே மாட்டா... வா... சீக்கிரம்'' பரபரப்பாய் அவள் அழைத்ததும்... பட்டுப் புடவை சரசரக்க அம்மன் சன்னதியை நெருங்கினாள் பவித்ரா.

கருவறையில் சுடர் விளக்கொளியில்... சர்வ அலங் கார பூஷிதையாக கருணை ததும்பி வழியும் விழி களோடு அருள் பாலித்துக் கொண்டிருந்த அம்மனைக் கண் குளிர சேவித்தாள்.

''சாமி பேருக்கு அர்ச்சனை பண்ணிடுங்க'' என்றபடி அர்ச்சனைக் கூடையை நீட்டினாள்.

காயாம்பூ, ''பெரிய தனக்காரர் வீட்டு உபயம்'' என்று சொன்னதைக் கேட்டதுமே... அவளுக்கு இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

கற்பனையில் சுந்தர் பற்கள் பளிச்சிட சிரித்து விட்டு மாயமாய் மறைந்தான்.

'தாயே! இதென்ன சோதனை? எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் நான் தாங்கிக் கொள்வேன்.

ஆனால் நான் மனதைப் பறி கொடுத்துவிட்டு தவித்துக் கொண்டிருக்கிறேனே? எனக்கு ஏன் இந்த அவஸ்தை?

அப்பா, வீட்டை விற்று விரைவில் என்னைக் கரை யேற்றி விட வேண்டும் என்ற தீர்மானத்தில் இருக்கிறார்.



நானோ மனதில் உள்ளதைச் சொல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவியாய் தவித்துக் கொண் டிருக்கிறேன்.

என் பொருட்டு அவர் வீட்டை விற்கப் போவதை நினைத்தாலே... தாங்க முடியவில்லையே?

நல்ல வரன் திடுதிப்பென்று வந்து விட்டால்...? துரித கதியில் வீட்டை விற்று, என் கல்யாண ஏற்பாடுகளைத் துவங்கி விடுவாரே?

இன்னொருவனுக்கு நான் மாலையிட முடியுமா?

மறுத்துப் பேசவும் என்னால் முடியாதே?

இருதலைக் கொள்ளி எறும்பு போல் தவிக்கிறேனே?

இந்தப் பேதை படாத பாடு படுகிறேனே? அம்மா! தாயே! தயை கூர்ந்து கண் திறந்து பாரம்மா...

எனக்கு நல்ல வழி காட்ட மாட்டாயா அம்மா?

இந்த சிக்கலான பிரச்சினைக்கு ஒரு தீர்வு இல் லையா?

ஆயிரம் கண் கொண்டவ்ளே! உன் கடைக்கண்ணால எனக்கு அருள் புரியணும் தாயே!

அவரை மறக்கிற சக்தியைக் கொடு... என் மனசு ஒரு வெள்ளைக் காகிதமா பவித்திரமா மாறணும்...''

கண்ணீர் மல்க, மனம் உருக, உள்ளம் கசிய... கைகூப்பி வேண்டிக் கொண்டாள் பவித்ரா.

அர்ச்சனையை முடித்து தீபாராதனை காட்டும் போது... வைத்த கண் வாங்காமல் அம்மனையே உற்று நோக்கி னாள்.

அம்மனின் கிரீடத்தில் அலங்காரமாக சொருகி வைக்கப்பட்டிருந்த பன்னீர் ரோஜா சட்டென்று நழுவி... கீழே இருந்த பீடத்தில் விழுந்தது.

திகைத்துப் போய் விழிகள் விரியப் பார்த்தாள்.

தீபாராதனைத் தட்டுடன் அந்தப் பூவையும் எடுத்துக் கொண்டு வந்தார் அர்ச்சகர்.

''உனக்கு இனிமே நல்ல காலம்தான்! அம்மன் உன்னோட வேண்டுதலுக்கு செவி சாய்ச்சுட்டா... அம்பாளோட கிரீடத்திலிருந்து இந்தப் பூ விழுந்தது. இந்தா... வாங்கிக்க!

''அந்தத் தாயோட அருள் உனக்குப் பரிபூரணமா கிடைச்சாச்சு. கவலைப்பட வேணாம்...'' அவளது கலங்கிய கண்களைப் பார்த்து விட்டு முறுவலித்தார் அர்ச்சகர்.

''நன்றி ஐயா'' பவ்யமாய் பூவை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''பூசாரி ஐயா! இது நம்ம தேவகி அம்மாளோட அண்ணன் பொண்ணு... கொஞ்ச காலம் இந்த ஊருல இருக்கப் போகுது. இனிமே அடிக்கடி கோவிலுக்கு வரும். நீங்க சொன்னதைக் கேட்டா... தேவகி அம்மா ரொம்ப சந்தோஷப்படுவாங்க...

''சரி! அந்தப் பூவை மொதல்ல தலையில வையி! அர்ச்சனைக் கூடையை வாங்கியாச்சுல்ல? போலாமா? பிரகாரத்தை சுத்திட்டு பிரசாதம் வாங்கிட்டுப் போலாம்'' என்ற காயாம்பூவை ஏறிட்டாள்.

''பிரகாரத்தைச் சுத்திட்டு நா வேணும்னா... மண்டபத்துத் தூணோரமா உட்கார்ந்திருக்கேன். நீங்க போய் பிரசாதம் வாங்கிட்டு வர்றீங்களா?''



''சாமி பிரசாதத்தை வாங்கிக்கிறதுக்குப் போயி... கூச்சப் படலாமா தாயீ? பேசாம வா என் கூட...'' உரிமையாய் அதட்டி விட்டு முன்னே நடந்தாள் காயாம்பூ.

''பெரிய தனக்காரர் நல்லா நடமாடிட்டு இருந்த வரைக்கும் தினமும் கோவிலுக்கு வந்துடுவாரு... அவ்ளோ பக்தி! ரொம்ப நல்ல மனுஷன்... பிரசாத வினியோகம் முடியற மட்டும் இருந்துட்டுப் போவாரு...

''ஏழை பணக்காரங்க வித்தியாசமெல்லாம் பார்க்க மாட்டாரு. கனிவா, அன்பா அவரு பேசுறதைப் பார்த்தாலே... கையெடுத்துக் கும்பிடத் தோணும். பெரிய தனக்காரர் சொக்கலிங்கம் மனசளவில சொக்கத் தங்கம் தான்...

''ஆனா அவுக சம்சாரம் மீனாட்சியம்மா... நேர் எதிர்ப்பதம் மனுஷாளு மக்களை மதிக்கவே மாட்டாக...''

''அ... அப்படியா?'' அவளையும் அறியாமல் ஆர்வமாய் கேட்டு விட்டாள் பவித்ரா.

அடுத்தவர்களின் தலையை உருட்டுவதையோ... வம்பு தும்பு சமாச்சாரங்களைப் பேசுவதையோ... பவித்ரா என்றுமே விரும்பியதில்லை... அதில் கடுகளவு கூட ஆர்வம் காட்டியதே இல்லை.

அப்பேர்ப்பட்டவள் இன்று காயாம்பூ சொல்லும் சங்கதியைக் கேட்க ஆர்வம் காட்டுகிறாளே?

சுந்தரின் குடும்பத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதில்... கட்டுக்கடங்கா ஆவல் தனக்கு ஏற்பட்டதை எண்ணி... அவளுக்கே வியப்பாய் இருந்தது.

''மீனாட்சியம்மாளுக்கு தான் பரம்பரை பணக்காரின்னு ரொம்ப ஆணவம்... அவுக அன்பா வேலையாட்கள் கிட்ட நடந்ததேயில்ல... பயங்கர கண்டிப்பு!

''ஒருத்தரையும் மதிச்சதில்ல... மனசுலே கொஞ்சம் கூட கருணை கிடையாது. மனசுல தான் கருணை இல்லையின்னா... அந்தம்மா கையும் கருணைக் கிழங்கு... படு கருமி!

''கோவிலுக்கு வந்தாக் கூட யாரையும் திரும்பிக்கூட பார்க்க மாட்டாங்க... புருஷனையே மதிக்க மாட்டாங்க... அப்புறம் எப்படி மத்தவங்களை மதிப்பாங்க?''

''அப்படியா? ரொம்ப ஆச்சரியமா இருக்கே? கட்டின கணவரைக் கூடவா மதிக்காம நடந்துப்பாங்க?''

பட்டணத்திலிருந்து வந்திருக்கும் படித்த இளம் பெண்... தன்னைப் பார்த்து ஆவலாய் சுவாரசியமாய் கேள்விக் கணைகளைத் தொடுத்ததும்... காயாம்பூவுக்கு குஷி பிய்த்துக் கொண்டு போனது.

''என்ன தாயி? இப்படிக் கேட்டுப்புட்டே? அது ஒரு பெரிய கதை... நீ இனிமே இங்க தானே இருக்கப் போறே... தெனமும் நான் வேலைக்கி வரச்சே... அவுக கதையை ஆதியோட அந்தமா விரிவா சொல்றேன்...

''இப்ப சுருக்கமா சொல்றேன்... சொக்கலிங்கம் ஐயா நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவரு... மீனாட்சி அம்மா பரம்பரைப் பணக்கார வர்க்கத்துல பொறந்தவங்க...

''கணவரை துச்சமாத்தான் நெனப்பாங்க... ஆனால் அந்தம்மாளுக்கு அவங்க புள்ளைன்னா... ரொம்பவே உசுரு தாயி! ரொம்ப வருஷமா குழந்தையே இல்லாம தவமிருந்து பெத்த புள்ளைங்கிறதால... சின்னய்யா சுந்தர் மேல... அவுகளுக்கு அலாதிப் பாசம்...

''ஜாடையிலும் நிறத்திலும் அப்படியே தன்னை உரிச்சுக்கிட்டு வந்த புள்ளை மேல அவுகளுக்கு கொள்ளைப்



பிரியம்! ஆனா... குணத்திலே அப்படியே அப்பாவைக் கொண்டு பிறந்துட்டதால... உள்ளூர வருத்தமாம்...''

பவித்ராவுக்கு 'அப்பாடா' என்று பெருத்த நிம்மதி ஏற்பட்டது நிஜம்!

நாள் முழுவதும் சுந்தரைப் பற்றிய விவரங்களைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் போன்றதொரு ஆவலில்... அவளது இதயம் எம்பிக் குதித்தது.

''சின்னய்யா சுந்தருக்கு அவங்கப்பாவைப் போலவே... கடவுள் பக்தி ஜாஸ்தி... அது மட்டுமில்ல... அடக்கம், பண்பு, மத்தவங்களை மதிக்கிற தன்மை, இரக்க சுபாவம், கருணைன்னு... அப்படியே சொக்கலிங்கம் ஐயாவை உரிச்சுட்டு வந்துட்டதால... இந்த ஊருல அவருக்குத் தனி மரியாதை தான்!

''கோவிலுக்கு வந்தா... அவரும் கூடச் சேர்ந்து பிரசாதத்தை வினியோகம் பண்ணிட்டுத் தான் போவாரு... தெரியுமா? ஆச்சரியமா இருக்குல்ல?

''அதோ... நான் சொன்னது எவ்ளோ தூரம் நிஜம்னு நீயே பார்த்துக்க... அதோ... பஞ்சாமிருதத்தை தொன்னையில வச்சுக் குடுக்கிறாரே ஒரு நடுத்தர வயசுக்காரரு?

''அவருக்குப் பக்கத்துல உயரமா சிவப்பா... சுருட்டைத் தலைமுடியோட சிரிச்ச முகமா... நறுக்கின வாழையிலைத் துண்டுலே பொங்கல் பிரசாதத்தை வச்சு வினியோகம் பண்றாரே? அவரு தான் சின்னய்யா சுந்தர்!

''வா... நமக்கு முன்னே அஞ்சாறு பேரு இருக்காங்க... அப்படியே அவங்களோட சேர்ந்து நின்னு... பிரசாதத்தை

வாங்கிட்டுப் போயிடலாம்...'' அவசரமாய் முன்னே நடந்து லயனில் சேர்ந்து நின்று விட்டாள் காயாம்பூ.

பவித்ராவுக்கு மறுக்கத் தோன்றவில்லை. ஒன்றரை வருடங்களுக்குப் பின்பு... தன் மனம் கவர்ந்தவனை நேரில் மீண்டும் பார்க்கும் தருணம் ஏற்பட்டதை எண்ணி... நெஞ்சுக்குள் ஒரு மகிழ்ச்சி நீரூற்று குபுகுபு வென்று பொங்கி உயர்ந்தது.

## 7

பவித்ரா வியப்பின் விளிம்பிற்கே சென்று விட்டிருந் தாள். காயாம்பூவிற்கு பின்னால் நின்றபடி... சுந்தரையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

பெரிய தனக்காரரின் ஒரே வாரிசு! பெரிய கோடீஸ் வரன் என்ற தகுதிகள் இருந்தும் துளியளவுகூட கர்வம் தலை தூக்காமல்... பந்தா சிறிதுமின்றி அனைவரிடமும் அவன் பேசிக் கொண்டிருந்தான்.

பிரசாதத்தை வினியோகிக்கும்போதே... ஒவ்வொரு வரையும் நலம் விசாரித்து உரிமையுடன் முகம் மலரப் பேசிய விதம்... மனதை ஈர்த்தது.

கியூ நகர்ந்து சுந்தரின் அருகில் நெருங்க நெருங்க... அவளுக்கு இதயத் துடிப்பு அதிகரிக்கத் தொடங்கியது.

''அட! நல்லாயிருக்கீங்களாம்மா? பார்த்து ரொம்ப நாளாச்சே? உடம்புக்கு முடியலையா என்ன?'' நலம்



விசாரித்தபடி தாராளமாக பொங்கலை வாழையிலையில் வைத்து இதமாய் புன்னகைத்தான் சுந்தர்.

''ஆமாங்க சின்னய்யா... வயசாகுதுல்ல? அதான் அப்பப்ப முடியாம போயிடுது. ஞாபகமா அக்கறையா நலம் விசாரிக்கிறீக? உங்க நல்ல மனசுக்கு ஒரு குறையும் வராதுய்யா...''

காயாம்பூ சிரித்தபடி பவ்யமாய் நகர்ந்தாள். அதுவரை அவளது முதுகுக்குப் பின்னால் நின்றிருந்தவளை சுந்தர் கவனிக்கவில்லை.

காயாம்பூ நகர்ந்து சென்றதும், சிற்பி செதுக்காத பொற் சிலையாய் பார்வையைத் தழைத்தபடி நின்றிருந்த வளைக் கண்டதும்... சுந்தருக்கு தூக்கி வாரிப் போட்டது.

''மைகாட்! இது கனவா? நனவா?'' அவனையும் அறியாமல் மெல்ல முணுமுணுத்து விட்டான்.

நல்ல வேளையாய் கியூவில் பவித்ரா தான் கடைசி யாய் நின்றிருந்தாள்.

மென்மையான குரலில் ஆச்சரியம் ததும்ப... அவன் முணுமுணுத்ததைக் கேட்டதும்... மெல்ல நிமிர்ந்து அவள் அவனை ஏறிட்டாள்.

நான்கு விழிகளும் நேசமாய் மோதிக் கொண்டன.

அவனது இமைகள் இமைக்க மறந்தன.

ஆரஞ்சு வண்ணப் பட்டுப் புடவையில்... அழகு தேவதையாய் கண்களை வசீகரித்தவளை மெல்லப் பார்வையால் அளவெடுத்தான்.

அன்று திருமணத்தில்... மணப் பெண்ணின் தோழி யாய் நின்றிருந்தவளைப் பார்த்த மாத்திரத்திலேயே...

அவனது இதயத்தில் அவள் சிம்மாசனம் போட்டு அமர்ந்து விட்டிருந்தாள்.

வெளிநாட்டில் எம்.பி.ஏ. படித்து விட்டுத் திரும்பியவன் தான் சுந்தர்.

அங்கு அவன் பார்க்காத அழகிகளா? ஏன்? அவனுக்குச் சொந்தமாக இயங்கும் அலுவலகங்களில்... எத்தனையோ அழகிகள் வேலை பார்க்கத் தானே செய்கின்றனர்?

ஆனால்... தங்க நிலவைப் போன்ற வட்ட முகமும், மருண்ட மான் விழிகளும் அவளது உருவமும்... உள்ளத்தில் 'பச்சக்' என்று கோந்து போட்டு ஒட்டின தினுசில் பதிந்து விட்டனவே?

அன்று... குருமூர்த்தி - தேவகி தம்பதியினரின் வீட்டுத் திருமணத்திற்கு... மணமக்களை வாழ்த்தச் சென்றவன் தான்...

இந்த மண்டபத்திலிருந்து வீடு திரும்பும்போது... தன் இதயத்தை இந்த அழகியிடம் தானே தொலைத்து விட்டுச் சென்றான்?

'தேவதையைக் கண்டேன்... காதலில் விழுந்தேன்' என்று அவனையும் அறியாமல் பலமுறை தனிமையில் பாடிக் கொண்டிருந்தானே?

'அதெப்படி? இன்று தான் அவளை நான் முதன் முறையாகப் பார்த்தேன். ஆனால் ஜென்ம ஜென்மமாய் இந்த தேவதைக்காகவே நான் காத்திருந்தது போன்ற பிரமை ஏற்படுகின்றதே?

யாரிவள்? பெயர் என்ன? குடும்பப் பின்னணி என்று எதுவுமே தெரியாது. மணப் பெண்ணுக்கும் இவளுக்கும் ஒரே சாயல் இருக்கிறது.



குரு மூர்த்தி தேவகி தம்பதியினருக்கு நெருங்கிய உறவுக்காரப் பெண்ணாக இருக்கலாம். எது எப்படியோ?

பார்த்த மாத்திரத்தில்... மனதை வருடித் திருடி விட்டாளே? இந்த உணர்வுக்கு என்ன பெயர்?

இதற்குப் பெயர் தான் காதலா?

அவனது இதயம் மகிழ்ச்சியுடன் முயலாய் துள்ளிக் குதித்து 'ஆமாம்' என்று மறுமொழி கூறியது.

'ஐயோ? எனக்குள் ஏனிந்த மாற்றம்? இது நாள் வரை என் மனதை க்ளீன் சிலேட்டாகத் தானே வைத்திருந்தேன்? ஆனால் இப்போது திருமண மண்டபத்தில் சந்தித்த பேரழகியின் உருவம்... அழுத்தம் திருத்தமாகப் பதிந்து விட்டதே?

முன் பின் தெரியாதவளை... என் மனம் விரும்புகிறது என்பதை அம்மாவிடம் நான் கூற முடியுமா?

கூறினால் அதற்கு அவர் சம்மதிப்பாரா?

தனது அந்தஸ்தையும் கௌரவத்தையும் என்றுமே அம்மா விட்டுக் கொடுத்ததில்லையே?

இப்போது கூட பெரிய பெரிய ஜமீன் குடும்பங்களிலிருந்து மணப் பெண்களின் ஜாதகங்களை வாங்கி வைத்துக் கொண்டு... வலை வீசித் தேடிக் கொண்டிருக்கிறாளே அம்மா?

கண்டமனூர் ஜமீன் குடும்பத்திலிருந்து பெண் எடுக்கலாமா? வெள்ளியங்கிரி எஸ்டேட் ஓனர் வீட்டிலிருந்து பெண் எடுக்கலாமா?' என்று மூளையைக் கசக்கிக் கொண்டிருக்கிறாள்.

அடிக்கடி அம்மா மீனாட்சி திருமணப் பேச்சை எடுக்கும் போதெல்லாம் ''அம்மா! ப்ளீஸ்... என்னை என் போக்குல விட்டுடுங்க...

''எனக்கு இப்போ கல்யாணம் பண்ணிக்கிறதிலே விருப்பம் இல்ல... உங்க இஷ்டத்துக்கு யாருக்காவது வாக்கு ஏதும் கொடுத்துடாதீங்க...

''அப்புறம் நீங்க தான் மன வருத்தத்துக்கு ஆளாவீங்க. சொல்லிட்டேன். உண்மையைச் சொல்லட்டுமா?

''எனக்கு என் அப்பாவோட நிலைமையைப் பார்த்துப் பார்த்து... மனசுக்குள்ளே வெறுப்பு மண்டிப் போச் சும்மா...

''அம்மா! நான் உங்க மனசை நோகடிக்கிறேன்னு நீங்க நெனச்சாலும் பரவாயில்ல... என் உள்ளத்துல புதைஞ்சு கிடக்கிற வேதனையை வெளிப்படையா சொல்றேன்...

''உங்க பிறவி குணத்தை நீங்க மாத்திக்க முடியாது. அப்பாவும் தன் சுயத்தை மாத்திக்க முடியாது.

''எதிரும் புதிருமான குணாதிசயங்களோட வாழ்ந்து நீங்க என்ன சுகத்தைக் கண்டீங்க?

''வேண்டாம்... எனக்கு மிராசுதாரர் வீட்டுப் பொண்ணோ... இல்ல ஜமீன்தார் குடும்பத்துப் பொண்ணோ... வேண் டவே வேண்டாம்.

''திமிர், ஆணவம், கர்வம், அகம்பாவம், டாம்பீகம், ஜபர்தஸ்து... இந்த குணாதிசயங்களோட இருக்கிற பொண்ணைக் கட்டிக்கிட்டு ஒப்புக்காக ஒரு வாழ்க்கை என்னால வாழ முடியாது.

''உங்களைக் குத்திக் காட்டறேன்னு நெனைக்க வேண் டாம். அப்பா எப்படியோ தன் காலத்தைத் தள்ளிட்டாரு...

''தனக்குள்ளே அவரு எவ்ளோ மருகினாருன்னு... எனக்குத்தான் புரியும்...

''இத்தனை வசதி இருந்தும் உள்ளூர கவலைப்பட்டே... அவருக்கு வியாதி வந்தாச்சு... காச நோய் வந்து வீட்டோட முடங்கிட்டாரு.

''எனக்கு அவரோட நிலைமை வர வேணாம். நான் இதுலே தெளிவாவே இருக்கேன்...'' என்று பேசி வாயை அடைத்திருந்தும் என்ன பிரயோஜனம்?

''டேய் சுந்தர் கண்ணா! நம்ம பாலா மணி பொண்ணு தீபு இருக்காளே? அவளைப் பேசி முடிக்கட்டுமா? பாலா மணி கூட இதே எண்ணத்துல என்னைச் சுத்திச் சுத்தி வர்றா...

''தீபு படிச்சவ... பார்க்க லட்சணமா நாகரீகமா இருக்கிறா... நீ சொன்ன மாதிரி அவ ஜமீன் குடும்பத்தையோ... மிராசுதார் குடும்பத்தையோ சேர்ந்தவ இல்லப்பா...

''வசதி நம்மளவுக்கு இல்லாட்டியும்... சொல்லிக்கிடற மாதிரி கவுரவமான குடும்பம் தான்... இதெல்லாத்தையும் விட... பாலாமணி நமக்கு தூரத்துச் சொந்தம் தான்... உனக்கே தெரியுமே? 'பெரிய குளத்திலே' இருந்து அடிக்கடி ஓடி வந்துடறா... 'அண்ணி.. அண்ணி'ன்னு உயிரை விடறா...

''அவ பொண்ணு தீபுவை நாம மருமகளாக்கிட்டா... காலத்துக்கும் நன்றியோட இருப்பாங்க...''

''இப்போதைக்கு என்னை ஆளை விடுங்க'' கையெடுத்துக் கும்பிட்டு விட்டு... தன் அறைக்குள் புகுந்து கதவைச் சாற்றிக் கொண்டு, 'இப்பேர்ப்பட்ட

அம்மா கிட்ட நான் என் மனதிலுள்ள ஆசையைச் சொல்ல முடியுமா?

அந்த அழகியைப் பற்றி நான் சொன்னால் என்ன ஆகும்?

தாம் தூம் என்று கத்தி இந்த பங்களாவையே இரண்டு படுத்தி விட மாட்டாளா?

'உங்க புள்ளையோட மனசை இப்படிக் கெடுத்து வச்சிருக்கீங்களே?' என்று அப்பாவை வசை பாடி... அவரது மனதைக் குத்திக் கிழித்து ரணப்படுத்தி விட்டுத் தான் மறு வேலை பார்ப்பாள்.

இப்போதைக்கு நான் மூச்சு காட்டப் போவதில்லை.

அந்தப் பெண்ணும் என்னை நேசிக்கிறாளா? தெரிய வில்லை?

'உண்மையான காதல் ஜெயிக்கும்' என்று பெரிய வர்கள் சொல்லுவார்களே?

நான் அவளை மனதாரக் காதலிக்கிறேன். அந்த உண்மையான அன்பிற்கு சக்தியிருந்தால்... எங்களை சேர்த்து வைக்கட்டும்.

'இன்னாருக்கு இன்னார் என்று... எழுதி வைத்தானே தேவன் அன்று! என்று கவிஞர் பாடி வைத்தது போல்... எனக்கும் அவளுக்கும் இறைவன் முடிச்சுப் போட்டு வைத்திருந்தால்?...

அதை யாராலும் மாற்ற முடியாதே?

நடப்பது நடக்கட்டும் என்று பகவான் மீது பாரத்தைப் போட்டு நடக்க வேண்டியது தான்...



அந்த தேவதை எனக்காகவே பிறந்திருந்தால்... நிச்சயமாக என்னைத் தேடி வருவாள்.

அவளது வருகைக்காக... எத்தனை யுகங்கள் வேண்டு மானாலும் நான் தவமிருக்கத் தயார்!

ஒரு வேளை... மனதில் மொட்டு விட்டு அரும்பிய காதல், ஒரு தலையாகவே கருகி விட்டால்...?

இதை நினைக்கும் போதே... ஆயிரம் தேள்கள் ஒரு சேரக் கொட்டியது போலிருக்கிறதே?

அப்பப்பா... என்ன வேதனை?

ஒரே நாளில்... அந்த தேவதையை சில விநாடிகள் பார்த்த மாத்திரத்தில் முகிழ்த்த காதல் தான்!

ஆனால் என் காதல் உண்மையானது. புனிதமானது. பவித்திரமானது.

இந்த பவித்திரமான காதல்... என் தேவதையைக் கொண்டு வந்து என்னிடம் சேர்க்கும்.

அவள் நிச்சயமாக வந்தே தீருவாள் என்று தனக்குத் தானே பலமுறை சமாதானம் செய்து கொண்டது... சுந்தரின் நினைவிற்கு வந்தது.

கோவிலில் எதிர்பாராத தருணத்தில் அவளைச் சந்தித்ததும் அவனுக்கு 'இது கனவா? நிஜமா?' என்று சந்தேகம் தோன்றியதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

''என்ன சின்னய்யா தெகச்சுப் போயிட்டீங்க? அப் படியே இறந்து போன வசுந்தரா அம்மா, நேர்ல வந்தது மாதிரி இருக்குன்னு பார்க்கிறீகளா?

''இது பவித்ரா! நம்ம தேவகி அம்மாளோட அண்ணன் பொண்ணு. வீட்டுல பெரியவங்களை நல்லபடியாக

கவனிச்சுக்கிடறதுக்காக சென்னையிலேர்ந்து வந்திருக்குது. படிச்ச பொண்ணு!

''பவிம்மா! இவரு சின்னையா சுந்தர். நான் சொன்னேன்ல? கும்பிட்டுக்க... இந்த ஊருல இருக்கிற முக்கால் வாசிக் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்து படியளக்கிறவங்க...

''நீயே பார்த்தேயில்ல? என்னையும் ஒரு பொருட்டா மதிச்சு குசலம் விசாரிக்கிறாக பாரு... ஐயா ரொம்ப தங்கமான மனசு படைச்சவரு தாயீ...'' பரஸ்பரம் அறிமுகப் படுத்தி வைத்தாள் காயாம்பூ.

பரஸ்பரம் இருவரும் ஏறிட்டுப் பார்த்து கை கூப்பி, புன்னகைத்துக் கொண்டபோது... இதயங்கள் மீண்டும் தடம் புரண்டு இடம் மாறின.

கஷ்டப்பட்டு தன் பார்வையை மரியாதை நிமித்தம் தழைத்துக் கொண்டபடி பிரசாதத்தை இலையில் வைத்து நீட்டினான்.

பொன்னிறமாய் மெத்தென்ற பிஞ்சுக் கரத்தினைப் பற்றி முத்தமிட வேண்டும் என்று எழுந்த ஆவலை... சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, பிரசாதத்தை அவளது கையில் வைத்தான்.

தற்செயலாய் அவளது மென் கரத்தை அவனது விரல்கள் ஸ்பரிசித்தன.

''நன்றி'' என்று முணுமுணுத்து விட்டு சட்டென்று நடந்து விட்டாள் பவித்ரா.

''எக்ஸ்க்யூஸ் மீ! மிஸ் பவித்ரா!''

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.



''பெரியவங்களுக்கு உடம்புக்கு முடியலேன்னு சொன்னாங்கல்ல? நான்... அவங்களை விசாரிச்சதா சொல்றீங்களா? ப்ளீஸ்?''

''ஓ... அவசியம் சொல்லிடறேன்... எங்க அத்தையையும் மாமாவையும் அக்கறையா விசாரிச்சதுக்கும் நன்றி.''

மீண்டும் ஒரு பார்வைப் பரிமாற்றம் நிகழ்ந்தபோது... இருவரின் மனதிற்குள்ளும் சந்தோஷ மழை பூப்பூவாய் தூற ஆரம்பித்தது.

வீட்டிற்குச் சென்று அர்ச்சனைக் கூடையை பூஜையறையில் வைத்து விட்டு பிரசாதத்தை அத்தையிடம் பவ்யமாய் கொடுத்து விட்டு... கோவிலில் நடந்ததை மெல்லக் கூறினாள்.

அத்தையும் மாமாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு பூரித்துப் போனார்கள்.

''சுந்தர் தம்பி எங்களை விசாரிச்சதை நெனச்சா ரொம்பவே சந்தோஷமா இருக்கு... பெரிய தனக்காரரைப் போலவே தம்பிக்கு தங்கமான மனசு... பார்த்துக்கிட்டே இரேன்.

''விசாரிச்சதோட நிக்க மாட்டாரு... அவருக்கு மனசு கேட்காது. இன்னும் இரண்டொரு நாள்லே நேர்லேயே பார்க்க வந்தாலும் வந்துடுவாரு...'' பெருமிதமாய் சிரித்தார் குருமூர்த்தி.

''ஹூம்! ஆதரவற்ற முதியவர்களுக்கு ஆசிரமம் கூட நடத்தறாரு. தெரியுமா? அறக்கட்டளை தொடங்கி அதன் மூலமா... நிறைய மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை தந்து மேற்படிப்பு படிக்க உதவி செய்றாரு...

''ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு, ஏழைப் பெண் களுக்குத் திருமணச் செலவுன்னு... ஏகப்பட்ட தர்ம காரியங்களைப் பண்ணிட்டு இருக்காரு...

''சமீபத்துல அவங்கம்மா பேர்ல ஒரு ஜெனரல் ஹாஸ்பிடல் ஒண்ணையும் தொடங்கியிருக்காருன்னா பார்த்துக்கோயேன்.

''அந்தப் பிள்ளையைக் கட்டிக்க... எந்தப் புண்ணிய வதிக்கு கொடுத்து வச்சிருக்கோ... தெரியலை...'' தேவகியும் தன் பங்குக்கு பாரர்ட்டுப் பத்திரம் வாசித் தாள்.

பவித்ராவிற்கு சுந்தரின் மீது நிமிடத்திற்கு நிமிடம் மதிப்பும், மரியாதையும், நம்பிக்கையும், காதலும் பெருகிக் கொண்டே போயின.

கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் மனம் ஒரு இன்பப் பரவசத்தில் வேகமாய் துடித்தது.

சுந்தருடன் மணமேடையில் சேர்ந்து அமர்ந்து விட் டது போன்றதொரு கற்பனையில் அவள் ஆடிப்போய்... ஆதரவுக்கு அடுப்பு மேடையைப் பற்றிக் கொண்டு நின்றாள்.

'சுந்தரும் என்னை நேசிக்கிறார். இது ஒரு தலைக் காதல் அல்ல... இது பூர்வ ஜென்ம பந்தம் தான்... அன்று, பார்த்த மறுகணமே... என்னைப் போலவே அவரும் தன் மனதைப் பறி கொடுத்து விட்டார் போலும்!

இன்று என்னை எதிர்பாராமல் சந்தித்ததும்... அவரது விழிகளில் ஆச்சரியமும், திகைப்பும்... கட்டுக் கடங்காத மகிழ்ச்சியும், காதலும் மிதப்பதைக் கண்டேனே?



அவர் பார்த்த பார்வையின் பொருள் என்ன?

இது காதல் தான்!

'பார்வை ஒன்றே போதுமே... பல்லாயிரம் சொல் வேண்டுமா?' என்று கவிஞர் சும்மாவா பாடி வைத்தார்?

காயாம்பூவின் மூலம் என் பெயரைத் தெரிந்து கொண் டதும்... அவரது முகத்தில் தான் எத்தனை ஆனந்தம்?

பெரியவர்களின் உடல் நலனை விசாரிக்கும் சாக் கில்... வேண்டுமென்றே அவளது பெயரை உரிமையாய் உச்சரித்தாரே?

'மிஸ். பவித்ரா!... பவித்ரா'... அவரது குரல் திரும்பத் திரும்ப என் செவிகளில் ஒலிக்கின்றதே?

இது ஒரு தலைக் காதல் அல்ல!

சுந்தர் மிகவும் நல்லவர், உத்தமர், நேர்மையானவர்... மனித நேயம் படைத்தவர், இரக்க சுபாவம் கொண்டவர் என்று தெரிந்து விட்டது.

இன்று அம்மனை வணங்கி விட்டு வந்ததும்... மனதிற்குத் தான் எத்தனை நிம்மதி?

அம்மனின் சிரசிலிருந்து பூ விழுந்ததே? மிக நல்ல சகுனம் என்று அர்ச்சகர் கூறினாரே?

என் காதல் நிறைவேறுமா?

சுந்தர் என்னை விரும்புகிறார்... நிச்சயம் என்னைக் கைவிட மாட்டார்...'

சடுதியில் சமையலை முடித்து, பெரியவர்களுக்குப் பரிமாறி விட்டு மாத்திரை மருந்துகளை எடுத்துக் கொடுத்து சாப்பிட வைத்தாள்.

அவளது மனம் மகிழ்ச்சி வெள்ளத்தில் தத்தளித்தது.

காதல் வயப்பட்ட மனம்... வேறு எதைப் பற்றியும் சிந்திப்பதில்லை. விரைவில் பிரச்சினை பூதாகாரமாக வெடிக்கும் என்று அவள் கனவிலும் கருதவில்லை.

## 8

''அத்தே! என்னத்தே? பருப்பு சரியாகவே வேக மாட்டேங்குது. இத்தனைக்கும் குக்கர்லே தான் வேகப் போட்டேன். ரெண்டு வாட்டி குக்கர்லே தண்ணி விட்டு அடுப்புலே ஏத்தியிருக்கேன்...''

மறுநாள் காலை டிபனுக்கு இட்லி குக்கரை அடுப்பி லேற்றி விட்டு... சாம்பாருக்கு காய்கறிகளை நறுக்கி வைத்து விட்டு... அத்தை தேவகியிடம் வந்து கேட்டாள் பவித்ரா.

''ஒரு ஸ்பூன்லே விளக்கெண்ணெய் எடுத்து பருப்பு விட்டு... வேகப் போட்டா... மாயமா பூவா வெந்துடும். ருசியாவும் இருக்கும். வரவர குழாய் தண்ணி கொஞ்சம் உப்புக் கரிச்சுக்கிட்டு வருது. என்ன செய்ய?

முன்னெல்லாம் சமையலுக்குத் தேவையான தண் ணியை பின்னாடி வாய்க்கால்லே இருந்து எடுத்துட்டு வருவது வழக்கம். பழைய வேலைக்காரி வர்றதில்ல...

'காயாம்பூ குடத்துத் தண்ணியை சுமந்துட்டு வர முடியாதும்மா'ன்னு கட் அண்ட் ரைட்டா சொல்லிட்டா... வேற என்ன செய்ய?''



''மாமாவுக்கு ஹார்ட் பிராப்ளம் இருக்கே? விளக் கெண்ணெய் யூஸ் பண்ணினா உடம்புக்கு ஒத்துக்காதே அத்தே?''

''கேன் வாட்டர் தண்ணியை எடுத்து உபயோகி! கூடுதல் கேன் வாங்கிட்டாப் போச்சு!

எல்லாப் பொறுப்பும் உன் கிட்ட விட்டாச்சு. நீ எப்படி சமைச்சுப் போட்டாலும் சரிதான்'' முறுவலித்தாள் தேவகி.

''உங்ககிட்ட ஒண்ணு கேட்கணும்னு நெனச்சுட்டிருந் தேன். சென்னையில சதா தண்ணிப் பஞ்சம்னு உங் களுக்கே தெரியுமே? வேலையை முடிச்சதும் தோட் டத்துக்குப் பின்னால இருக்கிற வாய்க்கால் கரை வரைக்கும் போயிட்டு வரட்டுமா?

''கார்த்தாலேயே நான் குளிச்சாச்சு. அட்லீஸ்ட் வாய்க் கால் தண்ணியில காலையாவது நனைச்சுட்டு வர லாம்னு ஆசையா இருக்கு அத்தே... நீங்க அனுமதி கொடுத்தா... வேலையை முடிச்சதும் அங்கே போயிட்டு உடனே திரும்பிடறேன்.''

''ஓ... உனக்கு இப்படியொரு ஆசையா? நம்ம வீட்டுக்குப் பின்னால போற வாய்க்கால் பாதையை... பெரிய தனக்காரர் தான் அமைச்சாரு... அங்க இருக்கிற இறங்கு துறை... அரச மரத்துக்குப் பக்கத்துல இருக்கிற ஏழு கன்னி மாரியம்மன் கோவில் எல்லாம் அவங்க குடும்பத்தைச் சார்ந்தது தான்.

''அவங்க குல தெய்வமே அது தான்னு சொல்லு வாங்க... அந்த தெய்வம் ரொம்ப சக்தி வாய்ந்ததுன்னு எல்லோருக்கும் ஒரு நம்பிக்கை! ஆம்பிளைங்க யாரும்

அந்தப் பக்கம் போக மாட்டாங்க... இங்கேயிருந்து கூப்பிடு தொலைவு தான்!

''பெரிய தனக்காரர் குடும்பத்தைச் சேர்ந்தவங்க அடிக்கடி வருவாங்க. இந்த ஊருல கல்யாணம் ஆகாத கன்னிப் பெண்கள்... அந்த ஏழு கன்னி மாரியம்மனுக்கு ஒன்பது நாட்கள் நெய் விளக்கேத்தி ஒன்பது முறை வலம் வந்தா... நல்ல கணவன் கிடைப்பான்கிற நம்பிக் கையில... பிரார்த்தனைக்காக அங்க போறதுண்டு...

''ஆங்... இப்பத்தான் எனக்கே தோணுது. நீயும் தொடர்ந்து வாய்க்கால் கரைக்குப் போய் ஏழு கன்னி மாரியம்மனுக்கு ஒன்பது நாள் நெய் விளக்கேத்திட்டு வாயேன்!

''உன் ஆசையும் நிறைவேறும்... அதே சமயம் வேண்டுதல் நிறைவேறி நல்ல கணவனும் கிடைச்சா நல்லது தானே?

''பவள மல்லி மாலையைக் கோர்த்து வச்சே இல்ல? இன்னமும் நான் சாமி படத்துக்கு சாத்தலை... அதை எடுத்துட்டுப் போ... மறக்காம அகல் விளக்கையும், நெய், திரி கற்பூரம், ஊதுபத்தி எல்லாத்தையும் அர்ச்சனைக் கூடையில வச்சு எடுத்துட்டுப் போ பவி!''

''சரிங்க அத்தே.''

பவித்ராவுக்கு, அத்தை அனுமதி அளித்ததும் மகிழ்ச்சி பிடிபடவில்லை.

மளமளவென்று வேலையை முடித்து விட்டு... பூஜை அறைக்குச் சென்று தேவையான பூஜை சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டு அர்ச்சனைக் கூடையுடன் கூடத்திற்கு வந்தாள்.



''நான் போயிட்டு வந்துடட்டுமா அத்தே?''

''வயசுப் பொண்ணை தனியா அனுப்பறதுக்கு எப்படியோ இருக்கே? காயாம்பூ கடைக்குப் போயிருக் காளா? அவ வந்ததும் உனக்குத் துணையா அனுப்பி வைக்கிறேன்... இல்லேன்னா... நானே மெல்ல உன் கூட வரட்டுமா பவி?

''நீ இங்க வந்ததும் எங்க ரெண்டு பேருக்கும் ஆயிரம் யானை பலம் வந்தது மாதிரி... மனசுல ஒரு தெம்பு வந்திருக்கு.

''வசு உன் ரூபத்துல நடமாடிட்டு இருக்காள்னு ஒரு திருப்தி! உடம்புல பாதி வியாதி பறந்த மாதிரி இருக்கு பவி.''

''இதைக் கேட்கிறதுக்கே ரொம்ப சந்தோஷமா இருக்கு அத்தே! இங்கே இருந்து கூப்பிடு தொலைவில தானே வாய்க்கால் கரை இருக்கு? நானே போயிட்டு வந்துட றேன். உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்?

''அன்னிய ஆம்பிளைங்க யாரும் இறங்கு துறைப் பக்கம் வரமாட்டாங்கன்னு சொன்னீங்களே அத்தே? அப்புறம் எதுக்கு என்னைத் தனியா அனுப்பறதுக்கு இவ்ளோ தயங்கறீங்க?

''சென்னையில காலேஜுக்கு நான் தனியாத்தான் போய் வந்தேன்.''

''என்னோட தயக்கத்துக்கு காரணமே வேற... வயசுப் பொண்ணு வாய்க்கால் கரை, தோப்பு பக்கமா தனியா போனா... காத்து கருப்பு ஏதாவது அடிச்சிடுமோன்னு பயம்... அதான்.''

'களுக்' என்று சிரித்து விட்டாள் பவித்ரா.

''இது கம்ப்யூட்டர் யுகம் அத்தே! இப்பவும் காத்து, கருப்பு நடமாடுதுன்னு நீங்க நம்பறதை நெனச்சா... சிரிப்பு பொத்துக்கிட்டு வருது.

''சாரி அத்தே! நான் உங்களை கேலி பண்றதா நெனக்க வேணாம். இதோ பாருங்க... நெத்தியில விபூதி வச்சுட்டிருக்கேன். நமக்கு என்னிக்கும் பகவான் துணையிருப்பாருன்னு நம்பறேன்... எனக்கு ஒண்ணும் ஆகாது அத்தே... நா போயிட்டு வரட்டுமா?''

அத்தை அரை மனதாய் தலையாட்டினாள்.

தோட்டத்து மூங்கில் வேலியைத் தாண்டி... இருபுறமும் செடிகளும் புல்லும் மண்டிக் கிடந்த வாய்க்கால் ஓரப்பாதை மீது மெல்ல நடந்தாள்.

ஆள் நடமாட்டம் இன்றி வெறிச்சென்றிருந்த பாதையில் நடந்து... இறங்கு துறையை அடைந்தாள்.

'கால்களை அலம்பி விட்டு அதன் பின் நெய் விளக்கேற்றலாம்' என்ற முடிவில்... படிகளில் மெல்ல இறங்கி... நீரில் மூழ்கியிருந்த கடைசிப் படி மீது காலை வைத்தபோது... சில்லென்ற குளுமை சிலிர்க்க வைத்தது.

எங்கு திரும்பினாலும் கண்களை ஈர்த்த பசுமை... அவளை லயிக்கச் செய்தது.

படிகளில் ஏறி அரச மரத்தருகே சென்றாள். விடியற் காலையிலேயே பூஜையை முடித்து விட்டுக் கோவில் கதவைப் பூட்டி விட்டுச் சென்றிருந்தார் அர்ச்சகர்.

கம்பிக் கதவுக்குப் பின்னால் அரளிப் பூ மாலை அலங்காரத்தில் காட்சி தந்த ஏழு கன்னி மாரியம்மனை வணங்கி விட்டு... கம்பிக் கதவில் பவள மல்லி



சரத்தைத் தொங்க விட்டு விட்டு... அகல் விளக்கில் நெய்யை ஊற்றி, மனமுருகப் பிரார்த்தித்துக் கொண்டு தீபமேற்றினாள்.

உண்டிப் பெட்டி அருகே பக்தர்களின் உபயோகத்திற்காக வைக்கப்பட்டிருந்த சிறு கிண்ணத்திலிருந்த குங்குமத்தைத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டு... கோவிலை ஒன்பது முறை வலம் வந்தாள்.

கடைசி வலம் வரும் சமயம்... ''ஹலோ! மிஸ். பவித்ரா'' என்ற குரலைக் கேட்டு அதிர்ந்து திரும்பிப் பார்த்தாள்.

''என்னடா இது? திடுதிப்புன்னு இவன் வந்து நிக்கிறானேன்னு பார்க்கிறீங்களா? இது எங்க குல தெய்வம்! இந்த இறங்கு துறையையும் கோவிலையும் எங்க தாத்தா காலத்துல கட்டி வச்சாங்களாம்.

''அன்றாட அலுவலை கவனிக்கப் போறதுக்கு முந்தி... தினமும் குல தெய்வத்தை ஒரு கும்பிடு போட்டுட்டுப் போகணும்னு... பெரியவங்க எனக்கு உத்தரவு போட்டிருக்காங்க...

''அதை நான் மீறியதே இல்ல... சில சமயம் மனசு சரியில்லேன்னா கூட நான் இங்க வந்துடறது வழக்கம்... கோவில் படிக்கட்டுலே உட்கார்ந்துட்டிருந்தா... ஏகாந்தமா இருக்கும்.

''காத்துல சலசலக்கிற அரச மர இலைகளும், சிலுசிலுன்னு ஓடற வாய்க்கால் தண்ணியும், குயில் கூவுற சத்தமும்... நம்ம மனசுல இருக்கிற பாரத்தை இறக்கிடும் தெரியுமா?

''உங்களைப் பார்த்தா ஆச்சரியமா இருக்கு. பவித்ரா! படிச்ச பொண்ணு அதுவும் சென்னையிலேர்ந்து

வந்திருக்கீங்க... இந்தக் காலத்துப் பொண்ணா இருந்தும்... உங்ககிட்ட இருக்கிற பக்தியைப் பார்த்தா... ரொம்ப திகைப்பா இருக்கே?''

உரிமையாய் பல வருடங்கள் பழகியவனைப் போன்று அவன் பேசிய விதம்... அவளுக்குப் பிடித்திருந்தது.

உள்ளுக்குள் துணிவு துளிர்த்தது.

''நீங்க மட்டும் என்னவாம்? இந்தக் காலத்து இளைஞரா இருந்தும் பக்தி உடையவராத் தானே இருக்கீங்க?

''எவ்ளோ பெரிய வி.ஐ.பி. பிஸியான ஷெட்யூலைக் கூட ஒதுக்கிட்டு... பூஜை புனஸ்காரங்களை முடிச்சிட்டுக் கிளம்பறீங்க...

''தினமும் குல தெய்வத்தை வணங்கிட்டுப் போறீங்க... இந்தக் காலத்து இளைஞர்கள் கோவில் பக்கம் கூட தலை வச்சுப் படுக்க மாட்டாங்க...

''பக்தி மட்டுமில்ல... உங்ககிட்டே இருக்கிற மனித நேயம், கண்ணியம், இரக்க சுபாவம், கருணை, மத்தவங்களை மதிக்கிற தன்மை... எல்லாமே பிரமிக்க வைக்குது.

''உங்களை மாதிரி ஒருத்தரைப் பார்க்கிறது அபூர்வம்னு பெரியவங்க சொல்றாங்களே?'' படபடவென்று பேசி விட்டு அவனை மெல்ல ஏறிட்டாள்.

''மைகாட்! ரொம்பத் தெரிஞ்சு வச்சிருக்கீங்க போல? மத்தவங்க யாரும் எனக்கு எதுவும் சொல்லாமலேயே நானும் உங்களைப் பத்தி நிறைய தெரிஞ்சு வச்சிருக்கேன். தெரியுமா?''

''அப்படி என்ன தெரிஞ்சுகிட்டீங்க?''



''பணிவு, அடக்கம், பண்பு, அன்பு, சகிப்புத் தன்மை, பொறுமைன்னு... அத்தனை நல்ல குணங்களும் ஒருங்கே அமையப் பெற்ற பெண் நீங்கன்னு தெரிஞ்சுகிட்டேன்.''

''அதெப்படி யாரும் சொல்லாமலேயே தெரிஞ்சுக்க முடியும்?'' ஆவலாய் கேட்டு விட்டு... வியப்பால் மேலும் விழிகளை விரித்தவளை ரசித்துப் பார்த்தான் சுந்தர்.

''உங்க தோற்றத்திலேயே தெரியுது... நீங்க அடக்கமான பணிவான பெண்... அப்படின்னு பளிச்சுனு தெரியுதே...? வயசான செய்ய உடம்புக்கு முடியாதவங்களை கவனிக்கிறதுக்காக வந்திருக்கீங்களே?

''பொறுமையும் சகிப்புத் தன்மையும், அன்பும், நிதானமும் நிறைஞ்சிருக்கிறவங்களால தான்... மத்தவங்களுக்கு சேவை செய்ய முடியும்கிறது என்னோட கருத்து.''

நாணத்தால் அவளது மேனி மெல்ல நடுங்கத் தொடங்கியது.

''உ... உங்களுக்குச் சொந்தமான கோவில்லே ஒரு வேண்டுதலுக்காக வந்திருக்கேன். அத்தை தான் அனுப்பி வச்சாங்க...''

''கண்டிப்பா உங்க வேண்டுதல் நிறைவேறத் தான் போகுது. பார்த்துக்கிட்டே இருங்க... என்ன திகைச்சுப் போய் பார்க்கிறீங்க பவித்ரா?''

''ஒ... ஒண்ணுமில்ல... விளக்கேத்தியாச்சு... அத்தைக்கு என்னைத் தனியா அனுப்பறதுக்கு பயம்... கவலையோட எனக்காக அவங்க காத்திருப்பாங்க... நான் கிளம்பணும்.''

சட்டென்று பேச்சை மாற்றி விட்டு... அவனைத் தாண்டிக் கொண்டு போக முற்பட்டாள்.

''இந்தக் கோவில் எங்களுக்கு சொந்தம்னு சொன்னீங்க... ஒத்துக்கிறேன். உங்க வீட்டுக் கல்யாணத்துக்கு... மணமக்களை வாழ்த்திட்டுப் போலாம்னு வந்தேனே?

''அன்னிக்கு இருந்தே என் மனசு எனக்குச் சொந்தமில்லாப் போச்சு பவித்ரா! மனசைத் தொலைச்சுட்டு பறிதவிச்சுட்டு நிக்கிறேன். எனக்கு ஒரு வழி சொல்லிட்டுப் போங்களேன்'' என்று கூறி விட்டு மந்தகாசமாய் முறுவலித்தான் சுந்தர்.

அவன் பார்த்த அந்த மென்மையான பார்வையில்... ஒரு கணம் தன்னை மறந்து, முகம் குங்குமப் பூவாய் சிவக்க... மேலே பேச முடியாமல் பொற்சிலையாய் நின்றிருந்தவள்... சட்டென்று சுதாரித்துக் கொண்டு நடக்கலானாள்.

''நில்லு பவித்ரா! இன்னுமா என் மனசு புரியலே? நான் உன்னை மனப்பூர்வமா நேசிக்கிறேன். இது உண்மையான காதல். நிச்சயம் ஜெயிக்கும்னு அசைக்க முடியாத நம்பிக்கை வச்சிருந்தேன்.

''என்னிக்காவது ஒரு நாள் நீ மறுபடியும் வருவே... எனக்குச் சொந்தமாவேன்னு... நம்பிட்டே இருந்தேன். என்னோட நம்பிக்கை வீண் போகலை.

''கோவில்லே உன்னைப் பார்த்ததும் 'ஸ்டன்'னாகிட்டேன். உன்னை எப்படியாவது சந்திக்கணுமேன்னு துடிச்சிட்டிருந்தேன். என்னோட அதிர்ஷ்டம்... நீயே இங்கே வந்துட்டே...



''தயக்கத்தை உதறி வெளிப்படையா சொல்லிடறேன்... எஸ்... ஐ லவ் யூ ஸோ மச் பவித்ரா!

''இது.. ஒரு அழகான பெண்ணைப் பார்த்ததும் ஜாலியா கொஞ்ச காலம் டைம் பாஸ் பண்றதுக்காக சொல்லப்படற வார்த்தையில்ல...

''இது உளப்பூர்வமான வார்த்தை! என் குல தெய்வத்தை சாட்சியா வச்சுக் கொண்டு சொல்றேன்...

''உன்னை என்னோட வாழ்க்கைத் துணையா ஏத்துக்கப் பிரியப் படறேன். கருத்தொருமிக்க ஆதர்ச தம்பதிகளா... வாழணும்னு ஆசை!

''என் மனசுல உள்ளதைக் கொட்டிட்டேன். உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா?''

திகைத்துப் போய் நின்றவளுக்கு... சந்தோஷத்தில் கண்ணீர் குபுக் என்று கொப்புளித்தது.

இறக்கை முளைத்த தேவதைகள் ஆகாயத்திலிருந்து... பனியில் நனைந்த மலர்களைக் கூடை நிறைய அள்ளி... அப்படியே அவளது தலையில் கொட்டுவதைப் போன்றிருந்தது.

''உங்களை யாருக்காச்சும் பிடிக்காமல் போகுமா? உங்க மனசுல இடம் பிடிக்கிறதுக்கு... நான் முன் ஜென்மத்துல தவம் செய்திருக்கணும்.

''ஆனால்... 'சம்மதம்'னு சொல்லக்கூடிய நிலைமையில நான் இல்லையே?''

சுரீர் என்று இதயத்தின் மூலையில் வலியெடுக்க... அதிர்ந்து போய் அவளை ஊன்றிப் பார்த்தான் சுந்தர்.

# 9

‘‘சம்மதம்னு சொல்றதுக்கு, உனக்கு என்ன தடை இருக்குன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?’’

‘‘இந்தக் காதல் நடைமுறை வாழ்க்கைக்கு சாத்தியப் படுமான்னு சந்தேகமா இருக்கு.

‘‘அம்மன் கோவிலுக்கு முன்னாடி நிக்கிறோம். நானும் எதையும் மறைக்க விரும்பலை. வசு அக்காவோட கல்யாணத்துல உங்களை முதல் முதலா பார்த்தேன்.

‘‘அப்போ... உங்க மனசுல என்ன தாக்கம் ஏற்பட்டதோ அதே தாக்கம் தான் எனக்கும் ஏற்பட்டுச்சு.

‘‘காதல் பூ’ திடீர்னு தான் மலரும். அது எப்போது பூக்கிறது? ஏன் பூக்கிறது? எதற்காகப் பூக்கிறது? என்பதெல்லாம் இலக்கியத்திற்கும், இயற்கைக்கும் இன்னும் விடுகதையாகவே இருக்கிறதுன்னு நான் எதிலேயோ படிச்சிருக்கேன்.

‘‘அந்த அதிசயம் நம்ம வாழ்க்கையிலும் நிகழ்ந்திருக் கிறதை நெனச்சா... சந்தோஷமாத்தான் இருக்கு.

‘‘நம்ம ரெண்டு பேர் மனசுக்குள்ளும்... ஒரே விநாடி யில் விதை விழுந்து, முளைத்து, கிளை விரித்து... விருட்சமாகி விட்டிருக்கே காதல்! அதிசயம் தான்.’’

‘‘இதைக் கேட்கிறதுக்கு எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா பவித்ரா? நாம மனதார விரும்பின பெண் ணாலே... நாமளும் நேசிக்கப்பட்டிருக்கோம்கிறதைக் கேட்கும்போது... செவிகள்லே தேன் பாயற மாதிரி இருக்கு.

‘‘இந்தக் காதல் ஒரு தலைக் காதலும் இல்ல... அப்புறம் நாம்ப வாழ்க்கையில இணையறதுலே உனக்கென்ன தடை?’’

‘‘அந்தஸ்து பேதம் இருக்கே? இந்த ஊர் பெரிய தனக் காரரோட ஏக போக வாரிசு நீங்க... ஆனா நான்? சாதாரண சமையல்காரரோட பொண்ணு!

‘‘முன்ன மாதிரி வருமானம் வர்றதில்ல... பற்றாக்குறை பட்ஜெட்லே வாழ்க்கையோட போராடிக்கிட்டிருக்கோம். அப்பா தளர்ந்து போயிட்டாரு.

‘‘அம்மா ஆஸ்துமா வியாதி வந்து அவஸ்தைப் பட் டுட்டு இருக்காங்க. தம்பி, தங்கை... அபிஷேக்கும் அபிநயாவும் காலேஜில படிச்சுட்டு இருக்காங்க.

‘‘வேலைக்குப் போயி கொஞ்ச காலம் சம்பாதிக் கணும்னு எனக்கு ஆசை... என்னால முடிஞ்ச மட்டும் குடும்ப பாரத்தைக் குறைக்கலாமேன்னு எண்ணம்!

‘‘தகுந்த வேலை கிடைக்கல... இந்த சூழ்நிலையில தான் அத்தை போன் பண்ணி என்னை இங்க வர வழைச்சாங்க...

‘‘குடியிருக்கிற வீட்டை வித்தாத்தான்... என்னைக் கரையேத்த முடியும்கிற நிலைமை... வீட்டை வித் துட்டா... தம்பி, தங்கையை வச்சுக்கிட்டு வாடகை வீட்டுல காலம் தள்ள வேண்டிய அவலத்துல... என் னோட பெத்தவங்க இருக்காங்க...

‘‘இந்த மாதிரி குடும்பத்துல பெண் எடுக்கிறதுக்கு... உங்க வீட்டுல சம்மதிப்பாங்களா?

''நிச்சயமா ஒத்துக்கவே மாட்டாங்க...

''இதையெல்லாம் யோசிச்சுத் தான் சொல்றேன்.

''அத்தையும் மாமாவும் ஓரளவுக்கு தேறிக்கிட்டு வர்றாங்க... கொஞ்ச நாளானதும் நான் சென்னைக்குப் போயிடுவேன்.

''போனதுமே எப்படியாவது ஒரு நல்ல வேலையில சேர்ந்து... சம்பாதிச்சு பொருளாதாரக் கஷ்டத்தைக் குறைக்கணும்கிற குறிக்கோளோட இருக்கேன்.

''கல்யாணம் பண்ணிக்கிட்டு எனக்கு என்னன்னு சுயநலமா குடும்பத்தை உதறிட்டுப் போறதுக்கு... என் மனசாட்சி இடம் கொடுக்காது.

''கொஞ்ச காலமாவது சம்பாதிச்சு என் குடும்பத்துக்கு உபகாரமா இருந்தாத்தான் என் மனசு ஆறும்...''

''உன்னோட கடமை உணர்ச்சியையும் பொறுப்பையும் பார்த்தா பிரமிப்பா இருக்கு பவித்ரா. நமக்கு நல்ல வாழ்க்கை அமைஞ்சா போதும்னு நெனக்காம... குடும்பத்து மேல இவ்ளோ அக்கறையா பாசமா இருக்கிற பொண்ணை... இந்தக் காலத்துல பார்க்கவே முடியாது.

''நீ பேசியதைக் கேட்டதும் உன் மேல இருக்கிற மதிப்பும், காதலும் கூடிக்கிட்டே போகுது. வாழ்ந்தா உன்னோடதான்னு நான் முடிவே பண்ணிட்டேன்.

''நம்ம காதலுக்கு குறுக்கே எத்தனை தடைகள் வந்தாலும்... தகர்த்து எறிஞ்சு உன்னோட கையை நான் பிடிக்கத் தான் போறேன்...'' நெகிழ்ந்து போய் பேசினான் சுந்தர்.

''நான் இவ்ளோ அதிர்ஷ்டக்காரியான்னு... உள்ளூர ரொம்பவும் பிரமிப்பாவும் இருக்கு... பயமாவும் இருக்கு.



''விரலுக்கேத்த வீக்கம்; தகுதிக்கேத்த ஆசை' இருக்கணும்னு பெரியவங்க சொல்லுவாங்க...

''என்னையும் மீறி என் மனசு உங்களை நேசிக்க ஆரம்பிச்சதை எண்ணி... பலமுறை என்னை நானே சாடியிருக்கேன்.

''உள்ளூர வேதனையும் பட்டிருக்கேன். நம்மையும் அறியாம... ஒருத்தருக்கு ஒருத்தர் நேசிச்சிருக்கோம்.

''நீங்களும் நானும் விரும்பினா மட்டும் போதுமா? நடைமுறை சிக்கல்கள் நிறைய இருக்கே?

''அந்தஸ்து பேதம் காட்டி உங்க அப்பா, அம்மா சம்மதிக்காட்டி என்ன செய்யறது?

''பெத்தவங்க மனசை என்னிக்கும் நோகடிக்கவே கூடாது. அது மகா பாவம்!

''நம்மை அவங்க புரிஞ்சுகிட்டு, மனப்பூர்வமா, பூர்ண திருப்தியோட சேர்த்து வச்சு அட்சதை தூவி ஆசீர்வதிக்கணும். உண்மையான காதல் அப்பத்தான் வெற்றியடையும். இல்லையா?''

''எக்ஸாட்லி! மனசு நிறைஞ்ச சந்தோஷமும் அப்பத்தான் கிடைக்கும். நம்ம ரெண்டு பேர் எண்ணங்களும் ஒத்துப் போறதை நினைச்சா... ஆச்சரியமா இருக்கு பவித்ரா!

''பெத்தவங்க மனசை உடைச்சு நொறுக்கிட்டு ஓடிப் போய் சுயநலமா கல்யாணம் பண்ணிக்கிடறவங்களை நெனச்சாலே... எனக்கு பத்திக்கிட்டு வரும். அது எவ்ளோ பெரிய மிருகத்தனம்?

''அது போகட்டும்... அந்தஸ்து பேதத்தைப் பார்த்து நீ பயப்பட வேணாம்... எப்படியாவது பெரியவங்ககிட்டே இருந்து நான் சம்மதத்தை வாங்கிடுவேன்.

''நிச்சயமா ஒத்துக்கவே மாட்டாங்க...

''இதையெல்லாம் யோசிச்சுத் தான் சொல்றேன்.

''அத்தையும் மாமாவும் ஓரளவுக்கு தேறிக்கிட்டு வர்றாங்க... கொஞ்ச நாளானதும் நான் சென்னைக்குப் போயிடுவேன்.

''போனதுமே எப்படியாவது ஒரு நல்ல வேலையில சேர்ந்து... சம்பாதிச்சு பொருளாதாரக் கஷ்டத்தைக் குறைக்கணும்கிற குறிக்கோளோட இருக்கேன்.

''கல்யாணம் பண்ணிக்கிட்டு எனக்கு என்னன்னு சுயநலமா குடும்பத்தை உதறிட்டுப் போறதுக்கு... என் மனசாட்சி இடம் கொடுக்காது.

''கொஞ்ச காலமாவது சம்பாதிச்சு என் குடும்பத்துக்கு உபகாரமா இருந்தாத்தான் என் மனசு ஆறும்...''

''உன்னோட கடமை உணர்ச்சியையும் பொறுப்பையும் பார்த்தா பிரமிப்பா இருக்கு பவித்ரா. நமக்கு நல்ல வாழ்க்கை அமைஞ்சா போதும்னு நெனக்காம... குடும்பத்து மேல இவ்ளோ அக்கறையா பாசமா இருக்கிற பொண்ணை... இந்தக் காலத்துல பார்க்கவே முடியாது.

''நீ பேசியதைக் கேட்டதும் உன் மேல இருக்கிற மதிப்பும், காதலும் கூடிக்கிட்டே போகுது. வாழ்ந்தா உன்னோடதான்னு நான் முடிவே பண்ணிட்டேன்.

''நம்ம காதலுக்கு குறுக்கே எத்தனை தடைகள் வந்தாலும்... தகர்த்து எறிஞ்சு உன்னோட கையை நான் பிடிக்கத் தான் போறேன்...'' நெகிழ்ந்து போய் பேசினான் சுந்தர்.

''நான் இவ்ளோ அதிர்ஷ்டக்காரியான்னு... உள்ளூர ரொம்பவும் பிரமிப்பாவும் இருக்கு... பயமாவும் இருக்கு.



''விரலுக்கேத்த வீக்கம்; தகுதிக்கேத்த ஆசை' இருக்கணும்னு பெரியவங்க சொல்லுவாங்க...

''என்னையும் மீறி என் மனசு உங்களை நேசிக்க ஆரம்பிச்சதை எண்ணி... பலமுறை என்னை நானே சாடியிருக்கேன்.

''உள்ளூர வேதனையும் பட்டிருக்கேன். நம்மையும் அறியாம... ஒருத்தருக்கு ஒருத்தர் நேசிச்சிருக்கோம்.

''நீங்களும் நானும் விரும்பினா மட்டும் போதுமா? நடைமுறை சிக்கல்கள் நிறைய இருக்கே?

''அந்தஸ்து பேதம் காட்டி உங்க அப்பா, அம்மா சம்மதிக்காட்டி என்ன செய்யறது?

''பெத்தவங்க மனசை என்னிக்கும் நோகடிக்கவே கூடாது. அது மகா பாவம்!

''நம்மை அவங்க புரிஞ்சுகிட்டு, மனப்பூர்வமா, பூர்ண திருப்தியோட சேர்த்து வச்சு அட்சதை தூவி ஆசீர்வதிக்கணும். உண்மையான காதல் அப்பத்தான் வெற்றியடையும். இல்லையா?''

''எக்ஸாட்லி! மனசு நிறைஞ்ச சந்தோஷமும் அப்பத்தான் கிடைக்கும். நம்ம ரெண்டு பேர் எண்ணங்களும் ஒத்துப் போறதை நினைச்சா... ஆச்சரியமா இருக்கு பவித்ரா!

''பெத்தவங்க மனசை உடைச்சு நொறுக்கிட்டு ஓடிப் போய் சுயநலமா கல்யாணம் பண்ணிக்கிடறவங்களை நெனச்சாலே... எனக்கு பத்திக்கிட்டு வரும். அது எவ்ளோ பெரிய மிருகத்தனம்?

''அது போகட்டும்... அந்தஸ்து பேதத்தைப் பார்த்து நீ பயப்பட வேணாம்... எப்படியாவது பெரியவங்ககிட்டே இருந்து நான் சம்மதத்தை வாங்கிடுவேன்.

''கடவுளோட அருளாலே... இதுவரைக்கும் நான் நெனச்ச காரியங்கள் அத்தனையும் ஈடேறி இருக்கு. இதுவும் ஈடேறும்னு நம்பிக்கை எனக்கு இருக்கு.

''அப்புறம்... வெளிப்படையா எல்லாத்தையும் நீ பேசினே... இனிமே குடும்பத்துல இருக்கிற பொருளா தார கஷ்டத்தைப் பத்தின கவலை உனக்கு வேணாம்.

''மனசு ஒண்ணு பட்டுப் போனதுக்கு அப்புறம்... இனிமே அது என் குடும்பம் தான்! நீ வேலைக்குப் போய் சம்பாதிச்சுத்தான் உன் குடும்ப பாரத்தை இறக்கணும்கிற அவசியம் இல்ல...

''கவலை யாருக்குத்தான் இல்ல? இவ்ளோ வசதி வாய்ப்புகள் இருந்தும்... எங்கப்பாவுக்கு கவலை மனசுக்குள்ளே செல்லா அரிச்சுட்டே இருந்ததாலே... இதய நோய் வந்தது... இப்போ காச நோயும் சேர்ந்து அவதிப்பட்டுக்கிட்டு இருக்காரு...

''கவலை என்பது நம்ம சவப்பெட்டிக்கு நாமே அடிச் சுக்கிற ஆணிகள் மாதிரியாம்... ஆயுட் காலம் கணிசமா குறையுமாம்...

''மனசை ரிலாக்ஸ்டா வச்சிருந்து தியானம் பண்ணி... சந்தோஷமா சிரிச்சுட்டு இருந்தா... சவப்பெட்டியில அடிச்ச ஆணிகளை ஒவ்வொண்ணா பிடுங்கி எறியற மாதிரியாம்... அதாவது ஆயுட் காலம் கூடுதாம்...'

''ஸோ... கவலையை உதறிடணும். நானிருக்கேன் உனக்கு! சரியா பவித்ரா?''

அந்த வார்த்தைகளைக் கேட்டதும்... அதுவரை இரும்புக் குண்டாய் கனத்த இதயம்... சட்டென்று இறகு போல் இலேசானது.



அடுத்து வந்த மூன்று நாட்களும்... ஜெட் வேகத்தில் பறந்ததே தெரியவில்லை.

மூன்று நாட்களாய் மிகச் சரியாய் அவள் வரும் நேரத்திற்கே வாய்க்கால் கரைக்கு வந்து விட்டிருந்தான் சுந்தர்.

விளக்கேற்றி விட்டு இறங்கு துறையில் கடைசி படிக்கட்டில் கால்களை நனைத்தபடி அவள் அமர்ந் திருக்க... மீன் குஞ்சுகள் ஓடோடி வந்து அவளது சந்தனப் பாதங்களை முத்தமிடுவதைப் பார்த்தபடி அருகில் அமர்ந்திருந்தான் சுந்தர்.

தனது விருப்பு, வெறுப்புகளை... எதிர்கால லட் சியத்தை என்று ஒன்று விடாமல் அவளிடம் அவன் பகிர்ந்து கொண்டான்.

பேச்சு சுவாரசியத்தில் நேரம் பறந்ததே தெரியவில்லை.

ரசனை, சிந்தனை, படிப்பில் ஆர்வம், திறமை, மனித நேயம், அடக்கம், பெரியவர்களிடம் பணிவு... என்று எல்லா விஷயங்களிலுமே இருவரது எண்ணங்களும் ஒரே அலைவரிசையில் இருப்பதை எண்ணி... அந்த இளம் காதலர்கள் பிரமிக்கத்தான் செய்தனர்.

அன்று... நான்காவது நாளாக விளக்கேற்றி விட்டு படித் துறையில் அமர்ந்து வெகு நேரம் பேசிக் கொண் டிருந்து விட்டு... பிரிய மனமில்லாமல் கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்த தருணத்தில்...

ஒரு ஜோடி அணில்கள் விளையாட்டாய் ஓடி மோதி... எதிர்பாராமல் திடீரென்று மரத்திலிருந்து சேர்ந்தாற் போல் கீழே கிரீச்சிட்டபடி பொத்தென்று விழுந்தன.

பவித்ராவின் தோள்பட்டையை உரசிக் கொண்டு திடுதிப்பென்று விழுந்ததும்... என்னவோ ஏதோ என்று பயத்தில் வீலென்று அலறியபடி சுந்தரின் நெஞ்சில் சாய்ந்து விழிகளை இறுக மூடிக் கொண்டாள்.

பயத்தில் தளிர்க் கொடியாய் கிடுகிடுவென்று நடுங்கியவளை ஆதுரமாய் இறுக்கமாய் அணைத்துக் கொண்டான் சுந்தர்.

# 10

அன்று வீடு திரும்பியதுமே... அத்தை அவளை ஊன்றிப் பார்த்துவிட்டு... ''பவி! நானும் கவனிச்சுட்டுத்தான் இருக்கேன். வாய்க்கால் கரைக்குப் போயி... ஏழு கன்னிமாரியம்மனுக்கு நீ விளக்கேத்தி வரும் போதெல்லாம்... உன் முகம் அவ்ளோ பொலிவா இருக்கே?

''கன்னங்கள் அப்படியே மினுங்குதே? புது கல்யாணப் பொண்ணு மாதிரி முகம் குங்குமமாய் சிவந்து கிடக்குதே? எனக்கொண்ணு தெரிஞ்சு போச்சு'' என்றாள்.

பவித்ராவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

'சுந்தரை தினமும் நான் சந்தித்துப் பேசியது அத்தைக்குத் தெரிந்து விட்டதா? வாய்க்கால் கரையில் நாங்கள் யார் கண்ணிலாவது பட்டிருப்போமோ? அத்தையிடம் வந்து சொல்லி விட்டார்களோ?



பயத்தில் அத்தையை ஏறிட்டுப் பார்க்கத் தெம்பின்றி... பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

''கூடிய சீக்கிரம் உனக்குக் கல்யாணம் கூடி வரப் போகுது. உன் முகத்துல இப்பவே கல்யாணப் பொண்ணுக்குரிய களை வந்தாச்சு தெரியுமா? பார்த்துக்கிட்டே இரேன்.

''நீ விளக்கேத்தி முடிச்சதுமே... நல்ல வரன் வரப் போகுது. நேத்து என் கனவுலே வசுந்தரா வந்தா தெரியுமா? கல்யாணப் பொண்ணு கோலத்துல வந்தா...

''அவளைப் பார்த்ததும் நான் கேவிக் கேவி அழுதேன். அதுக்கு அவ எதுக்கு அழறே? உங்களை விட்டு நான் போயிட்டேன்னு ஏன் நெனக்கிறே?

''நான் இங்க தான் இருக்கேன். புரியலையா? பவியும் நானும் ஒண்ணு தான்! பவியை ஏன் வேத்து மனுஷியா நெனக்கிறே? 'பவி தான் வசு! வசு தான் பவி'ன்னு நெனக்கணும்.

''அதை விட்டுட்டு நீங்க அழுதுட்டிருந்தா... எனக்கு எப்படி சாந்தி கிடைக்கும்னு கேட்டுட்டு மறைஞ்சு போயிட்டா...

''மறையறதுக்கு முன்ன... நீ வழக்கமா படுத்துப்பியே? அந்தப் பாயில தான் அவ படுத்துண்ட மாதிரி தெரிஞ்சது... மறுகணம் மறைஞ்சுட்டா...

''உடம்பெல்லாம் வேர்த்து ஊத்த எழுந்து உட்கார்ந்து மணியைப் பார்த்தேன். விடியக்காலை நாலு மணி! நீ வழக்கம் போல எழுந்து... அந்த நேரத்துல பாத்ரூமுக்குப் போயிருந்தே...

''நான் நேரா உங்க மாமா ரூமுக்குப் போயி... அவரை எழுப்பி இந்த விஷயத்தைச் சொன்னேன்... ரெண்டு பேருமா இதைப் பத்தியே பேசிட்டிருந்தோம்.

''ஒரு முடிவுக்கு வந்தோம். நீ வாய்க்கால் கரைக்குக் கிளம்பிப் போனதும்... எங்கண்ணனுக்கு போன் போட்டுப் பேசினேன்.

''அண்ணன் முதல்லே ரொம்பவே தயக்கம் காட்டினாரு. நான் அழுதுகிட்டே தழுதழுத்துப் போய் பேசறதைக் கேட்டுட்டு... அவரோட மனசு இளகிடுச்சு.

''சரிம்மா... உன் இஷ்டம் போல் செய்னு சொல்லிட்டாரு. உனக்கு இந்த வட்டாரத்துக்குள்ளேயே நல்ல வரனா பார்க்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்.

''கிட்டத்துல கட்டிக் கொடுத்தா... அடிக்கடி வந்து எங்களைப் பார்த்துப் போவே இல்லையா? வசுவோட நகைகள் அத்தனையும் உனக்குத்தான்...

''கல்யாணச் செலவு மொத்தத்தையும் நாங்களே பார்த்துக்கப் போறோம். இனிமே அண்ணன் வீட்டை விக்க வேண்டிய அவசியம் இல்ல... அதனால நீ அதைப் பத்தின கவலையே பட வேணாம்.

''அபிஷேக்கும், அபிநயாவும் நல்லா படிக்கிற பசங்க... அவங்க படிப்புச் செலவையும் நானே ஏத்துக்கப் போறேன்.

''வசுவுக்கு ரொம்ப இளகின மனசுன்னு உனக்கே தெரியுமே பவி!

''கஷ்ட நஷ்டத்துல இருக்கிறவங்களைப் பார்த்தா ரொம்ப இரக்கப் படுவா...



''அவங்களுக்கு பண உதவி செஞ்சு கை தூக்கி விடணும்னு அடிக்கடி சொல்லுவா...

''இனி... எங்களுக்குன்னு யார் இருக்கா? அதான்... இந்த முடிவுக்கு வந்தேன்.

''உன்னோட ஜாதகத்தை அனுப்பி வைக்கும்படி அண்ணன் கிட்ட சொன்னேன். கொரியர்லே அனுப்பி வைக்கிறேன்னு சொன்னாரு...

''தரகர்கிட்டே இனி சொல்லி வைக்க வேண்டியது தான்... உள்ளூர்லேயே உனக்கு வரன் வாய்ச்சுட்டா... நான் ரொம்ப ரொம்ப சந்தோஷப்படுவேன் பவி!

''விளக்கேத்தி நீ வேண்டுதலை முடிச்ச உடனே... நல்ல தகவலா வந்துடும்... அதாவது நல்ல வரன் தகைஞ்சுடும்னு சொல்றேன்...'' அவளது நெற்றியோரம் புரண்டு விழுந்த முடிக்கற்றையை ஒதுக்கி... உச்சந்தலையை இதமாய் வருடினாள் தேவகி.

''அத்தே! வசுவோட நகைகள் அத்தனையையும் எனக்கே போடப் போறேன்னு சொல்றீங்களே? தம்பி தங்கச்சியோட படிப்புச் செலவு, என்னோட கல்யாணச் செலவு மொத்தத்தையும் ஏத்துக்கத் தயாரா இருக்கீங்க...

''மாமா அதைப் பத்தி எதுவும் நெனக்க மாட்டாரா? எ... எனக்கு சங்கடமா இருக்கு அத்தே.''

''அட... நீ என்னத்துக்கு அனாவசியமா சங்கடப் படறே? கனவுலே வசு வந்ததைச் சொன்னதுமே.... மாமா தான் இந்த முடிவை எடுத்தாரு. போதுமா?

''ஒரு விஷயத்தை நல்லாப் புரிஞ்சுக்கோ... உறவு முறையில தான் நான் உனக்கு அத்தை... ஆனா உணர்வுலே நான் உனக்கு அம்மா...

''அவரும் நானும் உன்னை எங்க மகளாத்தான் பாவிக்கிறோம். நீயும் எங்களை... அத்தை, மாமாவா பார்க்காம... உன்னோட பெத்தவங்க ஸ்தானத்துல வச்சுப் பாரு...

''இந்த மாதிரி எங்க சங்கடமும் நெருடலும் உனக்கு வராது. உரிமையா வலம் வராம... நீ இப்படி எட்ட நிக்கிறதுதான் வருத்தமா இருக்கு.

''நீ தான் எங்க வசு! வசு தான் நீ... அவளோட நகைகள் மட்டுமில்ல... இந்த வீடு, வாசல், தோப்பு, துரவுன்னு எங்க அத்தனை சொத்துக்கும் நீ தான் வாரிசு!

''நீ எங்க பொண்ணு ராஜாத்தி...'' அத்தை தழுதழுத் துப் பேசியதும்... பவித்ராவின் மனம், பாசத்தில் பாகாய் உருகி விட்டது.

''ஸாரி அத்தே... நான் உங்க பொண்ணு தான்... நீங்க என்னோட தாய் தான்! உங்க மனசை வருத்தப்படுத் தினதுக்கு மன்னிப்பு கேட்டுக்கிறேன்.

''இனிமே உரிமையா நடந்துக்கிறேன். அத்தே! வசு அக்காவுக்கு பிடிக்கும்னு சொல்வீங்களே? உருண்டை வடைக் குழம்பு... எனக்கும் ரொம்பப் பிடிக்கும். கார சாரமா ருசியா வைப்பீங்களே?

''உங்க கையால குழம்பு வச்சு... சாப்பிடணும் போல இருக்கு. இன்னிக்கு நானா சாப்பிட மாட்டேன். எனக்கு நீங்க தான் ஊட்டி விடணும். எனக்கு இப்பவே நாக்குல ஜலம் ஊறுது அத்தே.''

''நீ இப்படி ஆசையா உரிமையா நடந்துக்கறதை நெனச்சா... எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா பவி! இதோ... அரை மணி நேரத்துல ரெடி பண்



ணிடறேன்...'' ஓட்டமும் நடையுமாய் அடுக்களையாய் நோக்கி விரைந்த அத்தையை... நன்றிப் பெருக்கோடு பார்த்துவிட்டு... கூடத்தை ஒட்டியிருந்த அறைக்குள் புகுந்தாள்.

அலமாரியில் பதிக்கப்பட்டிருந்த ஆளுயரக் கண் ணாடியில் தன் உருவத்தை ஏறிட்டாள்.

'அத்தை கூறியது உண்மை தான்! சுந்தரை மீண்டும் சந்தித்ததிலிருந்து கன்னங்களில் மினுமினுப்பும் மெருகும் கூடி... பளீரென்று அவளது அழகு அதிகரித்து விட்டது நிஜம்தான்!

அதிலும் இன்று பயத்தில் விதிர் விதிர்த்து அவனது மார்பில் சாய்ந்ததும்... ஆதுரமாய் இறுக அணைத்துக் கொண்டானே?

''பவி! பயப்படாதே... நானிருக்கேன்'' என்று அவன் கூறியபோது... விழிகளை மூடி நின்றிருந்தவளுக்கு... மிக மிகப் பாதுகாப்பான உணர்வு அவனது அணைப்பில் கிடைப்பதை உணர்ந்தாள்.

''பவி!... ஐ லவ் யூ'' சுந்தரின் குரல் கிசுகிசுப்பாய் வெளிப்பட்டது. உரிமையுடன் மெல்ல அவளது நெற்றி யில் இதழ் பதித்தான்.

இருவருக்குமே மனதிற்குள் மகிழ்ச்சி மழை பூப்பூ வாய் தூற... மேகத்தோடு மேகமாய் பறப்பதைப் போன்று உணர்ந்தனர்.

எங்கோ ஒரு குயில் 'கூ.. குக்கூ' என்று இனிமையாய் கூவியதும்... சட்டென்று தன்னிலை மீண்டு விலகி னாள் பவித்ரா.

''நே... நேரமாச்சு சுந்தர்! நா வரேன்'' என்றவள்... பதற்றமாய் நுனி நாக்கைக் கடித்துக் கொண்டு ''சாரி... சாரி'' என்று ஏறிட்டாள்.

''அவசரத்துல... ஏதோ பதட்டத்துல உங்க பேரைச் சொல்லி நான்...'' அவள் முடிக்கும் முன் இடை மறித்தான்.

''நோ, நோ! ஐ லைக் இட்! எஸ்... நீ இனிமே இப்படித்தான் உரிமையாய் பேர் சொல்லிக் கூப்பிட ணும். திடீர்னு நீ உரிமையா என் பேரைச் சொன்னதும்... எனக்கு அப்படியே காதுல தேனோடை பாய்ஞ்சது மாதிரி இருந்துச்சு தெரியுமா?

''எப்பவுமே இப்படித்தான் கூப்பிடணும். இது என் னோட கண்டிஷன் நீ மீறப்படாது. சொல்லிட்டேன்.''

''எப்பவுமேவா? மை காட்! அ... அதெப்படி முடி யும்?'' நாணத்தால் முகம் குங்குமப் பூவாய் சிவக்க... மான் போன்ற விழிகள் ஏகத்திற்கும் திருதிருத்ததைக் கண்டு குறும்பாய் முறுவலித்தான் சுந்தர்.

''அதில் என்ன கஷ்டம் உனக்கு? கல்யாணத்துக்கு அப்புறம் 'அத்தான்... பொத்தான்'னு கூப்பிடலாம்னு ஐடியாவா?

''ஊகூம்! நான் ஒப்புக்கவே மாட்டேன். என் கண்டிஷ னுக்கு நீ ஒத்துக்கிட்டாத்தான் நான் உன்னைப் போக விடுவேன்...''

ஆஜானுபாகுவாய் ஆறடி உயரத்தில் வழியை மறித்துக் கொண்டு நின்றவனை... சங்கோஜத்துடன் மெல்ல ஏறிட்டாள்.



''அது எப்படி சாத்தியப்படும்?'' மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

''சின்னக் குழந்தை மாதிரி இப்படிப் பிடிவாதம் பண் ணினா எப்படி?... சரி... உங்க இஷ்டம்! ப்ளீஸ்... வழியை விடுங்க சுந்தர்.''

''இதை... இதை... இதைத்தானே எதிர்பார்த்தேன். தேங்க்யூ.''

சிரித்தபடி அவளது பூங்கரத்தைப் பற்றி தன் கன் னத்தில் பொருத்திக் கொண்டவனை... காதல் பொங்கி வழியும் விழிகளால் ஏறிட்டு விட்டு... சட்டென்று கையை விடுவித்துக் கொண்டு... படிகளில் வேகமாய் ஏறி... மெதுவாய் திரும்பிப் பார்த்தாள்.

அதே இடத்தில் நின்றபடி அண்ணாந்து அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த சுந்தர்... மெல்ல கையை அசைத்தான். ''பை! ஸீ யூ பவி.''

பதிலுக்கு கையை அசைத்து... ''பை! சுந்தர்'' என்று விட்டு வெட்கம் தாளாமல் அர்ச்சனைக் கூடையுடன் ஓட்டமும் நடையுமாய் வாய்க்கால் பாதையைக் கடந் தாள்.

அலமாரிக் கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தைப் பார்த்து... நீண்ட பெருமூச்சு விட்டாள் பவித்ரா.

'இதுநாள் வரை மனதை அழுத்திக் கொண்டிருந்த குடும்பக் கவலை... அத்தை தேவகியின் மூலம் தீர்ந்து விட்டது.

பெருத்த நிம்மதி ஏற்பட்டு விட்டது நிஜம் தான்! ஆனால் இந்தக் காதல் திருமணத்தில் முடியுமா?

ஒரு வேளை... துரதிர்ஷ்டவசமாய் காதல் கை கூடாமல் தோற்று விட்டால்?

அந்த நினைப்பே... அவளது இதயத்தைக் கூறு போடுவதாய் இருந்தது.

## 11

இதயத்திற்குள் காதல் புகுந்து விட்டால்... அது நம்மைப் படாத பாடு படுத்தி விடும் என்று கவிஞர்கள் சும்மாவா சொல்லி வைத்தார்கள்?

பவித்ராவுக்கு சதா சுந்தரின் ஞாபகம் தான்! தூங்கினாலும் விழித்திருந்தாலும் ஒரு கணம் கூட அகலாமல்... அவளது நினைவில் நின்றிருந்தான்.

அவனது நினைப்பு அவளது சுவாசத்தில் வாசம் செய்து கொண்டு இருந்தது நிஜம்!

வாய்க்கால் கரைக்குச் செல்லும் நேரத்திற்காக அவள் ஆவலோடு காத்திருந்தாள்.

நிமிடத்திற்கு ஒரு தரம், கூடத்து சுவர்க் கடிகாரத்தில் அவளது விழிகள் படிந்து மீண்டன.

மறுநாள்... வழக்கமான நேரம் வந்ததும் ''நான் வரேன் அத்தே'' உரத்துக் குரல் கொடுத்துவிட்டு அர்ச்சனைக் கூடையுடன் கிளம்பி விட்டாள்.

நெய் விளக்கேற்றி வலம் வந்து முடித்து ஆவலாய் காத்திருந்தாள். நேரம் தான் கரைந்து கொண்டிருந்தது.



ஏமாற்றம் அவளது இதயத்தை முற்றுகையிட்டது.

கண்களுக்கு எட்டிய தூரத்திலோ... வாய்க்கால் வரப்பின் மீதோ சுந்தரின் உருவம் தென்படுகின்றதா? என்று பார்வையால் அவ்வப்போது துழாவினாள்.

உற்சாகத்துடன் புறப்பட்ட அவளது மனம்... உப்பிய பலூனை ஊசியால் குத்தி விட்டது போல ஒடுங்கி விட்டது.

'நான் காத்திருப்பேன் என்று தெரிந்தும்... சுந்தர் ஏன் வரவில்லை?'

எத்தனைக் கட்டுப்படுத்தியும் அவளது கண்கள் கலங்கிப் போயின. துன்பம் இதயத்தை இறுக்கியது.

வாடிப் போன முகத்துடன் வீடு வந்து சேர்ந்தாள்.

முட்டிக் கொண்டு வந்த அழுகையை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

''என்ன பவி? சாதத்தை இப்படி கொறிச்சுட்டு இருக்கே? நேத்து நான் ஊட்டி விட்டதும் நல்லா சாப்பிட்டியே? இப்படி வா! அத்தை உனக்கு ஊட்டி விடறேன்...'' அத்தை தேவகி வற்புறுத்தி ஊட்டிய போது... தன்னையும் மீறி கண் கலங்கி விட்டாள்.

''என்னத்துக்கு இப்போ கண் கலங்கறே?'' பதறிப் போனாள் தேவகி.

''அன்பு மழையால என்னை வர்ஷிக்கிறீங்க... அதான் நெகிழ்ச்சியாக இருக்கு'' சட்டென்று சமாளித்து விட்டாள்.

சுகமோ துக்கமோ... அவளது முகம் கண்ணாடியாய் பிரதிபலித்து அவளைக் காட்டிக் கொடுத்து விடும்.

முகத்தில் எந்த உணர்வும் வெளிப்பட்டு விடாமல்... சகஜமாக வைத்திருக்கப் படாத பாடு பட வேண்டியிருந்தது.

அன்று மாலை... நாலரை மணி வாக்கில்... வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள் பவித்ரா.

சுந்தர்!

அவனைக் கண்டதுமே மகிழ்ச்சியில் அவளது இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

''வாசல்லே யாருன்னு பாரும்மா பவி!'' கூடத்து ஊஞ்சலில் அமர்ந்திருந்த தேவகி ஆவலாய் கேட்டாள்.

''அத்தே! பெரி... பெரிய தனக்காரரோட பிள்ளை வந்திருக்காரு'' படபடத்துவிட்டு ஒரே ஓட்டமாய் அடுக்களைக்குள் புகுந்து கொண்டாள்.

''அட... வாங்க வாங்க தம்பி! உட்காருங்க... என்னங்க! யாரு வந்திருக்காங்கன்னு வந்து பாருங்க'' உரத்து உற்சாகமாய் குரல் கொடுத்தாள்.

தேவகிக்கும் குருமூர்த்திக்கும் மகிழ்ச்சி பிடிபடவில்லை.

''உங்களுக்கு உடம்பு சுகமில்லைன்னு... கேள்விப்பட்டேன். வேலை மும்முரத்துல உடனே வந்து பார்க்க முடியலை... இப்போ கொஞ்சம் பரவாயில்லையா?''

''பொண்ணையும் மாப்பிள்ளையையும் வாரிக் கொடுத்த சோகம் தான்... எங்களை முடக்கிப் போட்டுட்டது... இப்போ ஓரளவுக்கு சோகத்துல இருந்து மீண்டு தெம்பா நடமாடறோம்...

''அதுக்குக் காரணம்... நீங்க இப்போ பார்த்தீங்களே? அவ தான்! எங்கண்ணன் பொண்ணு எங்க கூடவே இருந்து கவனிச்சுக்கிறா...'' பெருமிதமாய் சிரித்தாள் தேவகி.

''வீடு தேடி வந்து விசாரிக்கிறீங்க... உங்க விசாலமான மனசுக்கு ஒரு குறையும் வராது தம்பி! அன்னிக்கே நான் சொல்லிட்டிருந்தேன்... தம்பி வீட்டுக்கே பார்க்க வந்துடுவாருன்னு சொன்னேன். அதே மாதிரியே வந்துட்டீங்க... ரொம்ப சந்தோஷம் தம்பி'' குதூகலமாய் பேசினார் குருமூர்த்தி.

''உங்களைப் பார்த்துட்டு... அப்படியே இன்னொரு விஷயத்தைப் பத்தியும் பேசி முடிவு பண்ணிடலாம்னு தான் வந்தேன்...'' பீடிகை போட்டதும் கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''எனக்கு சுத்தி வளைச்சுப் பேசத் தெரியாது. உங்க வீட்டுப் பொண்ணு பவி மேல... எனக்கொரு அபிப்பிராயம் ஏற்பட்டுப் போச்சு!

''என்னோட வருங்கால மனைவி அவ தான்னு நான் முடிவே பண்ணிட்டேன். இன்னிக்குத் தான் அப்பா கிட்டே பேசினேன். அப்பா முழு மனசோட ஒத்துக்கிட்டாரு...

''எனக்கு உங்க சம்மதமும் கிடைச்சுட்டா... தெம்பா அம்மா கிட்டே பேசிடுவேன். அவங்களை எப்படியும் கன்வின்ஸ் பண்ணிடுவேன்.

''எங்க வீட்டுப் பெரியவங்க முறைப்படி வந்து பொண்ணு கேட்பாங்க... எனக்கு இப்போ உங்க சம்மதம் தேவை!

''இன்னொரு விஷயத்தையும் வெளிப்படையா சொல்லிடறேன். வாய்க்கால் கரையில பவியைப் பார்த்தேன்.

மனசு விட்டுப் பேசினோம். உண்மையைச் சொல்லப் போனா...

''ரெண்டு பேரும் விரும்பறோம்... பெரியவங்க நீங்க எங்களை சேர்த்து வச்சு ஆசீர்வாதம் பண்ணனும்'' பேசியபடி எழுந்து யாரும் எதிர்பார்க்காத தருணத்தில் குருமூர்த்தி - தேவகி தம்பதியினரின் பாதங்களைப் பணிந்தான் சுந்தர்.

''அமோகமா இருங்க தம்பி! உங்களைக் கட்டிக்க எங்க வீட்டுப் பொண்ணு குடுத்து வச்சிருக்கணுமே?'' சந்தோஷத்தில் சுந்தரின் கைகளைப் பற்றிக் கொண்டார் குருமூர்த்தி.

''உங்க குல தெய்வத்துக்கு அவ விளக்கேத்தின நேரம்... இப்படியொரு அதிர்ஷ்டம் அவளைத் தேடி வந்திருக்கு... பவி தன்னோட குடும்பத்தைப் பற்றி விளக்கமா சொல்லியிருப்பா...

''ஆனா... அவ எங்களுக்கு வாரிசு! இதை உங்கம்மா கிட்ட தெளிவா சொல்லிடுங்க தம்பி! கவுரவத்தை விட்டுத் தராம சீர் செனத்தி நிறைவா செய்து தான்... அவளை புக்ககத்துக்கு அனுப்பி வைப்போம்.

''அம்மாடி பவி! அவல் கேசரி செய்திருந்தியே...? தம்பிக்கு எடுத்துட்டு வா... என்னங்க! வாங்க... எங்க அண்ணனுக்கு உடனடியா இந்த மகிழ்ச்சியான சங்கதியைத் தெரிவிக்கணும்.''

நாசூக்காக இருவரும் பின்கட்டைத் தாண்டிச் சென்று விட்டனர்.



ஒரு டம்ளரில் ஹார்லிக்ஸையும் ஒரு தட்டில் அவல் கேசரியையும் வைத்து எடுத்துக் கொண்டு மெல்ல கூடத்திற்கு வந்தாள் பவித்ரா.

இன்ப வெள்ளத்தில் இருவரது இதயங்களும் தத்தளித்தன.

நான்கு விழிகளும் கலந்தன.

தனிமையில் விடப்பட்ட துணிவில்....அவளது தளிர்க்கரத்தை ஆசையாய் பற்றினான்.

''வாய்க்கால் கரைக்கு நான் இன்னிக்கு வர முடியலை. முக்கியமான வேலை தவிர்க்க முடியலை... அதான்! உன்னைப் பார்க்காம என்னால இருக்கவே முடியலை பவி! சதா உன் ஞாபகம் தான்.

''அதான் துணிஞ்சு வந்துட்டேன். எத்தனை நாளைக்கு இப்படித் தவிக்க முடியும்? அம்மா பச்சைக்கொடி காட்டிட்டா.... உடனே நம்ம கல்யாணம் தான்....

''உன்னை ஒரு நாள் பார்க்காம..... என் மனசு கிடந்து தவிச்ச தவிப்பும் துடிச்ச துடிப்பும் இருக்கே? அப்பப்பா... ரியலி...ஐ லவ் யூ ஸோ மச் பவி.''

''நானும் தான்.''

''இப்படி மொட்டையா சொன்னா எப்படி? முழுசா சொல்லு.''

''பெரியவங்க திடீர்னு வந்துடப் போறாங்க'' கையை மெல்ல விடுவிக்க முன்றாள் பவித்ரா.

''சின்னஞ்சிறுங்க தனிமையில சந்தோஷமா பேசிக்கட்டும்னு...வேணும்னே அந்தண்டை நகர்ந்து போயிருக்காங்க....

''முழுசா சொல்ற வரைக்கும் நான் உன்னை விட மாட்டேன்....'' தன் பிடியை மேலும் இறுக்கினான்.

''ஐ....ஐ லவ் யூ சுந்தர்! போதுமா... விடுங்க! கேசரி எப்படி இருக்குன்னு சொல்லுங்க.....''

''உன் கை வண்ணமா? ரொம்ப அபாரமா இருக்கு பவி!

''கண், வண்ணம் அங்கே கண்டேன்... கை வண்ணம் இங்கே கண்டேன்னு பாடணும் போல இருக்கு. தெரியுமா?

''கல்யாண மண்டபத்துல உன் கண் வண்ணத்தைப் பார்த்து மயங்கினவன் தான்.... காலத்துக்கும் இந்த மயக்கம் தீராது போலிருக்கே? ரொம்ப டேஸ்டா இருக்கு.... குட்!

''உண்மையிலேயே நான் ரொம்ப குடுத்து வச்சவன் தான்'' அவளை விழுங்கி விடுவது போல் பார்த்தபடி சுவைத்துச் சாப்பிட்டான்.

''இன்னிக்கு காயாம்பூ வரலை.... அடிக்கடி மட்டம் போட்டுடறா....'' வேண்டு மென்றே உரத்துக் குரல் கொடுத்தபடியே கூடத்திற்கு வந்தாள் தேவகி.

சப்தம் கேட்டு சட்டென்று விலகி நின்றாள் பவித்ரா.

''சுந்தர் தம்பி! அண்ணன் ரொம்ப சந்தோஷப் பட்டாரு. உங்க வீட்டுலே இருந்து எப்போ பொண்ணு பார்க்க வரப் போறாங்கன்னு கேட்டாரு.

''ரெண்டு மூணு நாளைக்கு முன்னாடியே தகவல் சொல்லிட்டா.... அவங்க கிளம்பி வர்றதுக்கு தோதா இருக்கும்...பாருங்க!



''பொண்ணு பார்க்கிற அன்னிக்கே..... ஒப்புத் தாம்பூலத்தையும் மாத்திக்கிட்டா.... எல்லாருக்கும் மனசு நிறைஞ்சு போகும்...''

''அப்படியே செய்துட்டா போச்சு.. அப்போ நான் கிளம்புறேன்'' குருமூர்த்தி - தேவகி தம்பதியினரைப் பார்த்து கை கூப்பினான் சுந்தர்.

''என்னிக்கும் வராதவரு வந்திருக்கீங்க.... அதுவும் எங்க வீட்டு மாப்பிள்ளையாகப் போறீங்க.. இருந்து ஆற அமர விருந்து சாப்பிட்டுப் போனா... நாங்க ரொம்ப சந்தோஷப் படுவோம் இல்லியா? உடனடியா கிளம் பறீங்களே?'' ஆதங்கப்பட்டாள் தேவகி.

''இல்லம்மா... நிறைய வேலை இருக்கு. நான்தான் இங்க அடிக்கடி வரப் போறேனே? நான் உங்க பிள்ளை... எப்ப வேணும்னாலும் வந்து ஒரு பிடி பிடிக்கத்தான் போறேன். அப்போ நான் உத்தரவு வாங்கிக்கிறேன்'' மீண்டும் வணங்கி விட்டு.... பவித்ராவிடம் விழியசை வில் விடை பெற்றுச் சென்றான்.

வாசல் வரை சென்று வழியனுப்பி விட்டு வந்த தேவகிக்கும் குருமூர்த்திக்கும் சந்தோஷம் கரை புரண்டது.

''பவி! நான் நெனச்சது சரியாப் போச்சு! வசு என் கனவுலே கல்யாணப் பொண்ணு கோலத்துல வந்தப் பவே நெனச்சேன்.

''இதே ஊருல... பெரிய தனக்காரர் வீட்டு மருமகளாகப் போறே.... காலத்துக்கும் உன்னைக் கிட்டத்துல நாங்க பார்த்துக்கலாம்.

''நீ ஆனந்தமா அமோகமா வாழப் போறே.. சுந்தரைக் கட்டிக்கிட்டதும்.... உன் வாழ்நாள்லே இனி கஷ்டம், துக்கம் கவலைங்கிற பேச்சுக்கே இடமில்லை பவி'' பரிவுடன் அவளது கன்னத்தைத் தடவினாள் தேவகி.

ஆனால்... திருமணத்திற்குப் பின்பு... அவளைக் கண்ணீர் கடலில் தள்ளி விட தருணம் பார்த்துக் கொண்டிருந்தது விதி!

## 12

மீனாட்சியம்மாளுக்கு மூச்சிரைத்தது.

உள்ளுக்குள் உலை கொதித்தது.

''சுந்தர்! நீ இப்படிக் கை மீறிப் போவேன்னு நான் நெனச்சே பார்க்கலைடா....

''எவ்ளோ பணிவா, பவ்யமா, பாசமா இருப்பே நீ? என் மனசை இப்படி நோகடிக்கிறியே? இது உனக்கே நல்லா இருக்கா?

''என் மேல எவ்ளோ அன்பா இருப்பே? உன் மனசுல யாரோ நஞ்சைக் கலந்துட்டாங்களே? கண்டமனூர் ஜமீன் வீட்டுல... வெள்ளியங்கிரி எஸ்டேட் ஓனர் வீட்டுலே பொண்ணு எடுக்க வேணாம்னு சொன்னே?

''சரி.... நம்ம பாலாமணி பொண்ணு தீபுவையாவது நீ கட்டிக்கச் சம்மதிப்பேன்னு நான் நம்புனேனே?



''என் நம்பிக்கையில மண்ணள்ளிப் போட்டுட்டு... போயும் போயும் ஒரு சமையல் காரனோட பொண்ணைப் போய் கட்டிக்கணும்னு... ஒத்தைக் கால்லே நிக்கிறியே?

''டேய்... சுந்தர் கண்ணா! நம்ப பரம்பரை பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்தவங்கடா... ரொம்பத் தரம் தாழ்ந்து இறங்கிப் போய் பொண்ணு எடுத்தா.... நம்ம கவுரவமே போயிருமேப்பா.....

''ரொம்ப அடி மட்டத்துல இருந்து பொண்ணு எடுத்தோம்னா.... அந்தப் பொண்ணோட குணமும் ரொம்ப மட்டமா இருக்கும்னு சொல்லுவாங்கப்பா...

''என் தோழிங்க வட்டாரத்துல... எனக்கு தனி செல்வாக்கு உண்டுன்னு உனக்கே தெரியும்.

''நாளைக்கு அந்த பவித்ராவைக் கட்டினா... அவங்க ஏளனமா சிரிப்பாங்க... தெரியுமா?

''மீனாட்சியோட மருமக.... அடுத்த வேளை சோத்துக்கே வழி இல்லாதவளாம்.... யாரோ ஒரு சொந்தக்காரங்க வீட்டுல சமைச்சுப் போட்டு வீட்டு வேலை செய்துட்டிருந்தவளை..... மீனாட்சியம்மா மருமகளாக் கிட்டாங்கன்னு கேவலமா பேசுவாங்கப்பா''

''அம்மா! நிறுத்துங்கம்மா... ரொம்ப மட்டம் தட்டிப் பேசாதீங்க. பவித்ரா படிச்ச பொண்ணு! கஷ்ட ஜீவனம் தான்... ஆனாலும் சொந்த வீட்டுல கட்டும் செட்டுமா.... கவுரவத்தை விட்டுக் கொடுக்காம வாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவ...

''இங்க... தன்னோட அத்தை வீட்டுல தங்கியிருக்கா... பெரியவங்களை கவனிச்சுக்கிறதுக்காக... அவளை இங்க வரவழைச்சிருக்காங்க...

''அவ... அங்க வேலைக்காரி மாதிரி நடத்தப்படலை. பவியை அவங்களோட சொந்தப் பொண்ணாவே பாவிக்கிறாங்க...

''குருமூர்த்தி - தேவகியம்மாள் தம்பதியினருக்கு அவ தன் வாரிசு! இதை அவங்களே உங்ககிட்ட சொல்லச் சொன்னாங்க... போதுமா?

''அவ குணத்தைப் பத்தி ஏதோ மட்டமா பேசீனீங்களே? பழகியே பார்க்காம எப்படிம்மா இப்படியொரு முடிவுக்கு வர்றீங்க?

''பவித்ரா தங்கமான பொண்ணு! அவளை மருமகளா அடையறதுக்கு இந்தக் குடும்பம் குடுத்து வச்சிருக்கணும்.

''யாரும் என் மனசுல நஞ்சைக் கலக்கலை. என் முடிவுல எந்த மாற்றமும் இல்ல...

''அவ இல்லாத ஒரு வாழ்க்கையை என்னால நெனச்சுக் கூடப் பார்க்க முடியல....

''எனக்கு உங்க பிடிவாதம் தெரியும்.. அவ எனக்கு கிடைக்கலேன்னா... என்னை நீங்க உயிரோட பார்க்கவே முடியாது. தெரிஞ்சுக்கோங்க.

''என் ஆசையைச் சொன்னதும்... அப்பா சட்டுன்னு சம்மதிச்சாரே? உங்களுக்கு ஏம்மா அந்த மனசு வரலை?

''என் மேல உங்களுக்கு உண்மையான அன்பிருந்தா.. என் ஆசையை நிறைவேத்தி வைப்பீங்களே?



''துளியளவு கூட என்மேல உங்களுக்குப் பாசம் இல்லைன்னு... எனக்கு நல்லாத் தெரிஞ்சு போச்சு!

''எனக்கு உங்க முகத்துல முழிக்கப் பிடிக்கலை. நான் போயிடறேன் ஒரேயடியா... நீங்க அந்தஸ்தையும், கவுரவத்தையும் கட்டிக்கிட்டு அழுங்க...'' விருட்டென்று பங்களாவை விட்டு வெளியேறி.... காரைப் புயலாய் கிளப்பிக் கொண்டு மறைந்தான் சுந்தர்.

அழுகையும் ஆத்திரமும் தொண்டையை அடைக்க... வேக வேகமாய் ஹாலின் வலது கோடியிலிருந்த அறைக்குள் புகுந்தாள் மீனாட்சி.

நெற்றி நிறைய விபூதியைப் பூசியபடி... 'தேவாரத்தை' வாசித்துக் கொண்டிருந்த சொங்கலிங்கத்தின் எதிரே போய் நின்றாள்.

''என்னங்க.... உங்க புள்ளை என்கிட்ட எப்படி சண்டை போட்டுக்கிட்டு போறான். பாத்தீங்களா?

''எல்லாம் நீங்க குடுக்கிற இடம் தான்....அவன் தான் புத்தி கெட்டுப் போயி ஆசைப் படுறான்னா.... நீங்க அதுக்கு சம்மதம் தெரிவிச்சீங்களாமே?

''உங்களுக்கு கொஞ்சமாச்சும் அறிவிருக்கா? நம்ம அந்தஸ்தும் கவுரவமும் போயி... நான் வெளியில தலைகாட்டாம கிடக்கணும்னு முடிவு பண்ணிட்டீங்களா?

''நீங்க சம்மதிச்சதால தானே.... அவனுக்கு தைரியம் வந்து.... தேவகி வீட்டுக்குப் போயி பொண்ணு கேட்டிருக்கான்.

''சென்னையில இருந்து வந்த சமையல்காரனோட பொண்ணு தன் அழகைக் காட்டி மயக்கி எம் பிள்ளையை வளைச்சுப் போட்டிருக்கா....

''அவனுக்கு புத்திமதி சொல்லி திருத்தறதை விட்டுட்டு.... அட்சதை தூவி ஆசீர்வாதம் பண்ணத் தயாராயிட்டீங்களே? நீங்களும் ஒரு மனுஷனா?''

வழக்கம் போல் அக்னித் துண்டங்களாய் வார்த்தைகளை உதிர்த்தாள் மீனாட்சி.

''அவன் இஷ்டப்பட்ட பொண்ணை.... பெருந்தன்மையா கட்டி வச்சா.... காலத்துக்கும் அவன் சந்தோஷமா இருப்பான் இல்லியா?

''உன் இஷ்டத்துக்கே எல்லாம் நடக்கணும்னா... நம்ம பிள்ளையை நம்ப இழந்துட வேண்டியது தான்.

''அவன் பேசிட்டுப் போனதைக் கேட்டேயில்ல? காதல் நிறைவேறாத துக்கத்துல ஒண்ணு கிடக்க ஒண்ணு பண்ணிக்கிட்டான்னு வையி....

''அடுத்த நிமிஷமே நான் உயிரை விட்ருவேன். சுந்தர் சொன்ன மாதிரி... அந்தஸ்தையும் கவுரவத்தையும் கட்டிக்கிட்டு நீ காலத்துக்கும் அழ வேண்டியது தான். ஜாக்கிரதை!''

மீனாட்சிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

அடி வயிற்றில் பயப்பந்து வேகமாய் உருண்டது.

அவளது தூரத்து உறவுக்காரியின் மகன் இப்படித்தான்.... காதல் தோல்வியில் மனமுடைந்து கோபித்துக் கொண்டு போய்.... தண்டவாளத்தில் தலையைக் கொடுத்து தற்கொலை செய்து கொண்டானே?

இளம் வயசு, காதல் வேகம்... சுந்தரும் அவனைப் போல் ஏடாகூடமாக ஏதாவது செய்து கொண்டால்?...

வீரபாண்டி கவுமாரி தாயே! நான் என்ன பண்ணு வேன்?.... அவளது பெற்ற வயிறு திகிலில் பதைபதைத் தது.

அவனது செல்போனுக்கு முயற்சித்தாள்.

ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்தது.

அன்றிரவு முழுவதும் சுந்தர் வீடு திரும்பவே இல்லை.

''என்னங்க! குத்துக்கல்லாட்டம் உட்கார்ந்திருக்கீங் களே? எனக்கு பயமா இருக்கே? எனக்கு என் பிள்ளை தான் முக்கியம்..

''நான் விட்டுக் கொடுத்துடறேங்க... ஐயோ! சுந்தரின் இஷ்டப்படியே அந்தப் பொண்ணைக் கட்டி வச்சிடலாம்.

''அவன் ஏடாகூடமா ஏதாச்சும் பண்ணிக்கிட்டா... என்னால தாங்க முடியாதுங்க.... நான் உணர்ந்துட் டேன்..... அவன் தான் முக்கியம்...

''அவனைத் தேடிக் கண்டு பிடிச்சு கூட்டிக்கிட்டு வாங்க'' முகத்திலறைந்து கொண்டு கதறியவளை ஊன்றிப் பார்த்து விட்டு.... ஒரு முடிவுக்கு வந்தவராய் பங்களாவை விட்டு வெளியேறினார் சொக்கலிங்கம்.

## 13

சுபயோக சுப தினத்தில் சுந்தர் - பவித்ராவின் திரு மணம் இனிதே நடந்தேறியது.

பெரிய தனக்காரரின் குடும்பத்திற்கு சொந்தமான 'தீர்க்க சுமங்கலி' கல்யாண மண்டபத்தில் தான் திருமணம் வெகு விமரிசையாக நடந்து கொண் டிருந்தது.

மண்டபத்தில் கூட்டம் நிரம்பி வழிந்து கொண் டிருந்தது. மணமேடையில் இன்னமும் உறவினர்கள் வரிசையாக வந்து விசேஷ அரிசியைத் தூவி விட்டு மணமக்களை வாழ்த்திக் கொண்டிருந்தனர்.

ஆசை ஆசையாக சுந்தர் தேர்வு செய்து கொடுத்த மயில் கழுத்து வண்ண காஞ்சிபுரப் பட்டுச் சேலை யில்.... அழகு மயில் போல் அவன் அணிவித்த மங்கல நாண்..... கழுத்தை நிறைத்த மலர் மாலைகளுக்கிடையே மின்ன..... பவித்ரா தங்கச் சிலையாக அமர்ந்திருந் தாள்.

மணமக்கள் இருவரும் அடிக்கொரு தடவை கடைக் கண்ணால் ஆசையாய் பார்வைப் பரிமாற்றம் செய்து கொண்டிருந்தனர்.

அப்பா பசுபதிக்கும் அம்மா கோமதிக்கும் பெருத்த நிம்மதி ஏற்பட்டிருந்தது.

குருமூர்த்தியும் தேவகியும் சுறுசுறுப்பாய் மண் டபத்தில் இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்தனர்.

உதட்டில் செயற்கையாய் புன்னகையை ஒட்ட வைத்துக் கொண்டு வளைய வந்த மீனாட்சி... அடிக்கடி ஓரக்கண்ணால் தன் புது மருமகளைப் பார்த்த வண்ணம் இருந்தாள்.

மாலையும் கழுத்துமாக புது மணமக்கள் அமர்ந்திருப் பதைப் பார்த்து பூரிப்படைவதற்கு பதிலாக.......



ஆத்திரமும் ஆவேசமும் உள்ளூர மண்டிக் கொண்டு வந்தது.

'பூங்கொடி போன்ற தேகத்துடன் இருக்கும் சிறு பெண்... என் வீட்டில் பெரிய பூகம்பத்தையே ஏற்படுத்தி விட்டாளே?

'இவளால் எனக்கு எவ்வளவு பெரிய தலை குனிவு? நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தானாமே?

'நான் கீறிய கோட்டைத் தாண்டி அறியாத பணிவான பிள்ளையை..... எனக்கு எதிராக எப்படி திருப்பி விட்டு விட்டாள்?

'இவளுக்காக என்னைத் தூக்கி எறிந்து பேசினானே? இரவெல்லாம் வீட்டிற்கே வராமல் எப்படி என்னைக் கலங்கடித்து விட்டான்?

'கோபித்துக் கொண்டு பண்ணை வீட்டில் தங்கி யிருந்தவனை... கெஞ்சிக் கூத்தாடி தானே அழைத்து வந்தார் சொக்கலிங்கம்.

'பிடிவாதத்தை விட்டுக் கொடுத்து கல்யாணத்திற்கு சம்மதம் தெரிவித்தும் கூட... என் முகத்தை ஏறிட்டுப் பார்க்காமல் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந் தானே?

'பக்கத்து ஊரிலிருந்த உறவினர்களை எல்லாம் அழைத்து, வெற்றிலை பாக்கு பழத்துடன் கவுரவத்தை உதறி விட்டு.... தேவகியின் வீட்டு வாசற்படியேறி வலியப் பெண் பார்க்கப் போன தருணத்தில் தானே.... மெல்ல என்னைப் பார்த்து முறுவலித்தான் சுந்தர்?

'பொன் மஞ்சள் நிறத்தில் பார்ப்பதற்கு பேரழகியாகத் தான் இருக்கிறாள்.

'இந்த அழகைக் காட்டி சொக்குப் பொடி போட்டு தானே என் மகனை வளைத்து விட்டாள்.

'என் தோழிகள் எல்லாம் தங்களுக்குள் கிசுகிசு வென்று பேசிக் கொண்டு பரிகாசமாய் சிரிக்கிறார் களே?

'சென்னையிலிருந்து வந்த இந்தக் கிராதகியால் பட்ட அவமானம் இந்தப் பிறவிக்கும் போதும்... ஏழேழு பிறவிக்கும் போதும்.....'

சுட்டெரித்து விடுபவளைப் போன்று பவித்ராவையே பார்த்துக் கொண்டிருந்தாள் மீனாட்சி.

''என்ன அண்ணி இது? அக்கிரமமா இருக்கே? உங்க மதிப்பு என்ன? மரியாதை என்ன? எங்கிருந்தோ வந்த ஒரு சமையல்காரனோட பொண்ணு... உங்க பிள் ளையை அபகரிச்சுட்டு ராஜ வாழ்க்கை வாழ வந்துட் டாளே?

''வீட்டுக்குள்ளே மருமகளா அடியெடுத்து வைக்கும் முன்னேயே உங்க பிள்ளையைக் கைக்குள்ளே போட் டுக்கிட்டாளே?

''அவளைக் கட்டிக்கிடறதுக்குக்காக.... உங்க முகத்துலேயே இனி முழிக்க மாட்டேன்னு... உங்க கிட்ட சண்டை போட்டு வீட்டை விட்டு வெளியேறுகிற அள வுக்கு.... சுந்தரை அடியோட மாத்திட்டாளே?

''இனி வீட்டுக்குள்ளே மருமகளா வந்ததும்.... உங்க பிள்ளையை உங்க கிட்டேயிருந்து மொத்தமா பிரிச்



சுட்டுத் தான்... இவ மறுவேலை பார்ப்பா... போலி ருக்கே?''

தன் மகள் தீபுவை சுந்தருக்கு கட்டி வைத்து.... அந்த சொத்தை ஆண்டு அனுபவிக்கலாம் என்ற நப்பாசை யில்... மீனாட்சியைச் சுற்றிச் சுற்றி வந்து... அவளுக்கு கிலோ கணக்கில் ஐஸ் வைத்துக் கொண்டிருந்தாள் பாலாமணி.

இப்போது தன் மகளுக்கு கிடைக்க வேண்டிய ராஜ வாழ்க்கை பறி போன ஆத்திரத்தில், மீனாட்சிக்கு தூபம் போட்டு தூண்டி விட்டுக் கொண்டிருந்தாள் பாலாமணி.

''சம்பந்தியம்மா.... வாங்க! சாப்பிட நேரமாயிட்டதே'' பவ்யமாய் வந்து அழைத்தாள் கோமதி.

''நீங்களும் வாங்க அண்ணி! சம்பந்தியம்மாளோட சேர்ந்தே சாப்பிடலாம்....'' சிரித்தபடி அருகில் வந்து நின்றாள் தேவகி.

'ஈடு இணை இல்லாதவர்களுடன் சம்பந்தம் செய் தாகிவிட்டது. இனி இவர்களுக்குப் பக்கத்தில் அமர்ந்து சாப்பிட வேண்டாமா?'

ஆத்திரத்தில் குமுறிப் போனாள் மீனாட்சி.

அருவருப்புடன் முகத்தை சுளித்தபடி உணவுக் கூடத்தை நோக்கி நடந்த போது மீண்டும் மருமகளை நோட்டம் விட்டாள்.

சுந்தர் அவளது காதருகே குனிந்து ஏதோ ஜோக்கடித்து விட்டான் போலும்..... பீறிட்டுக் கொண்டு வந்த

சிரிப்பை அடக்கும் பொருட்டு, கர்ச்சீப்பால் உதட்டை மூடி சட்டென்று குனிந்து கொண்டாள்.

அளவு கடந்த ஆனந்தத்தில் அவளது முகம் அன்றலர்ந்த தாமரை மலராய் சோபை கூடியிருப்பதை.... இங்கிருந்தே காண முடிந்தது.

'இப்படி பசப்பு சிரிப்பு சிரிச்சுத் தானே.... என் மகனை மயக்கிட்டே? சிரிக்கிறியா? நீ சிரி!

என் நெஞ்சுல நெருப்பள்ளிக் கொட்டினேயில்ல? வலது காலை எடுத்து வச்சு என் வீட்டுக்குள்ளே வா! நீ எப்படி சிரிக்கிறேன்னு.... நான் பார்க்கிறேன்.

வாடி! வா... உன்னை நான் மொத்தமா அழ வைக்கலைன்னா... என் பேரு மீனாட்சியில்ல......'

பொறாமையில அவள் உள்ளம் பொசுங்கிப் போனாள்.

''பாலாமணி! நீ போய் சாப்பிடு.... நான் வீட்டுக்குக் கிளம்பறேன். கல்யாண வேலை மும்முரத்துல பி.பி. மாத்திரையைப் போட்டுக்க மறந்துட்டேன்.

''உடம்புக்கு எப்படியோ வருது.... நா உடனடியா போயி... மாத்திரை போட்டுக்கிட்டு... சித்த நேரம் தலை சாய்ச்சாத்தான் சரியா வரும்.''

''எனக்கு சாப்பாடு ஒரு கேடா அண்ணி? எனக்கு நீங்க தான் முக்கியம்.... நானும் உங்க கூடவே வந்துடறேன். கவலைப்பட்டாலே பி.பி. எகிறிடுமே?

''ஒரு புள்ளை.... அவனைப் பாசத்தைக் கொட்டி வளர்த்தீங்க. அம்மாங்கிற பாசம் லவலேசமும் இல்லாம... உங்களைத் தூக்கியெறிஞ்சிட்டு.. இந்த அன்னக்காவடி கழுத்துல பிடிவாதமா தாலியைக் கட்டினா.... மனசு குமுறத்தானே செய்யும்?

''ஹும்! உங்க முகத்துக்காகத்தான்..... நான் கல்யாணத்துக்கு வந்தேன்.

''என் மனசுக்கும் எவ்ளோ வேதனையா இருக்கு தெரியுமா? அந்தஸ்துல உங்களுக்கு நான் சமதை இல்லாதவ தான்... அனா நம்ப உறவுக்காரங்களாச்சே?

''ஓரளவுக்கு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவ நான்... என் பொண்ணு தீபுவைக் கட்டியிருந்தா... உங்களுக்கு இந்தத் தலை குனிவு வந்தே இருக்காது.

''எல்லாம் விதி போலிருக்கு! சின்ன வயசிலேர்ந்தே மீனாட்சி அத்தைக்கு மருமகளா ஆகப் போறோம்னு.... கனவு கண்டு கிட்டிருந்தா... அந்த ஆசை நிறைவேறாத துக்கத்துல குப்புறப்படுத்து அழுதுட்டே இருக்கா.....

''அவளைத் தேத்தறதுக்கு வழி வகை தோணாம நானும் உள்ளுர கதறிட்டே இருக்கேன்... எல்லாம் தலையெழுத்து அண்ணி.''

எரிகின்ற நெருப்பில் நெய் வார்த்தாற்போல்... மீனாட்சியின் ஆங்காரத்தையும் கோபத்தையும் மேலும் மேலும் கிளறியபடியே.... ஆவளுடன் காரில் ஏறிச் சென்றாள் பாலாமணி.

''ஏய் பவித்ரா! என் மகளோட இடத்தைத் தட்டிப் பறிச்சே இல்ல? உன் கொட்டத்தை அடக்கி... நீயே இந்த வீட்டை விட்டு ஓடும்படி செய்யறேன். பாரு'' உள்ளுர சவால் விட்டாள் பாலாமணி.

மின்னல் வேகத்தில் தன்னுள் ஆயிரம் திட்டங்களைத் தீட்டினாள்.

நரித்தனமான மூளையைக் கசக்கியதில்... திடீரென்று ஒரு குரூரமான யோசனை உதித்தது. மீனாட்சிக்கு தெரியாமல் கோணல் சிரிப்பு சிரித்தவள்.... அதை செயலாக்கவும் துணிந்தாள்.

மருமகளாக அடியெடுத்து வந்த நாளன்றே... மிகப் பெரிய அதிர்ச்சி பவித்ராவிற்காகக் காத்துக் கொண் டிருந்தது.

## 14

''அண்ணி! கார் வர்ற சப்தம் கேட்குது.... பொண்ணு, மாப்பிள்ளை வந்துட்டாங்க போலிருக்கு... நீங்க இப்படி படுத்துக் கிடக்கிறதைப் பார்த்தா... உறவுக்காரங்க உங்க தலையை உருட்ட ஆரம்பிச்சிடுவாங்க... மெதுவா எழுந்து வாங்க அண்ணி.''

மீனாட்சியின் தோளைத் தொட்டு அசைத்தாள் பாலாமணி. கட்டிலில் ஒருக்களித்துப் படுத்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தவள்... அசைந்து கொடுக்கவே இல்லை.

''நீ வேணும்னா போ! ஆரத்தித் தட்டை ஏந்தி, அந்தக் கேடு கெட்டவளை என்னால வரவேற்க முடியாது'' பிடிவாதமாய் வர மறுத்து விட்டாள் மீனாட்சி.



பாலாமணி... வம்பு, தும்பு சமாச்சாரங்களுக்காக ஆலாய் பறக்கும் பெண்மணி!

என்ன நடக்கிறது? என்று வேடிக்கை பார்ப்பதற்காக ஆவலாய் விரைந்து விட்டாள்.

மணமக்களுடன் காரில் வந்திறங்கிய சொக்கலிங்கம் சுற்றும் முற்றும் பார்த்தார்.

மனைவி மீனாட்சி கண்ணிலேயே அகப்படவில்லை. மனைவியின் குணத்தைப் பரிபூரணமாய் புரிந்து கொண் டவர் ஆயிற்றே?

குழுமியிருந்த உறவுக் காரப் பெண்களில் மூத்த சுமங்கலியை அழைத்து, ஆரத்தி சுற்றி மணமக்களை வரவேற்கச் செய்தார்.

பவித்ராவுக்கு படபடப்பாய் இருந்தது.

பார்வையைச் சுழற்றி அங்கும் இங்கும் மெல்லப் பார்த்தாள்.

மாமியார் மீனாட்சி எட்டிக்கூடப் பார்க்காமல் இருந்தது... அவளுக்குள் திகிலை சுரக்கச் செய்தது.

''என்ன பாலாமணி? மீனாட்சி என்ன பண்றா? புது மருமக பூஜையறையில விளக்கேத்தணும்.

''புள்ளைக்கும் மருமகளுக்கும் பால் பழம் கொடுத்து அவ ஆசீர்வாதம் பண்ணினதுக்கு அப்புறமாத்தானே மத்தவங்க ஆசீர்வாதம் பண்ண முடியும்?

''சீக்கிரம்... எல்லாரும் காத்துட்டிருக்காங்கன்னு சொல்லி அவளை அழைச்சுட்டு வா.

''பால் பழம் சாப்பிட்டுட்டு இவங்க கொஞ்சம் ஓய்வா இருக்கட்டும். இன்னிக்கு சாயந்தரமே கார்லே மூணாறு

வேலைக்காரர்களை அதட்டுவது போல் சொக்கலிங்கம் ஜாடையாகப் பேசியதும்.... உறவுத் தலைகள் இலேசான முணுமுணுப்புடன் கலைந்து சென்றனர்.

ஃபேமிலி டாக்டர் வந்து பரிசோதித்து விட்டு... ''வலியில ரொம்ப துடிக்கிறாங்க... இஞ்செக்ஷன் போட்டிருக்கேன்.

''விழுந்த வேகத்துல வலது கையை ஊன்றியிருக்காங்க போல.. ஒட்டு மொத்த வெயிட்டும் கையில லொக்கேட் ஆகியிருக்கு....

''அதுவும் தவிர... எசகு பிசகா. முழங்கால் மடங்கி மூட்டுல பலமா அடிபட்டிருக்கும்னு நெனக்கிறேன். எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கவும் வாய்ப்பிருக்கு.... உடனடியா ஹாஸ்பிடல்லே அட்மிட் பண்ணிட்டா... டெஸ்ட் எடுத்துப் பார்த்துட்டு ட்ரீட்மெண்ட்டை ஆரம்பிச்சுடலாம்.

''அவங்களாலே கையைக் காலை அசைக்க முடியாது.

''நம்ம ஹாஸ்பிடலுக்கு ஃபோன் பண்ணி ஆம்புலன்ஸை வரவழைச்சுடறேன்.''

தனது செல்ஃபோனை உயிர்ப்பித்து உத்தரவைப் பிறப்பித்தபடியே நடந்த டாக்டரை.... சுந்தரும் சொக்கலிங்கமும் பின் தொடர்ந்தனர்.

''ஐயோ அம்மா! வலி உயிர் போகுதே?'' அனத்தியபடி மெல்ல தனக்கு நேரெதிரே சுவரோரமாய் நின்றிருந்த பவித்ராவின் மீது பார்வையைப் பதித்தாள் மீனாட்சி.

''பவி.... பவின்னு உருகுனானே எம்புள்ளை? பாவி! நீ வந்த நேரம்... மாறுகால் மாறுகை வாங்கினாப்பல..... வலது கையும் இடது காலும் போச்சே...? பாவி! எல்லாம் உன்னால தான்! ராசி கெட்டவளே... ஐயோ... வலி பின்னுதே? நான் என்ன செய்வேன்?'' முகத்தைத் திருப்பிக் கொண்டு அனத்தத் தொடங்கினாள்.



கடவுளே! வந்ததும் வராததுமா எனக்கு இப்படியொரு அவப் பெயர் வந்துட்டதே? நான் என்ன பாவம் செய்தேன்? சுந்தரும் இதே போன்று என்னை வெறுக்க ஆரம்பித்து விட்டால்....? பயத்தில் கை விரல்கள் நடுங்கி சில்லிட்டன.

பொங்கி வந்த அழுகையை... கீழுதட்டை அழுந்தக் கடித்து அடக்கியபடி திகிலுடன் அறையை விட்டு வெளியேறினாள்.

## 15

கிட்டத்தட்ட பத்து நாட்கள் கழித்து ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பியிருந்தாள் மீனாட்சி.

''முழங்கால் மூட்டுலே இலேசா எலும்பு முறிவு ஏற்பட்டிருக்காம். எலும்பு கூடி வர்ற வரைக்கும் காலை அசைக்கப் படாதாம்.

''வலது முழங்கை பிசகிப் போச்சுன்னு பெரியகட்டா போட்டு கையை தொட்டில்லே தொங்க விட்டுட்டாங்க....

''குணமாகி எழுந்து நடக்க எத்தனை மாசம் பிடிக்குமோ தெரியலையே? இந்தப் பாவி... சண்டாளியாலே வந்த வினை!''

எஸ்டேட் பங்களாவுக்கு.... தேனிலவுக்காகப் புறப்பட றாங்களே?

''சீக்கிரமா அண்ணியைக் கூட்டிட்டு வாம்மா'' வேண்டுமென்றே உரத்துக் குரல் கொடுத்தார் சொக்க லிங்கம்.

''இதோ... கூட்டிட்டு வந்துடறேன் அண்ணே'' அரக்கப் பரக்க உள்ளே ஓடினாள் பாலாமணி.

''அண்ணி! எந்திரிச்சு வாங்க.... அண்ணன் பேசி னதைக் கேட்டீங்கள்ல? நீங்க வராம இருந்தா... அத்தன ஜனங்க மத்தியில உங்களுக்குத்தான் அவப்பேரு வந் துடும்.

''பால் பழத்தை ஒப்புக்குக் குடுத்துட்டு உடனே வந்துடுங்க அண்ணி! உலை வாயை மூடிடலாம் ஆனா ஊரு வாயை மூடிட முடியாது. தெரிஞ்சுக்கோங்க.''

''சே! இந்த மனுஷனோட பெரிய ரோதனையா போச்சே? என் மனசைப் புரிஞ்சுக்காம.... ஏன் தான் இப்படி என்னை அலைக்கழிக்கிறாரோ?''

''அறிவு கெட்ட மனுஷன்! சபை ஜனங்க மத்தியில வேணும்னே என்னைக் கூப்பிட்டு அவஸ்தைப் படுத்த றாரே?'' என்று புலம்பியபடி தளர்வாய் நடந்து போனாள் மீனாட்சி.

'வேணும்..... உனக்கு நல்லா வேணும் மீனாட்சி! என் பொண்ணை மருமகளாக்கிக்க ஆயிரம் வாட்டி நீ யோசிச்சே? என் மனசை நீ நோகடிச்சே இல்ல?'

கண்டமனூர் ஜமீன், வெள்ளியங்கிரி எஸ்டேட் வீட்டுல பொண்ணெடுக்கலாம்னு பறந்தே.... வேணும் உனக்கு!



உன் ஜபர்தஸ்து கௌரவம், அந்தஸ்து எல்லாத் தையும் உன் புள்ளை காத்துல பறக்க விட்டுட்டான்.

என் மனசை நீ நோகடிச்சதுக்கு..... அனுபவிக்க வேண்டாமா? நீயும் அனுபவிக்கணும்... என் மகளோட ஸ்தானத்தைத் தட்டிப் பறிச்ச அந்த பவித்ராவும் அனுபவிக்கணும்.... இரு...இரு!'

மீனாட்சியைப் பின் தொடர்ந்து செல்லாமல் அந்த அறைக்குள் நின்றபடி நாலாபுறமும் சுற்றிப் பார்த்தாள்.

சுற்றும் முற்றும் எதையோ தேடினாள். டிரஸ்ஸிங் டேபிளின் மீது இருந்த எண்ணெய் பாட்டிலைக் கண் டதும் ...அவளது மூளைக்குள் ஒரு மின்னல் பளிச்சென்று பாய்ந்தது.

கண் இமைக்கும் நேரத்தில் பாட்டிலைத் திறந்து... அந்த அறையின் நிலைக்கதவருகே.... நடந்து வரும் வழியில் எண்ணெயை ஊற்றினாள்.

பாட்டிலை கவனமாய் மூடி எடுத்த இடத்தில் சமர்த் தாய் வைத்து விட்டு... சர்வ ஜாக்கிரதையாய் தரையில் எண்ணெய் சிந்தப் பட்ட இடத்தை ஓரமாய் சுற்றிக் கொண்டு வெளியேறினாள்.

பிரமாண்டமான ஹாலில் குழுமியிருந்த உறவுக் கார கும்பலுடன் கலந்து கொண்டாள்.

மருமகள் விளக்கேற்றி முடித்ததும் மணமக்களை அமர வைத்து... செயற்கையாய் புன்னகைத்தபடி பால் பழம் கொடுத்து ஆசீர்வதித்து விட்டு... உறவுக்காரப் பெண்களைப் பார்த்துக் கை கூப்பினாள் மீனாட்சி.

தன்னைப் பார்க்க வந்த எதிர் வீட்டுக்காரியிடம் புலம்பினாள் மீனாட்சி.

தங்கமாய் பளபளத்த பித்தளை பூஜாடியில்.... தோட்டத்து ரோஜா மலர்களைக் கொத்தாக சொருகி.... டேபிள் மேஜையில் வைத்து விட்டு நகர்ந்த பவித்ரா வுக்கு.... கண்களில் நீர் திரையிட்டது. பார்வையைத் தழைத்தபடி வெளியேறினாள்.

கண்ணீரைப் புறங்கையால் துடைத்தபடி... காபி போட்டு நுரை பொங்க ஆற்றி, முன்னறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த கணவனுக்கும் மாமனாருக்கும் கொடுத்தாள்.

அவளது விழிகளும் மூக்கு நுனியும் சிவந்திருந் ததைப் பார்த்து விட்டு சொக்கலிங்கம், ''அம்மாடி பவித்ரா! இப்பத்தான் உங்கப்பா எனக்கு ஃபோன் பண் ணினாரு.

''சம்பந்தியம்மா வீடு திரும்பிட்டாங்களா? இப்போ பரவாயில்லையான்னு ரொம்பவே விசாரிச்சாரு.

''உங்க பொண்ணைப் பற்றி எதுவும் கேட்க மாட்டீங் களா?' அப்படின்னு கேட்டேன்.

''பெரிய தனக்காரர் அப்படின்னாலே ஒரு 'தாயு மானவர்'னு ஜனங்க சொல்லக் கேட்டிருக்கேன். நீங்க இருக்கும் போது எம் பொண்ணுக்கு என்ன குறைச்சல் வந்துடப் போகுதுன்னு அவ்ளோ நம்பிக்கையா பேசி னாரு. நெகிழ்ந்துட்டேன்.

''ஆனா உள்ளூர நெருஞ்சி முள் உறுத்தத்தான் செய் யுது. மீனாட்சி மத்தவங்களுக்கு எதிரேயே உன் மனசை நோகடிக்கிறாளேன்னு வருத்தமா இருக்கும்மா......



''இங்க வந்த நாள்லே இருந்து... உன் முகத்துல சிரிப்பு காணாமே போயிடுச்சே? ஏதோ ஒரு குற்றவுணர்ச்சி யிலே சதா கண் கலங்கிட்டுத் தானே இருக்கே?

''எடுத்துச் சொன்னா... மீனாட்சி திருந்தக் கூடிய ஜென்மம் இல்ல... அவ பிறவிக்குணம் அப்படி?

''நீ எதையும் மனசுல வச்சுக்காதம்மா.... அவ சார்பா நான் உன்கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன்...''

''ஐயோ மாமா! என்னது இது? பெரிய வார்த்தை எல்லாம் சொல்லிக்கிட்டு?''

''அத்தையோட நிலைமையில யார் இருந்தாலும்... இப்படித்தான் மாமா நடந்துக்குவாங்க...

''அவங்களை என் தாயாத் தான் மதிக்கிறேன் மாமா! அவங்க இப்போ ஒரு பேஷண்ட்... இயலாமையில அவங்களுக்கு கோபம் வர்றது சகஜம் தானே?

''தவிர... நான் ஒரு ராசியில்லாதவ போலிருக்கு மாமா! அதான் அத்தைக்கு இப்படி ஆயிடுச்சுன்னு ரொம்ப வருத்தமா இருக்கு'' மெல்ல விசும்பினாள் பவித்ரா.

''சதா உன்னை இந்த மாதிரியே குத்திக் காட்டிப் பேசியே... உனக்கு ஒரு குற்ற உணர்ச்சி வரும்படி பண்ணிட்டா மீனாட்சி.

''இதோ பாரும்மா... நீ படிச்ச பொண்ணு. உன்னை மருமகளா அடைய மீனாட்சி.... முன் ஜென்மத்துல ஏதோ புண்ணியம் பண்ணியிருக்கணும்.

''உன் அருமையை கூடிய சீக்கிரம் புரிஞ்சுக்குவா... பார்த்துக்கிட்டே இரு!

''குழந்தைங்களை மனசார வாழ்த்துங்க... உங்க வாழ்த்து தான் அவங்களை வாழ வைக்கும்.

''எனக்கு கொஞ்சம் உடம்புக்கு முடியலை. கூடமாட இருந்து உங்களை கவனிக்க முடியாததுக்கு மன்னிக்கணும். நீங்க எதையும் மனசுல வச்சுக்கப் படாது.

''நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டுமா?''

''உடம்புக்கு முடியாதவங்க நீங்க... போய் ரெஸ்ட் எடுங்க பாவம்'' கோரஸாய் சிலர் கூறியதும்... நிம்மதி பெருமூச்சு விட்ட படி தன் அறையை நோக்கி நடந்தாள்.

பவித்ரா விளக்கேற்றிய காட்சி... திரும்பத் திரும்ப மனக் கண்ணில் வந்து நின்று... அவளது உள்ளத்தை எரிமலையாய் குமுற வைத்தது.

ஆத்திரம் கண்ணை மறைத்ததால்... தரையில் கொட்டிக் கிடந்த எண்ணெயை கவனிக்காமல்... கால் வைத்து தடாலென்று வழுக்கி விழுந்தாள்.

''ஐயோ அம்மா! நான் செத்தேன்.'' அந்த பங்களாவே கிடுகிடுக்கும் வண்ணம் அலறிய அவள் அலறலைக் கேட்டு..... பவித்ராவுக்கு பகீர் என்றிருந்தது.

திகிலிலும் பயத்திலும் அவளுக்கு உதறலெடுத்தது.

பதறியடித்துக் கொண்டு தாயின் அறையை நோக்கி ஓடிய கணவனைக் கலக்கத்துடன் பார்த்தபடி தயக்கமாய் பின் தொடர்ந்தாள்.

அவ்வளவு தான்! அந்த பங்களாவே அமளி துமளிப் பட்டது.



குழுமியிருந்த உறவுக்காரர்கள் பவித்ராவை ஒரு தினுசாக நோட்டம் விட ஆரம்பித்தனர்.

வேலைக்காரர்களும் உறவினர்களும் முண்டியடித்துக் கொண்டு எட்டிப் பார்த்தனர்.

கூட்டத்தோடு கூட்டமாய் நின்றிருந்த துணிவில் பாலாமணி, ''என்னது இது? மருமக அடியெடுத்து வச்சு ஒரு மணி நேரம் கூட ஆகலை... அதுக்குள்ளே மாமியாரை ஒரேயடியா சாய்ச்சுட்டாளே?'' என்று சப்தமாய் கூறியது தான் தாமதம்.....

''அதானே? புதுப் பொண்ணு அடியெடுத்து வச்ச நேரம் சரியில்லை போல... அதான்!''

''ராசியில்லாத பொண்ணு போல.''

கூட்டத்தில் சலசலப்பு! ஆள் ஆளுக்கு முணுமுணுத்ததைக் கேட்டதும்... ஆடிப் போனாள் பவித்ரா.

சுவரோரமாய் கூனிக் குறுகி ஒடுங்கிப் போய் நின்று விட்டாள்.

''கல்யாண வீடு... குழந்தை குட்டிங்கன்னு உறவுக்காரங்க நிறைஞ்சிருக்காங்க... யாரோ எண்ணெயை தவறுதலா சிந்திட்டாங்க....

''இவளும் கவனிக்காம கால் வச்சு விழுந்துட்டா.... சின்ன அசம்பாவிதம் ஏற்பட்டுப் போச்சு.

''இதுக்குப் போயி... நேரம், ராசின்னு கண்டதையும் பேசி மனசைப் புண்படுத்தக்கூடாது. டாக்டர் வந்துட்டே இருக்காரு.

''கூட்டம் போட்டுக்கிட்டு நிக்காம.... அவங்கவங்க வேலையைப் பார்க்க வேண்டியது தானே?'' தன் வீட்டு

''டேய் சுந்தர்! பவித்ராவைக் கூட்டிக்கிட்டுப் போயி சமாதானப் படுத்து'' சட்டென்று எழுந்து ஹாலை விட்டு வெளியேறினார்.

''வா! ஒரு அஞ்சு நிமிஷம் ரூமுக்கு வந்துட்டுப் போ பவி'' அவனது பேச்சைத் தட்ட முடியாமல் அரை மனதோடு தான் சென்றாள்.

மனைவியைப் பரிதாபத்துடன் ஏற இறங்கப் பார்த் தான் சுந்தர்.

''உன்னைப் பார்த்தா ரொம்பவே பாவமா இருக்கு பவி! அன்னிக்கு டெஸ்ட் ரிசல்ட்டுலே அம்மாவுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டிருக்குன்னு சொன்னதும்... ரொம்பவே நீ அழுதுட்டே....

''ஹாஸ்பிடல்லே பகல் முழுவதும் அப்பா, அம்மா கிட்டே இருந்தாரு... அவங்க கரிச்சுக் கொட்டினாலும் பரவாயில்லைன்னு ராத்திரி முழுவதும் நீ தான் கவ னிச்சுக்கிட்டே....

''பகல்லேயும் நீயே கவனிச்சுக்கிறேன்னு தான் சொன்னே... யாராவது விசிட்டர்ஸ்க்கு முன்னாடியே உன்னை அம்மா அவமானப் படுத்திடுவாங்களோன்னு பயந்து தான்.. அப்பா பகல்லே அவரே கவனிச்சாரு....

''வேலை செய்ய ஒரு ஆட்படையே இருந்தும்.... தினமும் உன் கைப்படவே பக்குவமா சமைச்சு... வீட் டையும் நிர்வகிச்சு நைட்டுலே அம்மாவையும் பார்த் துக்கிட்டே....

''இந்தப் பத்து நாள்லே நீ எப்படி வாடி வதங்கிட்டே தெரியுமா? இன்னிக்குப் பூத்த ரோஜாப் பூ மாதிரி எவ்ளோ ஃப்பிரஷ்ஷா பொலிவா இருப்பே?



''அம்மாவை கவனிச்சுக்க... பகல்லே ஒரு நர்ஸையும், நைட்டுக்கு ஒரு நர்ஸையும்.... டாக்டர் கிட்டே சொல்லி ஏற்பாடு பண்ணிடலாம்னு அப்பா சொல்றாரு....

''அத்தோட.... இத்தனை பேர் இருக்கோமே? நாங்க பார்த்துக்கிறோம்... நீ பவியைக் கூட்டிக்கிட்டு தேனில வுக்குப் போயிட்டு வாப்பான்னு அப்பா இப்போ தான் சொன்னாரு.

''எனக்கு உள்ளூர உறுத்தலா இருக்கு பவி! என்னைக் கட்டிக் கிட்ட நாள்லே இருந்து நீ சுகப்படவே இல்ல...

''இரவெல்லாம் கண் முழிச்சு அம்மாவை கவனிச் சுக்கிறே... கொஞ்சங் கூட ஓய்வு ஒழிச்சல் இல்லாம போயிட்டதே?

''இதுல அப்பப்போ அம்மா உன்னைக் கரிச்சுக் கொட்டி... மனசைப் பச்சைப் புண்ணாக்கிட்டு இருக் காங்களே?

''என்னால தானே இத்தனை சங்கடமும்? என்னால உனக்கு நிம்மதியும் சந்தோஷமும் தர முடியாம போச்சே?''

குரல் கம்ம பேசியபடியே அவளது வலது கரத்தைப் பற்றி தன் கன்னத்தில் பொருத்திக் கொண்டான் சுந்தர்.

''எ... என்ன சுந்தர் இது? இப்படிப் பேசினா எப்படி? அத்தையை கவனிச்சுக்க வேண்டியது என் கடமையில் லையா?

''என் கடமையைத் தானே நான் செய்றேன்? எங்கம்மா கூட உடம்புக்கு முடியாதவங்க தான். அடிக்கடி என்மேல் எரிஞ்சு விழத்தான் செய்வாங்க...

''நான் மனசுல எதையும் வச்சுக்க மாட்டேன். அது மாதிரி தானே அத்தையும்? அவங்களைப் பெத்த தாயா நான் மதிக்கிறேன்.

''நாம்ப விரும்பி கல்யாணம் செய்துகிட்டவங்க... என்னைப் பிரிச்சுப் பார்க்காதீங்க...

''பிரிச்சுப் பார்த்தா தான் மனசுல உறுத்தம். சரியா? அத்தைக்குப் பரிபூரணமா குணமாகி நல்லா நடமாடற வரைக்கும்.... நான் அவங்க கூடவே தான் இருக்கப் போறேன். எத்தனை மாசங்கள் ஆனாலும் சரி....

''அதுக்கு அப்புறமா.... நாம்ப தாராளமா தேனில வுக்குப் போகலாம்.

''பகல்லே வேணும்னா கொஞ்ச நாளைக்கு நர்ஸ் வந்து பார்த்துட்டுப் போகட்டும். நைட்டுலே நானே கவனிச்சுப்பேன்.

''நர்ஸா இருந்தாலும் சரி... வேலைக்காரியா இருந் தாலும் சரி... சம்பளத்துக்காக கடமையைச் செய்யறவங்க.. ஒப்புக்குத் தான் கவனிச்சுப்பாங்க...

''ஆனா நான் அத்தையை கண்ணும் கருத்துமா கவனிச்சுப்பேன். ப்ளீஸ்.''

அவள் பேசப் பேச.... மெழுகாய் உருகிப் போனான் சுந்தர்.

''ரியலி.... ஐ லவ் யூ ஸோ மச்டா... உன்னை மனை வியா அடைய நான் ரொம்பவே குடுத்து வச்சிருக் கணும்'' உணர்ச்சி வசப்பட்டுப் பேசியவன்.. சட்டென்று அவளை இழுத்து தன் நெஞ்சோடு அணைத்துக் கொண் டான்.



''பவி! உன் பேருக்கு ஏத்தாப்பல நீ ஒரு பவித்ரமான பொண்ணு தெரியுமா?'' என்றபடி அவளது முகத்தை தனது கரங்களால் ஒரு பூவைப்போல் தாங்கி... கன்னத் தில் மென்மையாக இதழ் பதித்தான்.

இவருவரும் ஒருவரை ஒருவர் அன்புடன் பார்த்தபடி கிறங்கிப் போய் நின்ற போது... கூடவே நேரமும் ஸ்தம் பித்து நின்று விட்டாற்போல்..... ஒரு பிரமை ஏற்பட்டது நிஜம்!

## 16

அதுவரை பெரிய மலைக்கல்லாய் மனதை அழுத்திக் கொண்டிருந்த பாரம்.... சூரியனைக் கண்ட பனி போல் சட்டென்று மாயமாய் மறைந்தது.

''உ... உங்களை நெனச்சு நான் ரொம்ப பயந்துட் டிருந்தேன். இன்னிக்குத் தான் என் மனசுக்கு நிம்மதியா இருக்கு சுந்தர்.''

''பயமா? என்னை நெனச்சா? எதுக்காக?'' அவளது தாடையைத் தொட்டு நிமிர்த்தி.... அவளது விழிகளை ஊன்றிப் பார்த்தான்.

''நம்ம மனைவி வந்த நேரம் தான்... அம்மாவை இப்படி படுக்கையில தள்ளிட்ட தோன்னு நீங்க என்னை வெறுத்திடுவீங்களோன்னு ரொம்ப பயந்துட் டேன்...''

''சேச்சே மண்டு! என்னை நீ புரிஞ்சுகிட்டது இவ்வளவு தானா? உன்னை நான் என் உயிருக்கும் மேலா நேசிக்கிறேனே?

''உன்னை நான் வெறுக்கிறதா இருந்தா... என்னையே நான் வெறுக்கிறதா அர்த்தம்! புரிஞ்சுக்கோ...

''நெஞ்சுல ஈரமில்லாம... நேரம், காலம், ராசி, தோஷம்னு பேசி... உன்னைப் புண்படுத்திடுவேன்னு..... என்னை மட்டமா நெனச்சுட்டியே பவி?''

''ஸாரி... ஸாரி சுந்தர்! நான் அப்படி நெனச்சது தப்பு தான்.. கன்னத்துல ரெண்டு போட்டுக்கிட்டாத்தான்... எனக்கு அறிவு வரும்.''

முந்துப் பல் வரிசை தெரிய இதமாய் முறுவலித்தாள்.

அதுவரை இருண்டு கிடந்த முகத்தில் பளீரென்று மின்னல் தோன்றியது போல் அவளது முகம் பிரகாசித்ததைக் கண்டு... உள்ளுக்குள் சுந்தருக்கு திருப்தி ஏற்பட்டது.

''அந்தப் பட்டுக் கன்னத்துல நான் ரெண்டு கொடுத்தா.. எல்லாம் சரியாயிடும்னு நெனக்கிறேன்.'' குறும்புத்தனமாய் பேசியபடி அவளது முகத்தை நோக்கி குனியப் போனவனிடமிருந்து திமிறி விடுபட்டாள்.

''அத்தைக்கு ஜவ்வரிசி கஞ்சி வச்சுத் தரணும். நேரமாகுது நா வரேன்.''

செக்கர் வானமாய் அவளது அழகுமுகம் சிவந்திருந்தது. பார்வையைத் தழைத்தபடி பேசிவிட்டு... விருட்டென்று ஓடி விட்டாள்.



ஜவ்வரிசி கஞ்சியைத் காய்ச்சி கை பொறுக்கும் சூட்டில் ஆற்றி எடுத்துக் கொண்டு போனாள்.

மீனாட்சிக்கு கழுகுக் கண்கள். பவித்ராவின் முகத்தில் பரவியிருந்த மலர்ச்சியையும் அவளது விசாலமான விழிகள் புதுவிதமாய் மினுங்கியதையும் கண்டவளுக்கு... உள்ளூர பற்றிக் கொண்டு வந்தது.

'அதுக்குள்ளே புருஷன் கிட்ட கொஞ்சலாய் பேசி விட்டு வந்திருக்கா கிராதகி' எண்ணியபடியே பற்களை நறநறத்தாள்.

தலையணைகளை உயர்த்தி வைத்து மாமியாரைக் கைத்தாங்கலாய் பற்றி கட்டிலில் சாய்ந்த வாக்கில் பற்றி வசதியாய் அமர உதவினாள் பவித்ரா.

''நர்ஸை எங்கே காணோம்?'' உறுமினாள்.

''அந்த நர்ஸோட குழந்தைக்கு காய்ச்சலாம், அதனால இன்னிக்கு வரமுடியாதுன்னு ஃபோன்ல சொன்னாங்க.''

''உன் கையால கஞ்சி குடிக்கணும்னு எனக்கு தலையில எழுதியிருக்கே? வீட்டுக்கு கொண்டு வந்து என்னைச் சேர்த்தாச்சு... உங்க சந்தோஷமான வாழ்க்கைக்கு நான் இடைஞ்சலா இருப்பேன்னு நெனச்சு... இந்தக் கஞ்சியில நீ என்ன மருந்தைக் கலந்து தர்றியோ? யார் கண்டது?

''ஒருவேளை மந்திரிச்ச விபூதி, வசிய மருந்தைக் கலந்துட்டியோ? சனியனே! எனக்கு உன்னைக் கண்டாலே ஆகலைன்னு தெரிஞ்சும்.... என்னைக் கரிசனமா பார்த்துக்கிடற மாதிரி என் முன்னாடியே வந்து நிக்கறியே?

''ஊமைக் கோட்டானே! நீ வந்ததுமே எனக்குக்கேடு வந்துருச்சே? உன் மனசில என்ன எண்ணம் இருக்குன்னு எனக்குத் தெரியும்.

''என்னை சீக்கிரமா கொண்டு கரையேத்திட்டு... இந்த பங்களாவுலே உன் வீட்டுப் படைகளோட ராஜாங்கம் நடத்தலாம்னு திட்டம் போட்டு வந்திருக்கே....

''என் மகன் ஒரு வெகுளி.... உன்னோட சூது வாது புரியாம உன் அழகுல மயங்கி உன்னைக் கட்டிக்க ஒத்தைக் கால்லே நின்னு... என்னை நோகடிச்சானே?

''அவனை இழுத்துக்கிட்டு தேனிலவு கொண்டாடப் போகலாம்னு திட்டம் போட்டிருப்பியே? கல்யாணத்துக்கு முன்னாடியே அழகைக் காட்டி மயக்கினவள்...

''தாலி கட்டிக்கிட்டு வீட்டுக்குள்ளேயே வந்துட்டே.... அவனை மொத்தமா வசியம் பண்ணி முந்தானையில முடிஞ்சு தலையாட்டி பொம்மையா ஆக்கிடலாம்னு காத்திருக்கே?

''எனக்கு எதுவுமே தெரியாதுன்னு நெனச்சுட்டியா? எனக்கு நீ தர்ற கஞ்சி வேணாம்....'' கோபத்துடன் இடது கையால் பக்கத்து டேபிள் மீதிருந்த டம்ளரை எடுத்துத் தரை மீது வீசி எறிந்தாள்.

''என்னம்மா இது? நீங்க இறைஞ்சு கத்தறதைக் கேட்டுக்கிட்டுத் தான் வர்றேன். வந்த நாள்லே இருந்து உங்ககிட்டவே இருந்து தானே கவனிச்சுக்கிறா?

''வரம்பு மீறிப் பேசிட்டிருக்கீங்கம்மா.... இந்தக் காலத்துல ரெண்டு வார்த்தைக்கு மேல பேசிப் பாருங்க... வேலைக்காரி கூடத் தாங்க மாட்டா...



''தேனிலவுக்குப் போகலாம் வான்னு நான் கூப்பிட்டுப் பார்த்தும் கூட... அவ வர மறுத்துட்டா தெரியுமா? நீங்க குணமாகி நல்லா நடமாடற வரைக்கும் வைராக்கியமா விரதமிருக்கேன்னு சொல்லிட்டா... போதுமா?

''சும்மா அவளை நோகடிச்சுட்டே இருக்காதீங்க.... என்னைக் கட்டிக்கிட்ட பாவத்துக்காக.. உங்க கிட்டே சதா பட்டுகிட்டே இருக்கணும்னு... அவளுக்கு என்ன தலையெழுத்தா?

''எனக்கு நீங்க எந்த அளவுக்கு முக்கியமோ? அந்த அளவுக்கு அவளும் முக்கியம். தெரிஞ்சுக்கோங்க.....

''கண்டவங்களுக்கு முன்னாடி நீங்க அவளை அவமானப் படுத்தறதை... என்னால இனிமே பொறுத்துக்கவே முடியாது.

''இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டா.... குருமூர்த்தி - தேவகி தம்பதிங்க சும்மா இருக்க மாட்டாங்க.....

''ஊருலே நாலு பேத்தைத் திரட்டிக்கிட்டு.... நியாயம் கேட்க வந்துடுவாங்க....

''உங்களால நானும் அப்பாவும் சேர்ந்து தலை குனிஞ்சு நிக்கணும்னு நெனக்கிறீங்களா?''

''எ... என்னங்க! ஏன் சின்ன விஷயத்தைப் போய் இப்படி பெரிசு படுத்தறீங்க? சதா படுத்தே இருக்காங்க.... கஞ்சி, மருந்து மாத்திரைன்னு பார்த்துட்டிருந்தா.... யாருக்கும் டென்ஷன் வரத்தான் செய்யும்... பதிலுக்கு நீங்களும் டென்ஷன் ஆகலாமா?''

''நீங்க போங்க... அத்தைக்கு கஞ்சியைக் குடுத்துட்டு வந்துடறேன்.''

மறு வார்த்தை பேசாமல் கோபத்துடன் வெளியேறி னான் சுந்தர்.

''என் மேல எவ்ளோ அன்பாயிருந்தான் தெரியுமா? உனக்கு பரிஞ்சுக்கிட்டு என்னை எப்படிப் பேசிட்டுப் போறான். பார்த்தியா? அந்தளவுக்கு நீ அவனை மாத் திட்டே?''

''ஒரு வார்த்தை நீ பேசினதும்.. பெட்டிப் பாம்பா அடங்கிட்டுப் போயிட்டானே? ஐயோ! என் மகன் கதி இப்படி ஆயிடுச்சே?'' மீனாட்சி புலம்பி விக்கி அழுதாள்.

''அ....அத்தே! இப்படி நீங்க பேசி... அழுது... ஆத்திரப்பட்டா உங்க உடம்புக்கு நல்லதில்லே..... பி.பி வேற எகிறிட்டா...அப்புறம் ரொம்ப கஷ்டமாயிடும் அத்தே.''

''இப்ப நீங்க மாத்திரை போட்டுக்கணும். மறுக்காம இந்தக் கஞ்சியைக் குடுச்சிடுங்க அத்தே....ப்ளீஸ்.''

''சரி! முதல்ல செல்ஃபோனைக் கொண்டா.... நான் பாலாமணி கிட்டே பேசணும்.''

செல்ஃபோனை வாங்கி உயிர்ப்பித்து பாலாமணி யுடன் பேசத் தொடங்கினாள். குரலை சற்றே தழைத் துக்கொண்டாள்.

''பாலாமணி! நான் தீபுவை உடனே பார்க்கணும். அவ என் கண்ணுலேயே நிக்கிறா... கொஞ்ச நாளைக்கு அவ என கூட வந்து தங்கினா... நான் ரொம்பவே சந்தோஷப் படுவேன்...



''உங்கண்ணன் ஏதாச்சும் சொல்வாரோன்னு பயப் படறியா? அவரு கெடக்காரு.... நீ என் பேச்சைத் தட் டாதே.

''ஏக போக உரிமையோட இந்த வீட்டுல மருமகளா நடமாட வேண்டிய பொண்ணு அவ...

''பெரிய தனக்காரர் வீட்டுக்கு மருமகளாப் போகறதுக் குரிய யோகம்... அவளுக்கு இருக்கிறதா ஒரு ஜோசியக் காரர் சொன்னாருன்னு அடிக்கடி சொல்வியே?

''தீபுவுக்கு நல்ல முகராசி தெரியுமா? அவ எதிர்த் தாப்பால வந்தா... போற காரியம் வெற்றியாத்தான் முடியும்.

''ஹூம்! ஜோசியக்காரர் சொன்னது பொய்யாப் போச்சே? இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகலை... அப்படி ஒரு பிராப்தம் இருந்தா... இனிமேல் அது நடக்காமலா போயிடும்?

''ஆமா... பாலாமணி! எனக்கும் இன்னும் அதுலே நம்பிக்கை இருக்கத்தான் செய்யுது.

''ரெண்டுலே ஒண்ணைப் பார்த்துட வேண்டியது தான். தீபுவை அனுப்பி வை... மத்ததெல்லாம் தன்னால நடந்துட்டுப் போகுது சரியா?''

மீனாட்சிக்கு கஞ்சியைக் கொடுத்து குடிக்க வைத்து மாத்திரை மருந்து தந்து தூங்கச் செய்து விட்டு வெளி யில் வந்தாள் பவித்ரா.

நிலைப்படியருகே வந்ததும்... அவளுக்குக் கட்டுக் கொள்ள முடியாத துக்கம்... கண்ணீராக கன்னங்களில் வாய்க்கால் போட்டுக் கொண்டு வழிந்தோடியது.

# 17

தீபு அந்த பங்களாவுக்குள் நுழைந்ததுமே.... மீனாட்சியின் அராஜகம் அதிகரித்து விட்டிருந்தது.

சுந்தரும், சொக்கலிங்கமும் இல்லாத தருணங்களில்.. அவள் மருமகளை வறுத்தெடுத்து விட்டாள்.

வீட்டிற்குப் பொறுப்பான பணிவான பாசமான மருமகள் வந்ததும்... சொக்கலிங்கத்திற்கு தெம்பு கூடி விட்டிருந்தது.

வீட்டோட சிலகாலம் இருமியபடி முடங்கிக் கிடந்தவர்.... மெல்ல வெளியில் நடமாட ஆரம்பித்து விட்டிருந்தார்.

நான்கு மணி நேரத்திற்கு ஒருமுறை... துளிசி கஷாயம் சுக்கு, மிளகு, திப்பிலி, லேகியம், மிளகுத்தூள் தூவிய தூதுவளைக் கீரை சூப்... என்று மாற்றி மாற்றிக் கொண்டு வந்து கொடுத்து... அவரைப் பக்குவமாய் பவித்ரா கவனித்து வந்ததில்.... இருமலும் சளியும் ஏகத்திற்கு மட்டுப்பட்டிருந்தது.

மீனாட்சியை கவனித்துக் கொள்ள எந்த ஒரு நர்ஸும் தேவையில்லை என்ற முடிவுக்கு அவர் வந்து விட்டிருந்தார்.

''பவித்ரா! உன்னோட அருமையை அவ புரிஞ்சுக்கணும். பகல்லேயும் நீயே பார்த்துக்கோ... உனக்கு வேலைப்பளு அதிகம் தான்...''



''உன் அன்புக்கும் சேவைக்கும் முன்னாடி.. அவளோட அகம்பாவமும் ஆணவமும் விரைவில் காணாம போயிடும்னு எனக்குள்ளே ஒரு நம்பிக்கை!

''உனக்கு இதிலே கஷ்டமா இருந்தா... நர்ஸை வரச் சொல்லிடறேன்.''

''இல்லல்ல மாமா! எனக்கு எந்தக் கஷ்டமும் இல்ல... நீங்க முடிவெடுத்தா சரியாத்தான் இருக்கும் மாமா'' என்று அவளும் சம்மதித்திருந்தாள்.

அவள் வந்த மறுநாளே... அவளிடம் கொத்துச் சாவியைக் கொடுத்தான் சுந்தர்.

வெகு தயக்கமாய்த் தான் வாங்கினாள்.

''அத்தே ஹாஸ்பிடல்லே அட்மிட் ஆகியிருக்காங்க. மாமாவும் அங்கே தானிருக்காரு... நைட்லே நான் அங்க போயிடுவேன்.

''கல்யாணத்துக்காக லாக்கர்லே இருந்து எடுத்துட்டு வந்த நகைங்க இன்னும் வீட்ல தானிருக்கு... அது ரிஸ்க்? நகைகள் எல்லாத்தையும் லாக்கர்லே வச்சுட்டா... நிம்மதியா இருக்கலாம் இல்லியா?''

பரம்பரை நகைகள், வைர நகைகள் அடங்கிய பெட்டியை சுந்தரிடம் கொடுத்து லாக்கரில் வைக்கச் சொல்லியிருந்தாள் பவித்ரா.

அன்று மாலை வீடு திரும்பியிருந்த சொக்கலிங்கம் அவளைத் தனியாக அழைத்தார்.

''சுந்தர்கிட்டே நகைகள் எல்லாத்தையும் கொடுத்து லாக்கர்லே வைக்கச் சொன்னியாமே?'' என்று அவர்

மெல்லிய குரலில் கேட்டதும்.. அவளுக்கு திக்கென்றிருந்தது.

''ஆ... ஆமா மாமா! காலம் கெட்டுக் கிடக்கு. எங்கே பார்த்தாலும் நகைத் திருட்டு நடக்குதேன்னு.. ஒரு பயம்!

''என்ன மாமா? அதுலே ஏதாச்சும் பிரச்சினையா?''

''நீ இந்த வீட்டு மருமகள். இந்த வீட்டை நிர்வகிக்கிற உனக்கு.. இன்னொரு முக்கியமான சங்கதியைப் பத்தி சொல்ல வேண்டியது என் கடமை! அதான் தனியா கூப்பிட்டேன்.''

''சொல்லுங்க மாமா''

மீனாட்சியின் அறைக்குப் பக்கத்திலிருந்த அறையில் இருந்த பிரமாண்டமான இரும்பு பீரோவைத் திறந்து.. சிறு டிராயரை இழுத்தார்.

கைக்கு அடக்கமான அழகான பேழையை வெளியில் எடுத்தார். அதைத் திறந்ததும்.. கட்டை விரல் சைஸில் மரகதப் பச்சை நிறத்தில் ஒளிர்ந்த காமாட்சி அம்மன் சிலையைக் கண்டதும்.. பவித்ராவின் விழிகள் வியப்பால் விரிந்தன.

''பூஜையறையில் வைக்காம இந்த அம்மன் சிலையைக் இங்க வச்சிருக்கீங்களே மாமா? என்ன காரணம்?'' ஆவலாய் கேட்டாள்.

''அம்மாடி! இது பரம்பரை பரம்பரையா வந்த மரகதச் சிலை... பல கோடி பெறுமானமுள்ளது. பூஜையறையில் வச்சா... காணாம போயிடுமே? அதான்...



''ஒவ்வொரு மாதாந்திர வெள்ளிக்கும், நவ ராத்திரிக்கும், பவுர்ணமிக்கும் இதை வெளியில எடுத்து பூஜை பண்ணிட்டு பத்திரமா மறுபடியும் இதுலே வச்சுப் பூட்டிடுவோம்.

''இதை கவனமா உன் சந்ததிக்கும் பாதுகாத்துக் கொடுக்க வேண்டியது உன் கடமை... சரியா?''

''ச... சரிங்க மாமா! இவ்ளோ விலை மதிப்புள்ளதை வீட்டுலே ஏன் வச்சுக்கணும்? இதையும் லாக்கர்லே வச்சுடலாம் இல்லியா?''

''இது விலை மதிப்புள்ளது மட்டுமில்ல... சக்தி வாய்ந்ததும் கூட.. வீட்டுலே இருந்தா நல்லதுன்னு ஒரு ஐதீகம்.. அதான்.''

''ஓ...சரிங்க மாமா! நேரமாச்சு.. நான் ஹாஸ்பிடலுக்குப் போகணும். கொத்துச்சாவியை கார்த்தால வந்து வாங்கிக்கிறேன்.. ஜாக்கிரதையா பூட்டுங்க மாமா!'' என்று பரபரப்பாய் விரைந்தாள்.

அன்றிலிருந்து அவள் இடுப்பில் கொத்துச்சாவியை சொருகிக் கொண்டு தான் வீட்டை நிர்வகித்துக் கொண்டிருந்தாள்.

தீபுவுக்கு அவளையும் அவளது இடுப்பில் தொங்கிய கொத்துச்சாவியையும் கண்டு... திகு திகுவென்று எரிந்தது.

மீனாட்சிக்கு எதிரில் சேரில் ஹாயாக அமர்ந்து கொண்டு நகத்தைக் கடித்தபடி சினிமாச் செய்திகளை வாசித்தபடி,

''பவித்ரா! எனக்கு வெஜிடபிள் சூப் வேணும்.. ரெண்டு மணி நேரம் கழித்து சாத்துக்குடி ஜூஸ் வேணும்'' என்று வேலைக்காரியைப் போல் ஏவிக் கொண்டிருந்தாள்.

தனிமையில் தன்னை மணிக்கணக்கில் மாமியார் வசை பாடினாலும்.. அதைப் பொறுத்துக் கொள்ளத் தயாராய் இருந்தாள் பவித்ரா.

ஆனால் மூன்றாம் மனுஷியான தீபுவை அருகில் வைத்துக் கொண்டு அவளைத் திட்டித் தீர்க்கும் போது.. அவமானம் பிடுங்கித் தின்றது.

அதை அவளால் தாங்கிக் கொள்ளவே முடிய வில்லை.

சுந்தருக்கே பொறுக்க முடியாமல் அன்று மாலையில் கேட்டுவிட்டான்.

''என்ன பவி இது? அந்த தீபு வந்து ரெண்டு வாரங் களுக்கு மேலாகப் போகுது. ஒரேயடியா இங்கேயே டேரா போட்டுட்டா.

''எப்போ போகப் போறாளாம்? வயசுப் பொண்ணு இங்க வந்து தங்கியிருக்கிறது நல்லவா இருக்கு?

''நீ இந்த வீட்டுக்கு எஜமானி! என்னோட மனைவி. அவ அம்மாவோட ரூமுல உட்கார்ந்துகிட்டு... உன்னை ஏவிக்கிட்டிருக்காளே? என்ன தைரியம்? என்ன திமிர் அவளுக்கு?

''நீ ஒண்ணும் சொல்லாட்டியும் என்னால எல்லாத் தையும் புரிஞ்சுக்க முடியும்? அம்மா கிட்டேயே இருந்து, உன்னை இழுத்து வச்சு வீட்டுலே கலகம் பண் ணிட்டிருக்காளே?



''இதுக்கு மேலேயும் என்னால இந்த அக்கிரமத்தைப் பொறுத்துட்டிருக்க முடியாது..

''அவ பார்க்கிற பார்வையும் அவ பண்ணிக்கிற டிரஸ் ஸும்.. சேச்சே! கண்றாவியா இருக்கு...

''இந்த வீட்டை விட்டு நீ எப்போ தொலையப் போறேன்னு நேர்லேயே கேட்டுடப் போறேன்..''

''ஐயோ.. என்ன சுந்தர்? கொஞ்சம் பொறுமையா இருங்க.. நேத்தைக்கு டாக்டர் அத்தையை செக்கப் பண்ணிட்டு.. எலும்பு நல்லா கூடி வருது.. விரைவில் நடக்க முயற்சிக்கலாம்னு சொன்னாரு...

''அத்தை குணமாகி நடமாடணும். அதான் நமக்கு முக்கியம். இப்போ நீங்க தீபுவை விரட்டினா.. அத்தைக்கு மன உளைச்சல் உண்டாகும். வீண் பிரச்சினை வேண்டாம். தீபு இருந்தா... அத்தை சந்தோஷமா இருக்காங்க.. இருந்துட்டுப் போகட்டுமே? அதை ஏன் கெடுக்கறீங்க?''

''நீ ரொம்பவே விட்டுக் கொடுத்துப் போறே பவி.''

''விட்டுக் கொடுத்தவங்க. என்னிக்கும் கெட்டுப் போனதா சரித்திரம் இல்ல சுந்தர்.''

''வியாபார விஷயமா ஒரு டீலர் கிட்ட பேச வேண்டி யிருக்கு. மதுரைக்கு நான் போயாகணும். புது கம்பெனி தொடங்கறதுக்கான ஆயத்தங்கள் பண்ண வேண்டி யிருக்கு.

''திரும்பி வர மூணு, நாலு நாளாகும். ஆனா... எனக்கு உன்னை விட்டுப் போகவே மனசில்லை பவி.''

''யாரும் உங்க மனைவியைக் கடிச்சு முழுங்கிட மாட்டாங்க.... நிம்மதியாப் போயிட்டு வாங்க.. உங்களுக்குத் தேவையான உடைகளை சூட்கேஸுலே எடுத்து வச்சுடட்டுமா?'' சூட்கேஸில் அவனுக்குத் தேவைப்பட்டவற்றை அடுக்கி வைத்து விட்டு நிமிர்ந்தாள்.

''சதா உன் முகம் சோகமாகவே இருக்கு... கொஞ்ச நேரம் உட்கார்ந்து நீ சிரிச்சுப் பேசிட்டுப் போனா என்னவாம்? எனக்கு இன்னிக்கு நைட்டாவது நிம்மதியாத் தூக்கம் வரும். இல்லையா?'' முந்தானையைப் பற்றி இழுத்தான்.

''வரும் தான்... தனிமையில் உங்க கூட சிரிச்சுப் பேசினா... அது நம்ம வைராக்கியத்துக்கு வேட்டு வச்சுடுமோன்னு பயமா இருக்கே? காலம் வரும். காத்திருங்க.

''ஐ லவ் யூ சுந்தர்! அது வரைக்கும் சேட்டை பண்ணாம சமர்த்தா இருக்கணும். சரியா?'' 'களுக்' என்று சிரித்தபடி தன்னை விடுவித்துக் கொண்டு வெளியேறியவளைக் கண்டு.. மெல்ல தனக்குள் சிரித்துக் கொண்டான்.

## 18

அன்றிரவே பாலாமணி 'பெரிய குளத்திலிருந்து' வந்து விட்டிருந்தாள். அவளைக் கண்டதுமே பவித்ரா துணுக்குற்றுப் போனாள்.

மறுநாள் காலை ஒன்பது மணி வாக்கில் சுந்தர் காரில் கிளம்பிப் போனதும்.. அன்றிரவு ஏழு, மணிக்கு சொக்கலிங்கம் சிறு பேக்குடன் தயாராகி வந்து நின்றார்.

''நாளைக்கு சித்ரா பௌர்ணமி! வருஷா வருஷம் நான் திருவண்ணாமலைக்குப் போறது வழக்கம்.. கிரிவலத்தை முடிச்சுட்டு ரமண மகரிஷி ஆசிரமத்துல மூணு நாள் தங்கிட்டுத் தான் வருவேன்.

''சுந்தரும் மதுரைக்குக் கிளம்பிட்டான். நீ ஜாக்கிரதையா இருந்துக்கோ பவித்ரா! நா வரட்டுமா? இந்த பாலாமணி வேற வந்து தொலைஞ்சிருக்கா...

''என் மனசுக்கு சங்கடமா இருக்கு... போறதா? வேண்டாமான்னு யோசிச்சுட்டிருக்கேன்.''

''எதைப் பத்தியும் கவலைப்படாம நிம்மதியா போயிட்டு வாங்க மாமா! வருஷா வருஷம் கிரிவலத்துக்குப் போறவர் நீங்க.. இந்த வருஷமும் தடைபட வேணாம்... அத்தையை நான் கவனிச்சுக்கிறேன்.''

அவர் கிளம்பிச் சென்றதும்.. அடுத்த கால் மணி நேரத்தில்...

''ஏய் பவித்ரா! இங்கே வாடி'' உச்சஸ்தாயியில் கத்தினாள் மீனாட்சி.

விழுந்தடிக்காத குறையாக மூச்சிரைக்க ஓடிப் போய் நின்றாள் பவித்ரா.

''எ... என்னத்தே?''

''மொதல்லே கொத்துச் சாவியை எடுத்துக் குடுடி... இடுப்புல சாவியை சொருகிட்டு ராஜ்ஜியம் பண்ணிட்டிருக்கியா?''

பாலாமணியையும் தீபுவையும் ஒரு பார்வை பார்த்து விட்டு மெல்ல கொத்துச்சாவியை நீட்டினாள்.

''தீபுவுக்கு பிறந்த நாள் வருதாம்... குழந்தைக்கு என்னால முடிஞ்சதை பரிசாத் தரணும்னு பிரியப்பட றேன்...

''சே! இப்படி என்னைப் படுக்க வைச்சுட்டியே?

''தீபு செல்லம்! இந்தா சாவியைப் பிடி! பக்கத்துல அறைக்குப் போ... அதுல இருக்கிற இரும்பு பீரோவில மேல் தட்டுல பத்தாயிரம் ரூபா பணமிருக்கும். எடுத் துக்கோ...

''அதுக்குப் பக்கத்துலேயே ஒரு சவரன்லே தங்க நாணயம் வச்சிருப்பேன். அதையும் எடுத்துட்டு வா!

''அந்தப் பணத்துல பிடிச்ச புடவையா வாங்கிக்கோ.. உன் பிறந்த நாள் பரிசா தங்க நாணயத்தை வச் சுக்கோ.''

''தேங்க் யூ ஸோ மச் அத்தே'' பருந்து இரையை லபக் என்று கொத்துவது போல்... சாவியைப் பிடுங்காத குறையாக வாங்கிக் கொண்டு ஓடினாள் தீபு.

அவளது பின்னாலேயே பாலாமணியும் விரைந் தாள்.

''அத்தே... மாமாவும் அவரும் வீட்டுலே இல்லாத நேரத்துல கொத்துச்சாவியை அவங்க கையில கொடுத் துட்டீங்களே?

''விலை மதிக்க முடியாத பொருள் திருடு போயிட்டா என்ன பண்றது?''



தன்னை மீறிய கலவரத்தில் கேட்டுவிட்டாள் பவித்ரா.

''அவங்களை யாருன்னு நெனச்சே? நம்ம வீட்டுல திருட வந்தவங்கன்னு சொல்றியா? அவங்களை பஞ் சத்துக்கு அடிபட்டவங்கன்னு நெனச்சுட்டியா?

''அவங்க வசதியானவங்க தெரியுமா? உன்னை மாதிரி அன்னக் காவடிங்களுக்குத் தான்.. திருடணும்னு புத்தி போகும்.

''என் உறவுக்காரங்களைப் பத்தி இவ்ளோ மட்டமா பேசறியே? உனக்கு என்ன நெஞ்சழுத்தம் இருக் கணும்?''

''ஸாரி அத்தே... என்னை மன்னிச்சுடுங்க'' என்று அவள் மன்னிப்பு கேட்ட பின்பும் கூட.. ஆத்திரம் தீராமல் வசை பாடிக் கொண்டே இருந்தாள் மீனாட்சி.

பாலாமணியும் தீபுவும் வியர்க்க விறுவிறுக்க ஓடி வந்தனர்.

''அண்ணி! பீரோ முழுக்க தேடிப் பார்த்துட்டோம். பத்தாயிரம் ரூபாயைக் காணோம். தங்க நாணயம் மட்டும் கிடந்துச்சு.''

''நா நெனச்சது சரியாப் போச்சு பாலாமணி! அதை இவ தான் திருடியிருப்பா... பணத்தைத் திருடி யார் மூலமாவது அத்தை வீட்டுலே சேர்த்திருப்பா... இனி அது அப்படியே இவ அப்பன் கைக்குப் போய் சேர்ந் திடும்..

''என் சொத்தைப் பகல் கொள்ளை அடிக்கத்தானே இவ அடியெடுத்து வச்சிருக்கா?''

''ஐயோ அத்தே! இது அபாண்டம்... நான் பணத்தைப் பார்க்கவே இல்லத்தே... என்னை நம்புங்க.. நான் வணங்கற அம்மன் மேல சத்தியமா சொல்றேன்.. நான் திருடலை அத்தே'' தேம்பினாள் பவித்ரா.

''அழுது மாய்மாலம் பண்ணி என் மனசைக் கரைக்கலாம்னு பார்க்கிறியா? போயிடு.. இந்த வீட்டை விட்டு இப்பவே போயிடு.. நீ இருக்கிற வரைக்கும் எனக்கு நிம்மதியில்ல..

''நீ இருந்தா.. எனக்கு என்னிக்கும் குணமாகாது... போயிடு...''

''போறேன் அத்தே... மாமாவும் அவரும் வந்ததும் சொல்லிட்டுக் கிளம்பறேன்.. யாருமில்லாத நேரத்துல உங்களைத் தனியா விட்டுட்டுப் போக.. எனக்கு மனசில்லை அத்தே..'' கையெடுத்துக் கும்பிட்டாள் பவித்ரா.

''என் மேல அக்கறை இருக்கற மாதிரி நடிக்கிறியாடி? உண்மையான அக்கறை இருந்தா... இப்பவே போயிடு...

''திரும்ப வந்துடலாம்னு மட்டும் கனவு காணாதே...

''தீபு தான் இந்த வீட்டு மருமகள்... மருந்தைக் குடிச்சு செத்துடுவேன்னு பிளாக் மெயில் பண்ணியாவது.. சுந்தர் மனசை மாத்தி இவளைக் கட்டி வச்சுடுவேன். கிளம்பு சீக்கிரம்.''

கஷ்ட ஜீவனத்தில் வாழ்ந்தவள் தான்! ஆனால் இப்படியொரு அவமானத்தைத் தனது வாழ்நாளில் அவள் பட்டதே இல்லை.



புடவைத் தலைப்பால் வாயை மூடி குமுறி வந்த அழுகையை அடக்கியபடி.. வீட்டை விட்டு வெளியேறினாள் பவித்ரா.

அவள் வீட்டை விட்டு வெளியேறியதும் மீனாட்சிக்கு பெருத்த நிம்மதியாய் இருந்தது. நிம்மதி பெருமூச்சு விட்ட போது... அடிவயிற்றைக் கலக்குவது போலிருந்தது.

''தீபு! எனக்கு அடி வயித்தைக் கலக்குதும்மா.. கொஞ்சம் அந்த 'பெட் பானை' எடுத்து வைக்கிறியா?''

''என்னது? 'பெட் பானை' நான் எடுத்து வைக்கணுமா? நான் படிச்ச படிப்பென்ன? என்னோட தகுதி என்னன்னு உங்களுக்குத் தெரியுமா?

''இதெல்லாம் வேற யார் கிட்டேயாவது வச்சுக்கோங்க. என்னால முடியாதுப்பா.. நான் ரொம்ப சுத்தம் பார்க்கிறவ..'' படபடவென்று முகத்தை சுளித்தபடி பொரிந்து தள்ளி விட்டாள் தீபு.

'இவளைப் போயா மருமகளா ஆக்க வேண்டும் என்று துடித்தேன்?

பவித்ராவும் படித்த பெண் தானே? இத்தனை நாட்களாய் முகம் கோணாமல் பணிவிடை செய்தவளை எப்படியெல்லாம் நோகடித்தேன்.

அவள் வீட்டை விட்டு வெளியேறி ஒரு நாள் கூட ஆகவில்லை. எனக்கு இந்த கதியாகி விட்டதே?'

ஐயோ வயிற்றைக் கலக்குகிறதே? பாலாமணியைக் கெஞ்ச வேண்டியதுதான்.'

''பாலாமணி.. எனக்கு முடியலை. நீயாச்சும்...''

''நிறுத்து மீனாட்சி! நான் என்ன உன் வீட்டு ஆயாவா? உன் வீட்டு வேலைக்காரங்களைக் கூப்பிட்டுப் பாரு...

''யாரையும் காணோம்.. எங்க போய் தொலைஞ்சாங்களோ தெரியலை...''

'எப்படி குழைந்து பேசுபவள்.. இன்று எப்படி எடுத்தெறிந்து பேசுகிறாள். இருவரும் நிர்தாட்சணியமாய் அறையை விட்டுப் போய் விட்டார்களே?'

உடல் உபாதையிலும் அவஸ்தையிலும் அழுகை வந்தது மீனாட்சிக்கு.

தன் அசுத்தத்தின் மீது விழுந்து கிடக்க வேண்டிய அவலம் வந்து விட்டதை எண்ணி, தேம்பித் தேம்பி அழுதாள்.

''பவி! பவிம்மா.. நான்தான் பாவி! உன்னை எப்படிக் கொடுமைப்படுத்தினேன்.. இப்போ அனுபவிக்கிறேன்.''

உள்ளூர புலம்பினாள்.

'பக்கத்து அறையிலிருந்து இரும்பு பீரோவைத் திறக்கும் போது ஒரு கிரீச் சத்தம் வினோதமாக வருமே?

சத்தம் கேட்கிறது.. அம்மாவும் மகளும் சாவிக் கொத்து இருக்கும் துணிவில் பீரோவைத் திறக்கிறார்களே?' மீனாட்சி காதைத் தீட்டிக் கொண்டாள்.

''அன்னிக்கு மீனாட்சி ரூமுலே எண்ணெயைக் கொட்டி அவ விழும்படி பண்ணிட்டு வந்தேன்னு நான் சொன்னப்போ... 'இதனால என்ன பிரயோஜனம் மம்மி'ன்னு கேட்டியே?



''இப்ப பார்த்தியா? அவ இப்படிக் கிடக்கிறதால... கொத்துச்சாவி நம்ம கைக்கு வந்திருக்கு.. முதல்லே அந்த மரகதச் சிலையை எடு...'' பாலாமணி மகளிடம் சிரித்தபடி பேசுவது தெளிவாகவே கேட்டது.

''ரொம்ப காலமா இதை அடையணும்னு எனக்கொரு கண்! பல கோடி பெறும் தெரியுமா? யாரும் நம்மைக் கண்டு பிடிக்க முடியாதபடி.. கண் காணாத ஊருக்குப் போயிட வேண்டியது தான்.''

'அடப்பாவி! உன்னால் தானா எனக்கு இந்த நிலைமை வந்தது? என் மருமகளைப் போய் நான் தூற்றினேனே?'

ஐயோ! பரம்பரையாக வந்த மரகதச் சிலையைத் தாயும் மகளுமாய் கொள்ளையடித்துப் போகிறார்களே?

சப்தம் போட்டு யாரையாவது அழைக்கலாமா? ஊகூம் கோபத்தில் இருவரும் என் மென்னியை முறித்துக் கொன்று விடத் தயங்க மாட்டார்கள் போலிருக்கிறதே?

அம்மா தாயே! அகிலாண்டேஸ்வரி! என் பரம்பரை சொத்தைக் காப்பாற்று.. நான் திருந்திட்டேன். என் மருமகளின் காலில் விழக் கூட நான் தயங்க மாட்டேன்...

காப்பாற்று தாயே!'

உள்ளூர அழுது புலம்பினாள் மீனாட்சி.

பீரோவை அவர்கள் அறைந்து சாத்தி விட்டு வெளியேறும் சப்தம் கேட்டதும்... மீனாட்சிக்கு சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது.

# 19

''அத்தே... அத்தே! கொஞ்சம் பால் சாப்பிட நீங்களா? பரிவான குரலைக் கேட்டு மெல்ல விழிகளை மலர்த்தினாள் மீனாட்சி.

''பவி... என்னை மன்னிச்சுக்கோம்மா.. நான்... நான்'' திணறினாள். புதிய படுக்கை விரிப்பில் சுத்தமாய் தான் படுக்க வைப்பட்டிருப்பதை உணர்ந்தாள்.

தலைமாட்டில் சொக்கலிங்கம்! கால்மாட்டில் சுந்தர்!

''என்ன ஆச்சரியமா இருக்கா மீனாட்சி? நீ பவியை வீட்டை விட்டு விரட்டினதும்.. அவ தேவகி வீட்டுக்குப் போயி... எனக்கு போன் பண்ணி விவரத்தை சொன்னா...

''பாலாமணி எதுக்கும் துணிஞ்சவள்னு எனக்குத் தெரியும். காரைத் திருப்பிட்டேன். சுந்தருக்கு போன் செய்தேன். எதிர்பாராத விதமா டீலிங் சீக்கிரமா முடிஞ்சதால.. நானும் மதுரையிலிருந்து புறப்பட்டுட்டேன். கிட்டத்தட்ட உங்களை நெருங்கிட்டேன்'னு சொன்னான்.

''ரெண்டு பேரும் சேர்ந்து வருவோம்னு... அம்மாவும் பொண்ணும் எதிர்பார்க்கலை. வெலவெலத்துப் போயிட்டாங்க...

''சுந்தருக்கு கோபம் வந்து தீபுவை ரெண்டு அறை விட்டான். திருடின மரகதச் சிலையைக் கொடுத்துட்டா.. அது போலிச் சிலை தான்.. ஒரிஜினலை பவித்ரா எச்சரிச்ச போதே லாக்கர்லே வச்சுட்டேன். அம்மாவும் பொண்ணும் இனிமே இங்க தலை வச்சுப் படுக்க மாட்டாங்க.



''பத்தாயிரம் ரூபாயை நான் தான் செலவுக்கு எடுத்தேன். இவ மேல பழி போட்டுட்டியே?''

''மன்னிக்கணும் பவி! நீ என் மருமக இல்ல... மக! அதுக்கும் மேல.. என் குல தெய்வம்.. நீ சுந்தர் கூட வாழ்வாங்கு வாழணும்... பேரன் பேத்திகளை நான் எடுத்து வளர்க்கணும்.. நீ நிறைஞ்ச வாழ்க்கை வாழறதை... நான் கண் குளிரப் பார்க்கணும்'' பவித்ராவின் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''உடனே ரெண்டு பேரும் தேனிலவுக்குப் புறப்படுங்க என் வார்த்தையை மீறப்படாது'' வற்புறுத்தினாள்.

* * *

மாமியார் பரிசாகக் கொடுத்த ஊதா வண்ணப்பட்டுச் சேலையைக் கட்டிக் கொண்டு.... மாமியாரின் நகைகளை அணிந்து கொண்டு அழகே உருவாக பால் செம்புடன் கணவனது அறைக்குள் நுழைந்தாள் பவித்ரா.

''வாரே வா! பவி... நீ இன்னிக்கு எவ்ளோ அழகா இருக்கே தெரியுமா? அம்மாவை உன் வழிக்கே கொண்டு வந்துட்டியே? கெட்டிக்காரி தான்!

''தேனிலவுக்கு எங்கேயும் போக வேண்டாம்னு மறுத்துட்டியே பவி'' செல்லமாய் அவளது கன்னத்தைக் கிள்ளினான்.

''அத்தையை விட்டுட்டு நான் எங்கேயும் போகத் தயாராயில்லை... இப்ப மட்டும் என்னவாம்? அதோ... பவுர்ணமி நிலா அழகா குளிர்ச்சியா தேனை சிந்திட் டுத்தானே இருக்கு?''

''அட... ஆமா இல்ல? ஐ லவ் யூ ஸோ மச் பவி'' ஆசையாய் அவளை ஆரத் தழுவினான் சுந்தர்.

நிலா வெட்கத்துடன் தன் முகத்தை மேகத் திரை கொண்டு மூடிக் கொண்டது.